


இசை ஆரம்
இதழ் - 01
தை - பங்குனி - 2020 -

# இசை ஆரம்

இதழ் - 01

தை - பங்குனி 2020

கலையின் சங்கமம் தேடலின் ஆரம்பம்



"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADI'APATHAM ROAD
KOKUVIL WEST

# இசை ஆரம்
## கலையின் சங்கமம் தேடலின் ஆரம்பம்

இதழ் – 01 தை – பங்குனி 2020

**பிரதம ஆசிரியர்**
ஹாயத்திரி சண்முகநாதன்

**வெளியீடு**
ஸ்ரீஸ்வர ஞானம் கலாலயம்,
296A நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

**தொடர்பு**
ஹாயத்திரி சண்முகநாதன்
ஆசிரியர், இசை ஆரம்,
296A நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.
0769216854

**மின்னஞ்சல்**
Swaraganam@gmail.com

**ISSN No.**
2719-2148

**அச்சுப்பதிப்பு**
ஸ்ரீ மாருதி பிறிண்டேர்ஸ்,
555, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## உள்ளடக்கம்

1. இசை வாழ்த்து
2. ஆசிரியர் பக்கம்
3. இனக்குழும அழகியல்
4. மிருதங்கமும் கர்நாடக சங்கீதமும்
5. கலைஞர்களை, கலைப் படைப்புகளை அளவிடும் அளவீடுகள்
6. இசையும் மனிதனும்
7. வலி வடக்கு இசைப் பாரம்பரியத்தில் நாட்டார் இலக்கியம்
8. Pancha Dasa Gamakas
9. கலாபூஷணம், சிற்பக் கலாநிதி. செல்லையா சிவப்பிரகாசம்
10. மண்ணுக்குப் புகழ்சேர்க்கும் மாங்கை
11. இசைப்பேரரசி M. S. சுப்புலட்சுமியின் இசைப்பயனம்
12. நாட்டிய மரபில் நிருத்தம்
13. யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட வகையில் நாட்டுக்கூத்து கலையின் தோற்றமும் வளர்ச்சியும்
14. மனமும் மந்திரங்களும் - காயத்ரி மந்திரம்!!
15. இசையில் யோகப் பயிற்சியின் பங்களிப்பு
16. ஆரபி இராகம் - ஓர் அறிமுகம்

# இசை வாழ்த்து

வாழிய கலைகள் வாழிய எழிலிசை
வளம்பெற்று வளம்பெற்று வாழியவே
வாழிய உலகு வழங்குநாள் வரையும்
வாழிய வாழியவே!

(வாழிய கலைகள்...)

இசையொடு நடனமும் ஏற்றமுற் றோங்குக
இணைந்தத னோடே ஓவியமும்
திசையெட்டும் பரவிச் சீர்பெற வேண்டும்
தொண்டவை வளர்ந்திடச் செய்வோம்

(வாழிய கலைகள் ...)

பன்னூ றாண்டுகள் பாரினில் நிலைபெறு
வண்ணநல் ஓவியம் வாழியவே
பண்ணொடு பாடிடும் பாடலும் ஆடலும்
பாரெங்கும் பரவியே வாழியவே

(வாழிய கலைகள்...)

கன்னித் தமிழின் கோன்மையைப் போற்றக்
காசினி யெங்கணும் ஓங்குகவே
எந்நாளும் இசைகலை ஓவியம் வாழி
இறையருள் கொண்டுமே வாழியவே!

(வாழிய கலைகள்...)

**பூவாக்கம்**

காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANA[illegible]AH
RETIRED VICE PRINCIPAL
ARIYAPATHAM ROAD
KOKUVIL WEST

# ஆசிரியர் பக்கம்

அன்பார்ந்த வாசகர்களே!
வணக்கம்!

சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்

- மகாகவி பாரதியார்.

எனும் மகாகவி பாரதியின் கூற்றுக்கிணங்க ஸ்ரீ ஸ்வர ஞான கலாலயத்தினூடாக கலைக்கான தனியானதொரு களத்தினை அமைக்கும் பொருட்டு "இசை ஆரம்" எனும் சஞ்சிகையின் வாயிலாக உங்களை சந்திப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

கலைகள் மிகவும் ஆற்றலுடையவை அவற்றின் சிறப்பு அளவிட்டுக் காண்பதற்கு அரியது அவை உலக இயல்பையும், மனித உள்ளத்தின் இயல்பையும் வெளிப்படுத்திக் காட்டும் தன்மையைக் கொண்டனவாகும் கலைஞனின் உள்ளத்தில் இலங்கும் உலகத்தை கலைகள் கண்ணாடி போல் தெள்ளத் தெளிவாக வெளிப்படுத்திக் காட்டுகின்றன கலையின் வாயிலாக மனிதன் வெளிப்படுத்திக் கொள்வது தன் செய்திகளையோ, நோக்கங்களையோ அல்ல மனிதன் கலைகளின் வழியாகத் தன்னைத் தானே வெளிப்படுத்திக் கொள்கிறான் கலைஞனின் மனவெண்ணங்கள் உருவாக்கிய உலகம் கலைகளின் வாயிலாக வெளியிடப் படுகின்றது என ரவிந்திரநாத் தாகூர் மிகத் தெளிவாகக் கூறி உள்ளார்

கலையின் சிறப்பினை சுவைத்து மகிழ்வதிலும் பிறருடன் அனுபவிப்பதிலும் இசையானது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது அந்த வகையில் இசை ஆரத்தின் கட்டுரைகள் ஆய்வாளர்களுக்கு, கலைஞர்களுக்கு, மாணவர்களுக்கு பயனுள்ள ஓர் இதழாக அமையும் என்று கூறிக் கொள்கின்றேன்.

நன்றி

அன்புடன்
ஹாயத்திரி சண்முகநாதன்

# இனக்குழும அழகியல்

- பேராசிரியர் சபா ஜெயராசா

இனக்குழும அழகியல் (ETHNOAESTHETICS) என்பது பின்காலனியச் சூழலில் அதிக முக்கியத்துவம் பெற்றுவரும் ஓர் எண்ணக்கருவாகும். ஒருவரின் அடையாளத்தை அவரது தேசிய இனத்துடன் தொடர்புபடுத்திப் பார்த்தல் பின் காலனிய நிலைவரங்களுள் ஒன்றாக அமைந்துவருகின்றது. அவ்வாறே அழகின தன்மையை இனக்குழுமத்துடன் தொடர்பு படுத்தி ஆராய்தல் இனக்குழும அழகியல் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

தொன்மங்கள், சடங்குகள், இசை, ஆடல், சிற்பம், ஓவியம் முதலான ஊடகங்கள் வாயிலாக இனக்குழும அழகியல் வெளிப்பாடு கொள்கின்றது. அவற்றின் பின்புலத்தில் கலைகளை இனக்குழுமப் பின்புலத்தில் ஆராயும் செயற்பாடு பின் காலனியச் சூழலில் வளர்ச்சி கொள்ளத் தொடங்கியுள்ளது.

கலைப் படைப்பை உருவாக்குவோர் தனியாள் என்பதையும் கடந்து தாம் ஒரு பெரிய அமைப்பின் கூறாகவுள்ளனர் என்ற சிந்தனை மேலோங்கும் பொழுது, இனத்துவ அடையாளம், பிரதேச அடையாளம், வர்க்க அடையாளம் முதலியவை படைப்பில் உள்ளமைந்து கொள்ளும் நிலை ஏற்படுகின்றது.

இனக்குழும இயல்புகளை அடியொற்றிய உற்றறி ஆக்கத் தெறியை அடிப்படையாகக் கொண்டு கலை, அழகு, சுவை என்ற நிலைகளில் நோக்கல் வளர்ந்து செல்கின்றது.

அரசியல் விடுதலை மற்றும் காலனித்துவ நீக்கம் ஆகியவற்றின் பின் புலத்திடல் தேசிய குழுமங்கள் மீண்டெழும் நிலைவிசை கொண்டு வருகின்றது. அந்நிலையில் அழகியல் வடிவங்கள் வழியாக அவற்றின் இயல்பைத் தரிசிக்கும் தோற்றப்பாடு மேற்கிளம்பியுள்ளது.

இந்திய மரபில் மேட்டுக் குடியினர் அழகை உருவாக்குபவர்களாக அன்றி அழகைச் சுவைப்பவர்களாகவே இருந்து வந்துள்ளனர். அவர்கள் சுவைப்புக்கு உரிய வாறே செவ்வியற் கலைகள் உருவாக்கப்பட்டு வந்துள்ளன. இசையும் ஆடலும், பாடலும் அரங்கும் அவர்களின் தேவைக்கும் சுவைப்புக்கும் ஏற்றவாறு உருவாக்கப்பட்ட பின்புலத்தில் அழகு பற்றிய “இரசக் கோட்பாடு” உருவாக்கம் பெற்றது.

காதல், நகைச்சுவை, இரக்கம், கோபம், வீரம், அச்சம், வெறுப்பு, வியப்பு, சாந்தம்,

என்ற ஒன்பது இரசங்களில், சிருங்காரம் என்ற காதல் இரசத்துக்கு முன்னுரிமை கொடுக்கப்பட்டிருந்தமை மேட்டுக்குடியினரது தேவையை நிறைவு செய்வதாக இருந்தது.

இந்தியச் செவ்வியல் ஆடல்களிலும், ஓவியம், சிற்பம் முதலான வற்றிலும், இலக்கியங்களிலும் காதற் சுவையாக்கமே முன்னுரிமைபெற்றிருந்தது பரத நாட்டியம், கதக், மணிப்புரி, ஓடிசி, மோகினி முதலாம் செவ்வியல் ஆடல்களிற் காதற்சுவையே நடுநாயகம் பெற்றிருத்தல் குறிப்பிடத்தக்கது.

கயுராகோ, மற்றும் கொனர்க் சிற்பங்களில் காதற் சுவையே முதன்மை பெற்றிருத்தல் நோக்குதற்குரியது இலக்கிய நிலையில் காளிதாசரின் "சாகுந்தலம்" "மேகதூதம்" முதலானவற்றிலும் காதற் சுவைப் புனைவே மேலோங்கியுள்ளது. அதேவேளை விளிம்பு நிலையினரது சுவையில் வீரச்சுவை மேலோங்கியிருந்தது.

இந்தியப் பெருநிலம் பல்வேறு தேசிய இனக்குழுமங்களைக் கொண்டது. ஒவ்வோர் இனக்குழுமத்தினரதும் தனித்துவம் அவரவர்குரிய கலையாக்கத்தினால் வெளிப்பாடு கொண்டு மேலெழுந்துள்ளது.

ஒவ்வோர் இனக்குழுமமும் தத்தமக்குரிய தனித்துவமான மொழி, உறவு முறைகள், சடங்குகள், கலைகள், வாழ்விடம் முதலியவற்றைக் கொண்டிருக்கும். அத்தகைய பண்பாட்டுக்கோலங்களுக்கும் கலையாக்கங்களுக்குமுள்ள தொடர்புகள் இனக்குழும அழகியலிலே விரிவாக நோக்கப்படுகின்றன.

இனக்குழுமக் கலைகள் வாழ்விடங்களின் பெயராலும் அழைக்கப்படுதல் உண்டு. எடுத்துக்காட்டாக மணிப்புரிப் பிரதேசத்தில் வாழும் குழுமத்தினரின் பெயரால் மணிப்புரி ஆடல் அழைக்கப்படுகின்றது. அவர்களின் கிருஷ்ணபக்தி, ஆடலால் வெளிப்படுத்தப்படுகின்றது. அவர்களுடைய பண்பாட்டில் சதங்கை இடம் பெறாமையால், சதங்கை அணிந்து ஆடுவதில்லை. அந்த இனக்குழுமத்தினருக்குரிய இசைக் கருவிகளாகிய பங்க், டோலக், டோல், கஞ்யூரி ஆகிய வற்றையே அணிசேர் கருவிகளாகப்பயன் படுத்தி வருகின்றனர்.

இந்தியாவின் மிகத் தொன்மையான ஆடல்களுள் ஒன்றாகிய ஒடிசி, ஒரிஸ்ஸா இனக்குழுமத்தினரின் அழகியல் அடையாளமாகின்றது. அந்த மக்களுக்கே உரிய தொன்மையான ஆடலும் இசையும் தொடர்ந்து பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

தமிழர்களின் இனக் குழும அழகியலில் இசையும் பாடலும் சிறப்பார்ந்த இடத்தைப்

பெறுகின்றன. தமிழிசை ஆய்வுகள் அந்தத் தொடர்புகளைத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளன. இனக்குழும அடையாளம் நீண்ட வரலாற்றுத் தொடர்ச்சியுடன் இணைந்தது. அதனோடு இணைந்த அழகியலாக்கமும் நீண்ட வரலாற்றுடன் தொடர்புடையது. அத்தகைய ஆழம் நவீன உலக மயமாக்கற் சூழலிலும் நீடித்து நிற்கக்கூடிய வலிமையைக் கொடுத்துள்ளது.

இனக்குழும தேசியச்சிந்தனைகளின் வளர்ச்சியோடு அழகியல் உரையாடல்களும் ஆய்வுகளும் மேலோங்கத் தொடங்கியுள்ளன இனக்குழுமங்கள் நாடுகடந்து செல்லும் புலச்சிதறலை அனுபவிக்கும் பொழுது, அடையாளத்தை வலுப்படுத்தும் உளவியற் செயற்பாடுகள் மேலும் வலிமை பெறுதலை உலக நிலைவரங்கள் புலப்படுத்துகின்றன.

அந்தச் செயற்பாட்டில் துருவப்பாடும் (POLARISATION) நிகழ்ந்துள்ளது அடையாளத்தைப் புலப்படுத்தும் பல்வேறு அழகியல் வடிவங்கள் இருந்தாலும், ஓரிரு அடையாளங்களே மேலோங்கும் நிலை காணப்படுகின்றது. எடுத்துக்காட்டாக, தமிழர்கள் பராநாட்டியத்தைத் தெரிவு செய்திருத்தல் குறிப்பிடத்தக்கது. சமூக உளவியல் நோக்கில் அது விரிவான ஆய்வுக்குரியது.

இனக்குழும அழகியலில் காலனித்துவம் ஏற்படுத்தியதாக்கங்கள் விரிவாக நோக்கப்படுகின்றன. தேசிய இனங்கள் தமது அடையாளங்களை மீட்டெடுத்தல் வெளியரும்பத் தொடங்கின. அத்தகைய ஒரு பின்புலத்திலே தான் தமிழிசை பரதநாட்டியம் என்ற தேவரடியார் ஆடல் முதலியவை மீட்புக்கு உட்படுத்தப்பட்டன.

ஆங்கில மொழிவாயிலான அறிவுக்கு உட்பட்டவர்களே அத்தகைய மீட்பு நடவடிக்கைகளை முன்னெடுத்தனர். அவர்களின் செயற்பாடுகள் இனக்குழும அழகியலிலே பல மாற்றங்களை ஏற்படுத்தலாயின.

புராணக்கதைகளை உட் பொருளாகக் கொண்டு கோயில்களிலே ஆடப் பெற்ற பரதநாட்டியம் பொது மேடைகளிலும் அரங்குகளிலும் ஆடப்படும் முறைமைக்கு ஏற்றவாறு மாற்றியமைக்கப்பட்டது. பரதநாட்டியம் பற்றிய விளக்கங்களை ஆங்கில மொழியில் மேடையிலே கூறும் செயல் ஒன்றிணைக்கப்பட்டது. வர்த்தகமயப்படுத்தல் அல்லது சந்தைப் படுத்தல் உள்ளீடும் இடம் பெறத் தொடங்கியது. பணத்துக்கு அனுமதிச் சீட்டுக்களைப் பெற்று இசை மற்றும் ஆடல் நிகழ்ச்சிகளை வழங்கும் வணிகமயப்பாடும் வளர்ச்சியடையத் தொடங்கியது உலகமயச் சூழலிலும் எண்ணிமத் தொழில் நுட்பப் பின்புலத்திலும் கலைகள் விற்பனைப் பண்டங்கள் என்ற ஏற்றத்தைப் பெற்றுவருகின்றன.

தமிழரின் இனக்குழும அழகியலோடு தொடர்புபட்ட ஒரு முக்கியமான கலை வடிவம் நாட்டுக்கூத்து. கதைப் பொருள், ஆடை அணிகலன்கள், அணியிசைக் கருவிகள், சடங்குகளுடன் தொடர்புபடுத்தப்பட்டு ஆற்றுகையை மேற்கொள்ளல், பாடல், என்றவாறு கூத்துக்களுடன் தொடர்புடைய அனைத்துப் பரிமாணங்களும் தமிழர் இனக் குழும அடையாளத்தைப் புலப்படுத்துவன.

பின்காலனியச் சூழிலில் நாட்டுக்கூத்திலும் மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டன. இரவு முழுவதும் ஆடப்பட்ட கூத்து பொது மேடைக்கு ஏற்றவாறு குறுக்கப்பட்டது. நவீன மேடை நுட்பங்கள் உட்புகுத்தப்பட்டன.

இனக்குழுமப் பின்புலத்தில் ஆடல், இசை முதலாம் அழகியல் வடிவங்கள் ஆடல், இசை முதலாம் அழகியல் வடிவங்கள் "ஒதுங்கித் தனித்திருக்கும்" (ISOLATED) நிலையில் அமைவதில்லை. குறித்த இனக்குழுமத்தின் சடங்குகள், நம்பிக்கைகள் கல்வி முறை, சமூக ஒழுங்கமைப்பு, சமூக உளவியல் முதலாம் பல்வேறு பரிமாணங்களுடன் அழகியற் கலைகள் தொடர்புபட்டு நிற்கும்.

காலனித்துவத்தின் செல்வாக்கு அந்த வேர்களிலும், ஆழ்ந்த தொடர்புகளிலும் அதிர்வுகளை ஏற்படுத்தியது இந்தியச் சூழலில் கலை அளிக்கைகளுக்கும் சாதியத்துக்குமுள்ள தொடர்புகளில் மாற்றங்கள் நிகழத் தொடங்கின எடுத்துக்காட்டாக குறித்த ஒரு சமூகப்பிரிவினர் மட்டும் ஆடிய தேவரடியார் ஆடலை (திருச்சதிரை) அனைவரும் பயின்றாடும் நிலை உருவானது.

இந்தியச் சமூகத்தில் நிகழ்ந்த சமூக மேனிலையாக்கத்தை விளக்கவந்த சமூகவியலாளர் எம். என். சிறீநிவாஸ், "சமஸ்கிருத மயப்படுத்தல்" என்ற கருத்தாக்கத்தை முன்வைத்தார். (1950) அதாவது மேட்டுக்குடியினரது சடங்குகளையும் மரபுகளையும் விளிம்பு நிலையினர் மேற்கொண்டு உயர் நிலை அசைவியத்தை மேற்கொள்ளும் செயற்பாட்டுக்கு அவர் அந்த எண்ணக்கரு அடையாளத்தைக் கொடுத்தார். விளிம்பு நிலையினரின் கலைகளை மேட்டுக்குடியினரது சடங்குகளுக்கும் மரபுகளுக்கும் உட்படுத்தும் செயற்பாடுகள் பின்காலனியச் சூழலில் நிகழ்ந்து வருதல் குறிப்பிடக் கூடிய சமூக நிகழ்ச்சியாகவுள்ளது.

பின்காலனியச் சூழல், உலகமயமாக்கள், எண்ணிமத் தொழில் நுட்பம், முதலியவை இனக்குழுமக்கலைகளில் புதிய வாசிப்புக்களை ஏற்படுத்திவருதலுடன் நின்றுவிடுவதில்லை.

## மிருதங்கமும் கர்நாடக சங்கீதமும்

மிருதங்கக் கலைஞர்
பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா



கர்நாடக சங்கீதத்தில் மிருதங்கம் மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. வீணா, வேணு, மிருதங்கம் எனும் வாத்யத்ரயத்தில் இது மூன்றாவது இடத்தை வகிக்கின்றது என்பதை நாம் அனைவரும் நன்கு அறிந்த ஓர் விடயம். இது 'பதி'யாகிய கர்நாடக சங்கீதத்திற்கு தர்மபத்தினியாக காணப்படுகின்றது. மிருதங்கமானது தாள வாத்தியத்தில் மிக முக்கிய மற்றும் முதன்மை இடத்தை வகிக்கின்றது.

இப்பெருமை மிகுந்த வாத்தியமானது பண்டைய காலத்தில் மண்ணால் செய்யப்பட்டது இதனால் மிருத் + அங்கம் (மிருத் = மண்) எனப் பொருள்பட்டு "மிருதங்கம்" எனப் பெயர் பெற்றது. பிற்பட்ட காலங்களில் பலாமரம், கருங்காலி, பனை, வேம்பு, போன்ற மரங்களினால் மிருதங்கம் செய்யப்பட்டு வந்தது, வருகின்றது. பண்டைய காலங்களில் கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் சுமார் ஐந்து மணித்தியாலங்கள் நடைபெறும். மிருதங்கக்கலைஞர்கள் தமது தனித்துவத் திறமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமானது "தனியாவர்த்தனம்" என அழைக்கப்படுகின்றது. அவ்வாறு ஐந்த மணித்தியாலங்கள் நடைபெறும் கச்சேரிகளில் மிருதங்கக் கலைஞர்களுக்கு சுமார் மூன்று தனியாவர்த்தனங்களை வாசிக்க சந்தர்ப்பம் கிடைத்தது. அவ்வாறு பல மணிநேரம் வாசிக்கக்கூடியதற்கமைவாக பண்டையகாலத்தில் மிருதங்கத்தின் அமைப்பு காணப்பட்டது. காலப்போக்கில் கர்நாடக சங்கீக் கச்சேரிகள் நடைபெறும் நேரம் மூன்று மணித்தியாலங்களாகி பின்னர் மருவி இரண்டு மணித்தியாலங்களாகி பின்பு ஒரு மணித்தியாலமாக மருவியதால், ஒரு தனியாவர்த்தனம் மட்டுமே வாசிக்க சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மிருதங்கத்தின் வலந்தலையானது ஆட்டுத்தோல், கன்றினது தோல் என்பவற்றாலும் இடந்தலையானது ஆட்டுத்தோல், எருமைத்தோல் என்பவற்றாலும் செய்யப்படுகின்றது. முற்காலத்தில் வலந்தலையின் நாதத்தை மெருகூட்டும் முகமாக ஓலைக் குச்சிகள், மணல் மண் என்பவற்றை பயன்படுத்தினர். பின்னைய காலங்களில் இவற்றுடன் உலோகத்துண்டுகள் **"Iron Ball"** எனும் பதார்த்தம் என்பவையும்



பயன்படுத்தப்பட்டு வருகின்றன. வலப்புற, இடப்புற மூட்டுத்தோலை இணைக்கப் பயன்படுவது தோல்வார் ஆகும். ஆனால் தற்காலத்தில் "Nylon" எனப்படும் நூலால் / ஒரு வகை உலோகத்தினால் இணைக்கப்பட்டு வருகின்றது முன்னனைய காலங்களில் மிருதங்கத்தில் "கும்கி" என சொல்லப்படும் வாசிப்பு முறையை "ரவை" போட்டு வாசிப்பார். ஆனால் தற்காலத்தில் அதற்குப்பதிலாக "Blue Tavk" என சொல்லப்படும் ஒரு வகை ஊடயலயைப் பயன்படுத்தி வருகின்றார்.

இவற்றை ஆராய்ந்து பார்க்கையில் மிருதங்கமானது கர்நாடக சங்கீதத்தில் ஒரு உன்னதமான இடத்தினை வகிக்கின்றது என்பதை எம்மால் ஒரு போதும் மறுக்கமுடியாத ஒரு விடயம் ஆகின்றது. அன்று தொடக்கம் இன்றுவரை காலங்கள் மாறினாலும் மிருதங்கத்தின் பங்களிப்பானது சிறுதுளியளவும் குறையாது தனது ஸ்தானத்தினையும், முதன்மைத் தன்மையையும் காட்டிவருகின்றது என்பதை எம்மால் காணக்கூடியதாக இருக்கின்றது. இசைத்துறையில் பல தொழினுட்ப வளர்ச்சிகள் (Technological Development) நடைமுறைக்கு வந்தாலும் இப்பாரிய வளர்ச்சிக்கு மிருதங்கத்தின் "நாதமே" காரணம் என்று கூறினால் அது மிகையாகாது ஏனென்றால் இக்காலத்தில் "Fution" போன்ற புதிய இசை முறைகளில் புதிய இலத்திரனியல் வாத்தியங்கள். (Electronic Instruments) வாசிக்கப்பட்டாலும் மிருதங்கமானது அதற்கேயுரிய தனித்துவமான நாதஒலியைக் கொண்டு நிகழ்ச்சிகளிக்கேற்ப வாசிக்கப்படுகின்றது. தற்காலத்தில் கர்நாடக சங்கீதம், மெல்லிசைப்பாடல்கள், மேற்கத்தேய சங்கீதம், ஆங்கில சங்கீதம் போன்ற பல வகையான இசை முறைகளிலும் மிருதங்கம் வாசிக்கப்படுவதனால் இதன் பலவகையான நாத முறைகளும் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறாக மிருதங்கமானது ஒரு வேத வாத்தியமாகவும் நந்தி வாத்தியமாகவும் விளங்குகிறது பல கச்சேரி முறைகள் மாறினாலும் மிருதங்கத்தின் முக்கியத்துவம் சிறிதளவும் குறையவில்லை, இவற்றை உற்றுநோக்கும் பொழுது மிருதங்கமானது பல தசாப்தங்களை, கலைஞர்களை, தொழினுட்பச் சவால்களைக் கடந்து இன்று வரை இராஜநடை போட்டுக்கொண்டிருப்பதைக் காணும் பொழுது மனதில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது.




மிருதங்கக் கலைஞர்களான பாலக்காடு T.S.மணி ஐயர், உமையாள்புரம் K.சிவராமன், காரைக்குடி மணி, திருச்சி சங்கரன், M.பக்தவத்சலம், பாலக்காடு R.ரகு, இராமநாதபுரம் C.S. முருகபூபதி போன்ற கலைஞர்களும் ஈழத்து மிருதங்கக் கலைஞர்களான A. கணேஷ் சர்மா, சண்முகம்பிள்ளை, A.சந்தான கிருஷ்ணன்,

A.ரட்ணம், நாச்சிமார் கோவிலடி அம்பலவாணர், சின்ராசு, சிதம்பரநாதன், வரதராஜ சர்மா, மகேந்திரன், துரைராஜா போன்ற கலைஞர்களும் தமக்கே உரிய தனித்துவமான பாணியைக் (வாசிப்பு முறையை) கொண்டு மிருதங்கத்திற்குத் தனிச்சிறப்பையே உருவாக்கியுள்ளனர். குறிப்பாக உமையாள்புரம் K.சிவராமன் அவர்களின் வாசிப்பு முறையைக் கேட்டாலே அவரை இனங்காணக்கூடியதாக இருக்கின்றது. இவ்வாறு கலைஞர்களின் சங்கீதத்திறமைகளுக்கு ஒத்துழைக்ககூடிய அளவிற்கு இவ் மிருதங்க வாத்தியம் விளங்குகின்றது. அதாவது ஒரு கருவியின் சிறப்பே அந்தக்கருவியுடன் கலைஞர்கள் தொடர்பு கொள்ளும் முறையிலேயே காணப்படுகின்றது. ஒரு வாத்தியத்தினை "சாதகம்" செய்து அதனுடன் நெருங்கிச் செல்லும் போதே அதிலிருந்து ஒரு புதிய பாணியை உருவாக்கக் கூடியதாக இருக்கும். மிருதங்கத்தில் வலந்தலையிலும் இடந்தலையிலும் பல வாசிப்பு முறைகளை வாசிக்கக்கூடியதாக இருப்பதால் மிருதங்கத்தில் பல பாணிகள் உருவாகின்றன.

இவ்வாறான ஒரு விடயம் மிருதங்கம் வாசிப்பவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக காணப்படுகின்றது. எனவே மிருதங்கமானது "Static" வாத்தியமாக இல்லாது "Flexible" வாத்தியமாக காணப்படுகின்றது. அதாவது கடுமையாக வாசிக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் கடுமையாகவும், மென்மையாக வாசிக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் மென்மையாகவும் வாசிக்கக்கூடிய தன்மை மிருதங்கத்திற்குக் காணப்படுவது அதன் தனிச் சிறப்பையே எடுத்துக்காட்டுகின்றது.

எம் ஈழத்து மக்கள் உலகம் முழுவதும் பரவியதால் எம் சங்கீதம் பல நாடுகளில் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. தற்காலத்தில் அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா, மலேசியா, சிங்கப்பூர் போன்ற நாடுகளில் "மும்மூர்த்திகளின் உற்சவம்" "தியாகராஜ "ஆராதனை" அரங்கேற்றங்கள்" வருடாந்த கர்நாடக சங்கீதக் கச்சேரிகள் (Annual Carnatic Musical Concerts) போன்ற நிகழ்வுகள் நடைபெற்று




வருகின்றன. அதுமட்டுமன்றி ஒரு கச்சேரியில் ஒன்றுக்கு மேற்ப்பட்ட மிருதங்கங்களை வாசிக்ககூடிய நிலை இன்றளவில் காணப்படுகின்றது. இவ்வாறான சந்தர்ப்பத்தில் உலகம் முழுவதும் மிருதங்கத்தின் தேவை எழுந்து வருகின்றது. ஆகவே மிருதங்கத்தின் அமைப்பானது பல வகையான இடங்களிற்கும் கொண்டு செல்லக் கூடியதற்கேற்ப மாற்றம் அடைந்து வருகின்றது. வெளிநாடுகளில் மிருதங்கத்தைக் கொண்டு செல்லும் போது அதனை பரிசோதிக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு (Fumigation) உள்ளாக்கப்படுகின்றது. இதன் காரணமாகவும் பல நாடுகளில் காணப்படும் காலநிலை காரணமாகவும் இதன் அமைப்பு மாற்றம் அடைந்து எல்லோராலும்

வாசிக்க கூடிய அளவிற்கு வளர்ச்சி அடைந்துள்ளது.

மிருதங்கத்தில் தக்குக்கட்டை மிருதங்கம், ஹெச்சுக்கட்டை மிருதங்கம் எனும் வேறுபாடு காணப்படுகின்றது. அதாவது ஆண்கள் மற்றும் பெண்கள் சுருதிகளின் அடிப்படையில் இது வேறுபடுகின்றது. இவற்றை கருத்திற்கொண்டு மிருதங்கக் கலைஞர்கள் பல மிருதங்கங்களை வைத்திருக்க வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாக்கப்படுகின்றனர். ஆனால் தற்காலத்தில் "Screw - Type" மிருதங்கம் அறிமுகப்படுத்தப்பட்டதால் சுருதிகளை இலகுவில் மாற்றி அமைக்கக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இவ்வாறான பல காரணங்களினால் மிருதங்கமானது "Modern User Friendly Instrument" ஆக மாற்றம் அடைந்து பல கலைஞர்களுக்கு உதவுகின்றது. அதாவது, மிருதங்கமானது கலைஞர்களுக்கேற்ப. நாட்டிற்கேற்ப, பல தொழினுட்ப வளர்ச்சிக்கேற்ப தன்னை மாற்றிக்கொண்டு கலைஞர்களுக்கு உதவுவதால் இது "Sser Friendly Instrument" என அழைக்கப்படுகின்றது.

தற்காலத்தில் கர்நாடக சங்கீதமானது பல மேற்கத்தேய நாடுகளிலும் வளர்ச்சி அடைந்து வருகின்றது. அனைத்து நாட்டு மக்களும் தமது கலை, கலாசார சம்பிரதாயங்களையும் விழுமியங்களையும் பேணிப்பாதுகாக்கும் முக்கியத்துவத்தினை அறிந்து அடுத்து வரும் சந்ததியினருக்கும் அதனைக் கற்றுக் கொடுத்து வருகின்றனர். வருங்காலத்திலும் வளர்ச்சி அடையும் இந்த கர்நாடக சங்கீதத்திற்கு மிருதங்கத்தின் தேவை சற்றே குறையாது, காலத்திற்கேற்ப மிருதங்கமானது வளர்ச்சி அடைந்து கர்நாடக சங்கீதத்தின் உயர்ச்சிக்கு பெரும் உதவி புரியும் என்பதில் எந்த வித சந்தேகமும் இல்லை.



## கலைஞர்களை, கலைப் படைப்புகளை அளவிடும் அளவீடுகள்

மருத்துவ கலாநிதி
இ.லம்போதரன் MD
www.knowingourroots.com

உலகைப் படைப்பவன் இறைவன், கலையைப் படைப்பவன் கலைஞன், பரதம், சங்கீதம், வாத்தியம் போன்ற கலைகள் எல்லாம் இறைவனிடம் இருந்தே வந்ததாகக் கொள்வது இந்தியக் கலை மரபு. இவற்றில் உள்ள மூல நூல்கள் பலவும் இறைவனால் மற்றவர்களுக்குச் சொல்லப்பட்டதாகவே இருக்கின்றன.

ஆலயங்களில் கலைகளையும், கலைஞர்களையும் போற்றிப் பாதுகாப்பது சைவ ஆகம மரபு அந்தந்த உற்சவங்களுக்கும், பூசைகளுக்கும், விழாக்களுக்கும் எந்தெந்த நடனம், இசை, பண், வாத்தியம் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்ற விதிகள் சைவ ஆகமங்கள் இருபத்தெட்டிலும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. கோவில்களில் சுவாமி வீதி வலம் வரும் போது எந்தெந்த திக்குகளில் எந்தெந்த கலைப்படைப்புகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றும், எந்தெந்தக் கலைஞர்கள் பூசிக்கப்பட்டு, கௌரவிக்கப்பட வேண்டும் என்றும் ஆகம விதிகள் விளக்குகின்றன.

கலைஞர்கள் ஆலயங்களால் ஆதரிக்கப்பட்டார்கள். நாட்டியத்தையும், இசையையும் வளர்த்த கணிகையர் ஆலயங்களினால் வரிக்கப்பட்டு, இறைவனின் பெண்டாகவே இறையிடம் இருந்து பொட்டுத் தாலி பெற்று அணிந்து, வாழ்நாள் முழுவதும் கலைத் தொண்டும், பொதுத் தொண்டும் செய்து வந்தார்கள் இவர்களையே தேவதாசிகள் என்று சிறப்பாகக் கூறுவர் பின்னாளில் கலைகளோடு, கலைஞர்களையும் இழிவு செய்யும் அன்னியப் பண்பாடுகள் புகுந்து கொண்ட பொழுது இச்சொல் இழிசொல் வழக்கானது. இவ்வாறு தாலி பெறும் வழமையையே பொட்டுக் கட்டுதல் என்று அழைப்பர். பல்வேறு விதமான கலைஞர்கள் ஆலயங்களை அண்டியும். ஆலய நிலங்களில் குடியிருந்தும், ஆலய நிலங்களில் பயிர் செய்தும் வாழ்ந்து வந்தார்கள். இராஜராஜ சோழன் காலத்தில் இருந்தே பல கலைஞர்கள் ஆலயங்களுக்குத் திருப்பணிகள் செய்த வரலாறும், நிவந்தங்கள் கொடுத்த வரலாறும் கல்வெட்டுகளில் காணக்கிடைக்கின்றன. இவர்கள் செய்த தொண்டுகளின் விபரங்கள் சுந்தர மூர்த்தி நாயனாரின் மனைவி திருவாரூர்க் கணிகை பரவையாரின் பெரிய புராண வரலாறு மூலமாகவும், திருப்பூவணத்தில் ஆலயப்பணி செய்த பொன்னனையாளின் திருவிளையாடற் புராண வரலாறு மூலமாகவும் அறிகின்றோம்.

ஓய்வூதியத் திட்டங்களோ, காப்புறுதித் திட்டங்களோ, சுயசேமிப்புத் திட்டங்களோ இல்லாத அந்தக்காலத்தில் கலைஞர்களின் வயதான காலத்திலும், நோய் வாய்ப்பட்ட காலத்திலும், அந்திம காலத்திலும், வருவாய் குன்றிய காலத்திலும் ஆலயங்களில் இருந்து இவர்களுக்கு படி அளக்கப்பட்டு வந்தது கலைஞர்களுக்கு எப்போதும், எச்சந்தர்ப்பத்திலும் அவர்களின் அடிப்படை வாழ்வாதாரத் தேவைகளுக்கான உத்தரவாதத்தைக் கொடுத்துப் பேணிய சமூக மரபு. எம்முடைய மரபு இவ்வாறு ஆலயங்களுடனும் இறை வழிபாட்டுடனும், ஆன்மீகத்துடனும் ஒன்றிக் கலைகள்

பேணப்படும் மரபை தென்னிந்தியக் கலை மரபிலே நாம் காண்கின்றோம்.

யாழ்ப்பாணத்து ஆறுமுக நாவலரின் விக்டோரியா மகாராணிக்காலப் பண்பாடு சார்ந்த சைவச் சீர்திருத்தமும், இதே பின்புலத்தில் நிகழ்ந்த இந்திய விடுதலைப் போராட்டமும், இந்துப்பண்பாடு சார்ந்த கல்வி பெற்று உயர்ந்த கல்வியாளர்களினால் கொண்டுவரப்பட்ட தேவதாசி ஒழிப்புச் சட்டமும் இந்தக் கட்டமைப்பை தகர்த்தெறிந்தன. இருந்தும் சமூகத்தில் தனித்து நின்று இக்கலைகளைப் பேணியும், வளர்த்தும் வந்த பாலசரஸ்வதி போன்ற கலைஞர்களாலும், ருக்மினி அருண்டேல் போன்ற விழிப்புணர்வுள்ள பெருமக்களாலும் தான் இன்று இந்தப் பாரம்பரியச் செல்வத்தை நாம் பெற்றுள்ளோம் என்பதை மறக்க முடியாது. அவ்வாறே இதை இன்றும் போற்றியும், பேணியும், கற்றும், கற்பித்தும், வளர்த்தும் வருகின்ற கலைஞர்களுக்கு நாமும் எமது சமுதாயமும் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்.

இவ்வாறான பண்பாட்டு மற்றும் வரலாற்றுச் சிறப்பும், செறிவும் மிக்க எமது கலைகள் புலம் பெயர்ந்த மேற்குலகப் பண்பாட்டுச் சூழலில் கூட இன்றளவும் பேணப்பட்டும், போற்றப்பட்டும் வரும் மரபு போற்றுதற்குரிய ஆயினும் இன்றுள்ள கலைஞர்களின் கலைப்படைப்புகள் வெற்றி பெற வேண்டுமானால் அவர்கள் வெளியில் இருந்து தமது கலை சார்ந்த நுட்பங்களையும், வளர்ச்சிகளையும் உள்வாங்கித் தமது சுய ஆற்றலையும், உணர்வுகளையும், செய்திகளையும் உள்ளிருந்து வெளிப்படுத்துவனவாக அவர்களின் படைப்புகள் அமைய வேண்டும். வெறுமனே தான் கற்ற ஒன்றையே மீண்டும் மீண்டும் கற்பித்து, மேடையேற்றுவதாக மட்டும் இருக்கக்கூடாது. கலைப்படைப்பு என்பது கலைஞனின் பிரசவம் அது வெளியில் இருந்து உள்வாங்கி, உள்ளிருந்து கருவாகி, உருவாகித், திருவாகி மலர்ந்து வெளிவரும் போது தான் அதற்கு கலைப்படைப்பு என்ற அங்கீகாரம் கிடைக்கின்றது, படைப்பாளியும் கலைஞன் என்ற அங்கீகாரத்தைப் பெறுகின்றான். ஆனாலும் இவ்வாறு அங்கீகாரம் பெற்ற கலைஞர்களின் கலைப் படைப்புகள் எல்லாமே வெற்றி பெறுகின்றன என்று சொல்ல முடியாது. ஒரு கலைப்படைப்பு தன்னைப் படைத்த கலைஞனின் சமகாலத்திய உள்ள உணர்வுகளையும், அதிர்வுகளையும், செய்திகளையும் படைப்பை நுகரும் ரசிகர்களிடத்திலும் ஏற்படுத்தும் பொழுது தான் அந்தக் கலைப்படைப்பு வெற்றி பெறுகின்றது, அந்தக் கலைஞன் ஒரு வெற்றிகரமான கலைஞனாகின்றான் என்று மறைந்த பேராசிரியர் சிவத்தம்பி அவர்கள் கூறுவார்கள்.

ஆனாலும் வெற்றிகரமான கலைப்படைப்புகள் எல்லாமே முழுமையான கலைப்படைப்புகள் என்றும் நாம் கருதிவிட முடியாது. கலை விமர்சகர்கள் பலவிதமான அளவு கோல்களை இதற்குப் பயன்படுத்துகின்றார்கள். ஆயினும் எமது இந்தியக் கலைப்பாரம்பரியத்தின் படி ஒரு கலைப்படைப்பானது தனது படைப்பாளியை இரசிகர்களுக்கு அல்லது நுகர்வோருக்குச் சுட்டிக்காட்டும் பொழுதும், அறிமுகப்படுத்தும் பொழுதும், வெளிப்படுத்தும் பொழுதும் தான் அந்தப்படைப்பு முழுமை பெறுகின்றது அந்தக் கலைஞன் ஒரு முழுமையான கலைஞன் ஆகின்றான் இங்கு படைப்பாளி என்றது கலைஞனை அல்ல அவனையும் அந்தக் கலையையும் படைத்த இறைவனையேயாம்.

# இசையும் மனிதனும்

இசைத்தமிழ் திலகம்,
ஆய்வுலகச் சிற்பி,
கலாநிதி ஜயந்தினி விக்னராஜன்,
முன்னாள் தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர்,
இசைத்துறை,
சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவகம்,
கிழக்கு பல்கலைக்கழகம்,

## முன்னுரை

இசை என்கின்ற கலையானது நமது உடல், ஆன்மா, மனம் ஆகியவற்றுடன் மிக நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளது. இசைக்கு அடிப்படையான லயமும் நாதமும் இந்த இயற்கை முழுவதும் நீக்கமற நிறைந்திருக்கின்றது. நமது உடலுக்குள்ளும் லயமும் துடிப்பும் சுழற்சியும் காணப்படுகின்றன. அந்த வகையில் நமக்குள் இருக்கும், நம்மைச் சுற்றியுள்ள இயற்கையிலும் இசை பரந்து விரிந்து காணப்படுகின்றது. தெய்வத்தின் அருளால் நம் உள்ளத்திலும், உடலிலும் நாதமும் தென் எதிரொலி அலைகளும் நிறைந்திருப்பதை நமமால் உணர்ந்து கொள்ள முடிகின்றது. நம் உடலில் அல்லது உள்ளத்தில் ஓடும் இசையில் பேதம் அல்லது முரண்பாடு வரும் போது நம்மை உடல் வியாதியும், மனோ வியாதியும் பீடிக்கின்றன. இதை நாம் உணர்ந்து கொண்டால் நம் உடம்பில் ஓடுகின்ற இசையை மனத்தால் ஆராதித்து ஆரோக்கியத்தைப் பேண முடியும். இசையானது நமது அகத்தின் அலைகளையும், வெளி உலக அலைகளையும் இணைத்து நம்முடைய வளமான வாழ்விற்கு வித்திட்டுச் செல்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. நம் உடலில் ஓடும் லயத்தையும் இசையையும் கலைஞர்கள் நன்றாக அறிந்தவர்கள். அவர்கள் இசையில் தங்களை அறியாமலேயே பாடும் நேரத்தில் கடந்த காலத்தையும், எதிர் காலத்தையும் மறந்தவர்களாகப் பாடும் அந்த தருணத்தில் இன்பத்தை அடைந்து கேட்பவர்களையும் பரவசம் அடையச் செய்கின்றார்கள். அந்த வகையில் இசையும் மனிதனும் ஒன்றோடு ஒன்று பின்னிப்பிணைந்து இருக்கின்றான் என்பதை இசை லயமும் உடல் லயமும், மனோநிலையை உயர்த்தும் இசை, இசையும் மனித உணர்வுகளும், இசையும் மனிதாபிமானமும், இசையும் நல்வாழ்வும் போன்ற அம்சங்களை உள்ளடக்கியதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகின்றது.

## இசை லயமும் உடல் லயமும்

பழங்குடி மக்களிடையே உள்ளுணர்வை மழுங்கச் செய்யும் ஷாமானிய இசை நெடுங்காலமாக வழக்கில் இருந்து வந்துள்ளது. பறை அல்லது தப்பட்டையை விநாடிக்கு ஒன்றரை தட்டு என்ற வீதத்தில் தட்டினால் அந்த நிதானத்தில் மக்கள் ஒரு

மயக்க நிலையை அடைவார்கள் என்று கூறப்படுகின்றது. Landereth and Harrer இவருடைய அண்மைக்கால ஆராய்ச்சியின் படி மெதுவான தட்டல் அல்லது தாளம் சுவாச சுழற்சியையும் இதயத் துடிப்பையும் குறிப்பிடத்தக்க வகையில் நிதானமடையச் செய்கின்றன. மெல்லிசையின் லயம் மூளையின் அதிர்வலைகள் லயத்தில் மாற்றம் ஏற்படுத்துவதால் நம் உணர்வுகளில் மாற்றம் தெரிகின்றது. பீட்டா அதிர்வலைகளால் அதீத சுறுசுறுப்பும், ஆல்ஃபா, தீட்டா, டெல்டா அதிர்வலைகளால் அமைதியான நிலையோ ஆழ்ந்த உறக்கமோ ஏற்படுகின்றது.

ஒரு தபேலா அல்லது கஞ்சிராவின் மென்மையான லயத்தைத் தரும் ஒரு தட்டு மனிதனை அழுத்தத்தில் இருந்து விடுபட வைத்து மனத்திற்கு அமைதியைத் தருகின்றது என்பதை செயன்முறையாக செய்து காட்டிய போது அவர்கள் அமைதியாக இருந்ததோடு "டென்ஷன்" குறைந்து விட்டதையும் உணர்ந்தனர். ஐம்புலன்களை இயக்கும் நரம்பு மண்டலத்துடன் இணைந்துள்ள மூளைக்கு அதன் செயல்களான பார்வை, செவிப்புலன், ஸ்பரிசம், உணர்ச்சிகள், பேச்சு, சந்தேகக் குறிகளை அறியும் நுண்ணறிவு போன்றவை சிறப்பாக செயல்பட மூளைக்குப் பயிற்சியாக நல்ல இசைக்கச்சேரி அல்லது வாத்திய இசை அமைகின்றது. சுதந்திரமாகச் செயற்படும் நரம்பு மண்டலத்தில் வேரூன்றிப் போன குணங்களில் மற்றவர்களுடன் இணைந்து போகின்ற குணமும், மற்றவர்களுடன் ஒன்றிப் போகின்ற குணமும் பலதரப்பட்ட இசைப்பகுதிகள் மூலம் மேலும் விரிவடைந்து செல்கின்றன. நரம்பு மண்டலத்தை செயல்படத் தூண்டும் இசைக்கும் மனிதனுக்கும் நெருங்கிய புரிதல் நிலை உள்ளது. இந்த உறவு மனிதன் உடல்நலக் குறைவான போதும் உடல் செயல் இழந்து முடங்கிப் போகும் நேரத்திலும் கூட தொடர்கின்றது. இசையை அனுபவிப்பதற்கு அழ்ந்த இசை அறிவோ அல்லது பயற்சியோ தேவை இல்லை என்று கூறலாம்.

மேற்கூறப்பட்ட அடிப்படையில் தான் எழுத்தறிவில்லாதவனுக்கும், நோயாளிக்கும், மன வளர்ச்சி பாதித்தவனுக்கும், வாழ்வின் அந்திமத்தை நெருங்கி விட்ட நோயாளிக்கும், மனப்போராட்டம் அடங்கவும், சோகத்தில் இருந்து விடுபடவும், மன வளர்ச்சி அடையவும், புலனறிவு வளரவும் இசையை அருமருந்தாகக் கொடுத்து அவர்களின் துன்ப நிலையில் இருந்து விடுவிக்க முடியும் என்பது யாவரும் அறிந்த உண்மை ஆகும். லயத்தின் கூறுகள் நம் உடலில் உள்ளே அமைந்துள்ள உயிர் அணுக்களின் செயல்களை நடத்திச் செல்கின்றன. காலப்போக்கில் உயிர் அணுக்களில் இருந்து திசுக்களும், திசுக்களின் வளர்ச்சியால் உடல் உறுப்புக்களும், உறுப்புக்களின் வாயிலாக உயிர் வாழ் மனிதனுக்கோ அல்லது பிராணிக்கோ வளர்ச்சியையும் கொடுக்கின்றன. நம் உடலில் உள்ள சாதாரண இதயத் துடிப்பையும், சுவாச சுழற்சியையும் லயங்களாக உணர முடியும். பிறப்பின் பெரும் விந்தையான

பிரசவ வலியும் கூட ஒரு லயத்துடன் விட்டு விட்டு வருவதைக் கர்ப்பிணி பெண்கள் உணர்கின்றார்கள். தூக்கம் கூட ஒரு வகை லயத்தின் சுழற்சியாகவே மெல்ல மெல்ல மனிதனை ஆட்கொள்கின்றது. ஆகவே பிரபஞ்சம் முழுவதுமே லயத்தால் ஆளப்படுகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

## மனோநிலையை உயர்த்தும் இசை

இன்னிசையால் நம் மனோநிலை பலவாறாகப் பாதிக்கப்படுகின்றது. நம்மை அறியாமலேயே நல்ல இசை நம்மை தன்வசப்படுத்துகின்றது. மனச்சோர்வு ஏற்படும் போது நல்ல இசை நம் மனதில்நம்பிக்கையையும், உற்சாகத்தையும் ஏற்படுத்துகின்றது. மென்மையான இசையானது நம் மனதிற்கு ஆறுதலாகவும், அமைதியாகவும், சாந்தமாகவும் இருக்க உதவுகின்றது எனக் கூறலாம். இசையை அனுபவிக்கத் தெரிந்தவர்களுடைய வாழ்வு அர்த்தம் உள்ளதாகவும், மகிழ்ச்சி நிறைந்ததாகவும் அமைகின்றது. மனதைக் கட்டுப்படுத்தவும் தியானம் செய்யவும் மனிதன் இசையை நாடுகின்றான். இசையை தெரியாத, ரசிக்காத மனிதன், வாலும் கொம்பும் இல்லாத விலங்கு என்று அழைக்கப்படுகின்றான். இறுக்கமான நினைவுகளை அகற்றி சிந்தனையில் புத்துணர்ச்சியைக் கொடுக்க வல்லது நல்ல இசை. உடற்கூற்று மருத்துவம் இறுக்கமான தசைகளை தளர வைத்து பயிற்சி செய்வதன் மூலம் செயல்பட வைப்பது போல் இறுக்கமான மனோ நினைவுகளை நல்ல இன்னிசை தளர வைத்து மனத்தை மென்மை ஆக்குகின்றது. இசை என்பது தொடர்ச்சியான ஓர் அழுத்தமும் விடுபடதுமான அனுபவம் என்பது இகார் ஸ்டாவின் ஸ்கீயின் கூற்று ஆகும்.

பாட்டு வாயில் இருந்து தானாக வெளிவந்து விடாது பாடுபவன் தன் நாபியில் இருந்து சக்தியைத் திரட்டி கண்டத்தில் இருந்து நாதத்தை வெளிக் கொணர சுருதி சுத்தமான, ரஞ்சகமான இசையைக் கொடுக்க தன் முழு அழுத்தத்தையும் வெளியிடுகின்றான். நாதம் வெளியில் வரும் போதே அதன் தளர்வும் மென்மையும் அவனை ஆட்கொண்டு அவனையும் கேட்பவர்களையும் மகிழ்விக்கின்றது. வாத்திய இசையிலும் ஓர் அழுத்தத்தை வீணைக் கட்டையில் கொடுத்தால் ஒரு ஸ்வரமும் அதைத் தளர்த்தும் போது அடுத்த ஸ்வரமும் வருவதைக் கேட்கலாம். மகாத்மா காந்திக்கு விருப்பமான பஜனில் "ஹரே ராம ஹரே ராம" என்ற வரிகளில் பக்தி ரசம் அழுத்தமாக வெளி வர அடுத்த வரியில் சுவாசத்தை வெளியேற்றி "ராம ராம ஹரே ஹரே" என்று பாடும்போது மென்மையும் தளர்வும் தானே வந்து விடுகின்றது என்று கூறுகின்றார். இந்த அழுத்தமும் தளர்வும் என்ற அனுபவத்தை தனி ஆவர்தனம் என்று மிருதங்க, கஞ்சிரா பக்க வாத்தியக் கலைஞர்கள் கொடுக்கும் பகுதியில் வெகுவாகவே கேட்டு ஆனந்தம் அடையலாம். முழு அழுத்தத்தோடு ஒரு கை அடிக்க அடுத்த பக்கம்

வருடலாக மற்ற கை வாசிக்க அந்த இன்பம் வாசிப்பவர்களுக்கும், கேட்பவர்களுக்கும் இனிமையானதாக இருக்கும் என்பதை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியும்.

எல்லா இசையிலும் இந்த அழுத்தம் அல்லது இறுக்கம், தளர்வு என்ற கொள்கை நிரந்தரமானஇசை இலக்கணமாக அமைகின்றது. இசைக்கு அழுத்தம் இல்லை என்றால் ஜீவன் இல்லை. கிராமியப் பாடல், நாட்டுப் பாடல், மெல்லிசைப் பாடல், கர்நாடக இசைப்பாடல்கள் இவை அனைத்திற்கும் இந்த இலக்கணம் உள்ளது என்று கூறலாம். வாழ்க்கை அனுபவம் கூட அதைத் தானே கற்றுக் கொடுக்கின்றது. ஓர் எதிர்மறைக்கு நேர்மறை, வெளிச்சத்திற்கு இருள், கேள்விக்குப் பதில், சர்ச்சைக்கு சமாதானம், என்ற இந்த வாழ்க்கைத் தத்துவம் இசைக்கு அபாருத்தமாகும். இது உலக இசை எல்லாவற்றிற்கும் பொருத்தமாகும். இயற்கையின் அதிர்வலைகளும் இசையின் அலைகளும் ஒன்று போலவே அமைந்துள்ளதில் இருந்தே இசை இயற்கையின் வடிவம் என்பது தெள்ளத் தெளிவாகத் தெரிகின்றது. இயற்கையின் பிரதிபலிப்பான இசையில் ஏற்படும் லயம், தாளம், காலப்பிரமாணம், ஆழம் யாவும் இயற்கையில் இருந்தே ஆரம்பமாகின்றது என்பதைக் காணலாம்.

இயற்கை அலைகளைப் போலவே இசை அலைகளும் உடலில் தோன்றும் நரம்பலைகளும் ஒன்றை ஒன்று ஒத்திருப்பதைக் காணமுடியும். மூளை மின்சார அதிர்வால் செல்களை செயற்படுத்துகின்றது. இதன் அதிர்வுகள் பாரொக் இசைக்கு ஈடாக உள்ளது என்று டாக்டர். கோர்டன் கூஷா கூறுகின்றார். வெவ்வேறு பாதையில் செல்லும் இயற்கையும், மனித விஞ்ஞானமும் இசையில் எப்படி இணைகின்றன என்பது வியத்தகு அம்சமாகும்.

### இசையும் மனித உணர்வுகளும்

இசைக்கும் நமது மனித உணர்வுகளுக்கும் இடையே ஆழமான பந்தம் இருக்கின்றது என்று கூறலாம். மனித மனத்திற்கும் உடலுக்கும் உள்ள தொடர்பு பற்றி கூறப்படுகின்றது. இசை மிக நுட்பமான, மென்மையான கலை ஆகும். இசையின் மிருதுவினால் மனிதனின் மனம் மாறுவது மாத்திரம் இல்லாமல் உடல் உறுப்புக்களும் உடற் கூறுகளும் மாற்றம் அடை கின்றன. இறுக்கமான மூட்டுக்கள் தளர்ந்து நடையில் சுலபமும், விரைவும், தெளிவும் ஏற்படுகின்றது. இசை ஆனது மன ஓட்டத்திலும் எண்ணங்களிலும் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துகின்றது. இயற்கையாகவே அமைந்துள்ள இசையின் இந்த மென்மையும் இனிமையும் நாதம் என்ற சமஸ்கிருத சொல்லுக்கு ஆதாரமாக உள்ளன. இசையால் உள்ளத்தில் அளவிட முடியாத அமைதியும், நிசப்தமான மோன நிலையும், அன்பும், கருணையும், ஆகாய வெளியில் பிரபஞ்சத்துடன் கலந்து விட்ட பேரின்பமும் கிட்டுகின்றன. இசை என்பது கேட்பவனின்

மனத்தைத் தொட்டு அவனிடம் ஐக்கியப்படுகிற கலை ஆகும். இசையோடு வாழும் போது நம் இதயம் இசையின் வசப்படுகின்றது. இசைக்கு ஏற்றவாறு நம் இதயத் துடிப்பு ஏறி இறங்குகின்றது. துரித இசையைக் கேட்கும் போது நம் இதயத் துடிப்பும் துரிதமாகி படபடப்பு ஏற்படுகின்றது.

இசையில் இருந்து பிரிக்கப்பட முடியாத ஓர் அங்கமாக உள்ளுணர்வு அமைகின்றது. உள்ளுணர்வு தானாகவே மனதில் தோன்றுகின்றது. எண்ணங்கள், அனுபவங்கள், தெய்வாம்சமாக ஏற்பட்ட அனுபவங்கள் போன்றன ஆத்ம ஞானத்தைப் பற்றி அறியவும், தன்னைப் பற்றி அறியவும் உள்ளுணர்வு துணை புரிகின்றது. மனிதன் வளர்ச்சி அடையாத நிலையிலும், வளர்ச்சி அடைந்த நிலையிலும் இசையே தனி இடத்தைப் பெறுகின்றது. மனதின் விலாசத்தையும், ஆழ்ந்த அறிவையும் இசையே பிரதிபலிக்கின்றது. மனிதனுடைய வாதங்கள், விவாதங்கள் யாவும் மனிதனுடைய உள்ளுணர்வை வெளிப்படுத்திக் காட்டும் கண்ணாடியாக திகழ்கின்றது. உடல் உறுப்புக்களின் உதவியால், ஐம்புலன்களின் உதவியால் கற்ற அறிவு உண்மையான அறிவு இல்லை. மனிதன் தன் உள்ளுணர்வால் பெற்ற அறிவு சிறந்த அறிவு என்று தத்துவ ஞானிகள் கூறுகின்றார்கள். உள்ளுணர்வு மூலம் அறிந்து கொண்ட நிரந்தரமான முடிவில்லாத உண்மை அல்லது கூற்று மூலம் ஒருவன் எங்கும் வியாபித்துள்ள இறைவனைத் தரிசிக்க முடியும். உள்ளுணர்வு இல்லாத அறிவாளிகள் முழுமையானவர்கள் இல்லை. அவர்களுக்கும் குறைபாடுகள் உள்ளன. நாம் பெற்ற அறிவால் வாழ்வின் யதார்த்தத்தை அவர்களால் புரிந்து கொள்ள முடியாது. இன்றைய கலாசார முன்னேற்றத்திற்கு அறிவை விட உள்ளுணர்வு தான் காரணம் என்பதை திட்டவட்டமாகக் கூறமுடியும்.

### இசையும் மனிதாபிமானமும்

உலகில் பல்வேறு இனங்கள் உள்ளன. அந்தந்த இனங்களுக்கு என்று சில தனித்தன்மைகள் உண்டு. சில இனங்கள் செல்வத்திற்கு முன்னுரிமை கொடுக்கும். சில இனங்கள் நாடுகளைப் பிடிப்பதிலும், மதத்தைப் பரப்புவதிலும் ஆர்வம் காட்டும். ஆனால் மனிதன் எப்படி வாழ வேண்டும் என காட்டுவது தான் நம் இனத்தின் தலையாய பண்பாகும். "ஈதலும் இசைபட வாழ்தலும்" தான் நமது இனத்தின் சிறப்பு என்பதை தமிழ்மறை என்று கூறப்படும் திருக்குறள் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறியுள்ளது. நம்மிடம் இருப்பதை பிறருக்கு பகிர்ந்து கொள்வது இசையோடு இயைந்து வாழ்வது என்பது தான் இதன் பொருள். இசையோடு ஏன் வாழ வேண்டும்? என்றால் இசை இல்லாவிட்டால் இரக்கம் இருக்காது, இரக்கம் இல்லா விட்டால் மனிதாபிமானம் இருக்காது, மனிதாபிமானம் இல்லாவிட்டால் மானுடனாக இருப்ப தற்கே அர்த்தம் இருக்காது என்பதை இன்றைய காலகட்ட சூழலில் அறிந்து கொள்ள

முடிகின்றது.

இசையைக் கேட்பவர்களின் மனத்திற்கும், உணர்வுக்கும் இசை அருமருந்தாக அமைகின்றது. நாதோபாசனை செய்கிறவர்களுக்கு இசை தெய்வாம்சமாக காட்சி கொடுக்கின்றது. இயற்கையின் வரப்பிரசாதமான இசை கேட்பவருக்கும் தெய்வ தரிசனம் தருகின்றது. வாழ்க்கையில் இன்னல்களை அனுபவித்து துன்பத்தையே அடைந்த அபாக்கியசாலிகளுக்கு இசை மிகுந்த சக்தியையும் தன்னம்பிக்கையையும் கொடுக்கின்றது. அறிவாற்றல் குறைந்த சராசரி வாழ்வுக்கும் கீழான பாமரனுக்கும், வயோதிபனுக்கும், முடவனுக்கும், உடல் ஊனமுற்றோருக்கும், பச்சிளங் குழந்தைக்கும் இசை இன்பத்தைக் கொடுத்து ஒரு நெருங்கிய நண்பனாகவும் இருக்கின்றது. கர்ப்பத்தில் உள்ள சிசுவின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் முழுமை அடையாமல் குறை மாதத்தில் பிறக்கும் ஆரோக்கியம் குறைவான குழந்தையின் வளர்ச்சிக்கும் இசை பக்கபலமாக இருக்கின்றது என்று திட்டவட்டமாகக் கூறலாம்.

"உறங்கு குழந்தாய்" (baby go to sleep) என்ற ஒலிநாடாவை உருவாக்கிப் பிரபல்யம் அடைந்த வுட்ஃபோர்ட் என்பவர் இன்டியானா பல்கலைக்கழகத்தில் குழந்தைகள் இல்லப் பிரிவில் குறிக்கோளோ, திட்டமோ இல்லாமல் ஒரு பொழுதுபோக்கான ஆர்வத்தில் இசையைக் குறித்து செய்த ஆராய்ச்சி வியக்க வைக்கும் முடிவைக் கொடுத்துள்ளது. 94 சத வீதக் குழந்தைகள் தமது பால் போத்தல்களையோ, அல்லது தண்ணீர் போத்தல்களையோ உறிஞ்சிக் கொண்டு உறங்குவதில்லை. ஆனால் மென்மையான இசையைக் கேட்டபடி உறங்குகின்றன என்பதை தமது ஆராய்ச்சி மூலம் நிரூபித்துள்ளார். இசைக்கு ஏற்ற பக்க வாத்தியமாக மனிதனின் இதயத் துடிப்பை ஒலி நாடாவில் பதிவு செய்து மென்மையான லயத்துடன் பாட்டைக் கேட்க வைக்கும் போது அதைக் கேட்டுக் கொண்டே குழந்தைகள் உறங்கியது என்பதை அறியமுடிகின்றது.

## இசையும் நல்வாழ்வும்

பூமியில் தோன்றிய நாள் முதல் மனிதனுக்கு இசை ஒரு மொழியாகவே அமைந்து அதன் மூலம் நல்ல எண்ணங்களைக் கொடுத்து நல்வாழ்வைக் கொடுத்து வருகின்றது என்று சொன்னால் அது மிகையாகாது. தாலாட்டில்ஆரம்பித்து ஆதிவாசிகளின் கொட்டு, பறை, முழுக்கம், படகொட்டியின் தெம்மாங்கு, களனிகளில் களை அறுக்கும் உழவுப் பாட்டு, உழைத்துக்கொண்டே பாடும் தொழிலாளியின் நாடோடிப் பாட்டு, காதலிக்குத் தூது அனுப்பும் இனிய புல்லாங்குழல் ஓசை போன்றன உணர்ச்சிகளின் வெளிப்பாடாகவே அமைகின்றன. மன அமைதி, களிப்பு, அன்பு, ஆர்வம், பக்தி, ஏமாற்றம், திகைப்பு எல்லாவற்றுக்கும் இசையே மொழியாக அமைகின்றது. உள்ளக்

கிடக்கையை வெளிப்படுத்த பேச்சுக்கே இடம் இல்லாமல் இசை தனது சிறந்த சேவையை ஆற்றுகின்றது. மன உணர்வுகளை மறைத்து தன் ஏமாற்றத்தையோ, தோல்வியையோ, வெளியில் சொல்லாமல் மனத்துள் புதைத்து மன நோய்க்கு ஆளாகும் ஒருவனுக்கு சங்கீதம் ஒரு நல்ல சக்தியாகி அவன் உள்ளுணர்வை வெளியே கொணர்ந்து அவனுடைய யதார்த்த குணத்தை அல்லது பண்பை நிலைநிறுத்தி அவனுடைய சாதாரண வாழ்க்கைக்கு அவனை திசை திருப்பி சகஜ வாழ்க்கைக்கு இட்டு செல்கின்றது. இசையால் உணர்வுகள் பெருகி மன அழுத்தம் இளகி அவனது மனக்கிலேசம் மறைகின்றது. சாதாரண மனோ வியாதி அல்லது மனச்சோர்வு அல்லாமல் மூளைச் சிதறல் ஏற்பட்ட, கட்டுக்கு அடங்காத வெறியர்களைக் கூட இசை தனது சக்தியால் சாந்தப்படுத்து கின்றது. மனிதனிடம் மறைந்துள்ள கவலைகளையும், குரூரத்தையும், துன்பத்தையும் களைந்தெறிந்து உடன் இருப்பவனைப் புரிந்து கொண்டு அன்பு கருணையுடன் சமூகத்தில் நாகரிகமாக வாழவும், நலமாக வாழவும் இசை துணை புரிகின்றது.

இசையோடு வாழும் போது நம் இதயம் இசையில் வசப்படுகின்றது. இசைக்கு ஏற்றவாறு நம் இதயத் துடிப்பு ஏறி இறங்குகின்றது. துரித இசையைக் கேட்கும் போது நம் இதயத் துடிப்பும் துரிதமாகி படபடப்பு ஏற்படுகின்றது. நிதானமான இசை நிதானமான சுவாச சுழற்சியும் நிதான இதயத் துடிப்பும் கொடுத்து உடல் அயற்சியைப் போக்கி உடலை ஆரோக்கியமாகவும், நலமாகவும் வாழ வைக்கின்றது. ஆகவே இசை மருத்துவத்தின் முக்கியத்துவத்தை அறிந்தவர்கள் பல நோய்களுக்கு மருந்தாக இசையை நாடி வருக்கின்றார்கள். மனித வாழ்வில் இசையானது நம் உடலில் ஓடும் லயத்தையும் சந்தோஷமான வாழ்வைக் கடந்து செல்லவும் துணை நிற்கின்றது. மனிதனது மனம், உடல், ஆன்மா ஆகியவற்றில் மறைந்து நிற்கும் நல்லிசை நம்மை நலமாக வாழவைக்கும் ஒரு சாதனமாக விளங்குகின்றது.

**முடிவுரை**

மனத்திற்கும் உடலிற்கும் தொடர்பு இருக்கின்றது. இசைக்கும் மனத்திற்கும் தொடர்பு இருக்கின்றது. இசைக்கும் மனத்துக்கும் இடையே உள்ள தொடர்பை பயன்படுத்தி மனத்தில் தேவையான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலமாக உடலிலும் அதன் விளைவுகளைப் பிரதிபலிக்க வைக்க முடியும். இசையானது மனித உடல், மனம், ஆன்மா ஆகியவற்றுடன் அந்தரங்கமான, ரகசியமான தொடர்பைக் கொண்டிருக்கின்றது. கோபம், சோகம், வீரம், நம்பிக்கை, காதல், நகைச்சுவை எனப் பல்வேறு உணர்ச்சிகளையும் உணர்வுகளையும் இசையால் உருவாக்க முடியும் என்பதை மேற்குறிப்பிட்ட அம்சங்களின் ஊடாக அறியலாம்.

# வலி வடக்கு இசைப்பாரம்பரியத்தில் நாட்டார் இலக்கியம்

கலாபூஷணம்
கே.எஸ்.சிவஞானராஜா
ஓய்வுநிலை உப அதிபர்

மருதமும் நெய்தலும் மலிந்த பூமியே வலி வடக்கு ஆகும். மருதநிலக் கொழிப்புக்கும், நெய்தல் நில வளத்திற்கும் ஏற்றவாறு மக்களின் வாழ்க்கை முறையும் தொழில் முயற்சியும் வரம் கொடுக்கிறது.

மருதம் எனப்படுவது வயலும் வயல் சார்ந்த இடங்களையும் கூடவே அதனோடியைந்த வாழ்வியலையும் குறிப்பதாகும். நெய்தல் எனப்படுவது கடலும் கடல்சார்ந்த இடங்களையும் கூடவே அதனோடியைந்த வாழ்க்கை முறையினையும் சுட்டுவதாகும்.

எனவே, மண்சார்ந்த வாசனைதான் மக்களிடையே புராதனகாலம் தொடக்கம் வாய்மொழி இலக்கியமாக, பேச்சு மொழியாகி இசைமொழியாக, பாமர ஜனகானமாக, தாளலயத்தோடு கூடிய நாட்டுப்புறப்பாடலாக, தெம்மாங்கு இசையோடு ஊற்றெடுக்கும் தொழில் பாடல்களாக, ஏட்டினில் வடிக்காத கூட்டிசையாகவும், பாரம் பரிய இசை வடிவத்தில் மூலாதாரமாக விளங்குமாறு நாட்டார் பாடல்கள் முன்னோடியாகத் திகழ்கின்றன. மருத நிலப் பண் மண்ணுக்கு வரமாகின்றது. வலிவடக்கிலே பெரும்பாலானவர்களுக்கு விவசாயமும் மீன் பிடியும் பிரதான தொழில்களாக மேம்பட்டமையால், தாளமும் இசையும் மொழியும் தொழிலும் ஒருங்கே அமையப்பெற்ற ஏராளமான பாடல்கள் தொழில் ஆற்றும் போது பாடப்படுகின்றன.

தொழிலியற்றும் வேளையில் வேலைப்பளுவைக் குறைக்கும் முகமாகவும், ஏற்படும் களைப்பினைப் போக்கும் முகமாகவும், வேலை சுறுசுறுப்பாகவும் தடங்களின்றி சீக்கிரம் முடிய வேண்டும் என்பதற்காகவும் கிராம மக்களால் கிராமிய மொழி நடையில் கிராமிய ஆட்டம் பாட்டம் நாட்டம் கொண்டாட்டங்களோடு ஆண்களும், பெண்களும் கூட்டாகவும், தனித்தும் பாடப்படும் பாடல்களே நாட்டார் இலக்கியம் எனப்படும் நாட்டுப் பாடல்களாகும். வயல்களில் இயல்பாக ஒன்று கூடும் வேளை இவை பலவாறாகப் போற்றப்படுகிறது. அவைபற்றி சற்று விளக்குவோம். பயிருக்குச் சுவாத்தியமளிப்பது பயிருக்கு உயிரான மண்ணை தெய்வமாக வணங்கிப் பண்படுத்துவதே உழவர் மரபாகும்.

**உழவுப் பாடல்**

உழவனும் எருத்து மாடுகளும் கலப்பையும் நுகமும் வடகிழக்கு ஈசான மூலையில் பெருமாக் கடவையானுக்குப் பாத்திரமாக்கப்படுகிறது. இது அளவெட்டி பனாக்கை குளத்தருகே பாடப்படுகிறது.

தெந்தானா தெய்யாகோ
தெந்தானா தானா
தெந்தான தன தானா

பேழை வயிறன்... பெருமாக்கடவையானே
பேறாயிரம் தரும் பென்னம் பெரியனே
வாழையடி வாழக் காத்திடும் கொம்பா
வயித்துக்குசாமி சோறிடும் நம்பா

எங்கா சாமி
தங்கா சாமி
எங்கும் சாமி
பொங்க வேணும்

மூலை வரம் போரம் செல்லா நீ
முடுகி வளை நல்ல கண்டே
ஓடி நட கண்டே செல்லா நீ
உறுதியுள்ள காலாலே
தள்ளாடித் தள்ளாடிச்
செல்லன் சாய்ந்தாடிப் போறாண்டா

செல்லன் நடந்த நடையின்று
சொல்ல வொண்ணா அன்ன நடை
இந்த நடை செல்லனுக்கு
இன்னுமுண்டோ அன்னநடை

மொட்டைக் கறுப்பன் முளியனெடுத்து
முன்னம்பின்னம் பக்கம் அள்ளி விதைத்து
தெட்டத் தெளியனாய் வீசி எறிந்து வர
தெல்லுத் தெல்லாகவே ஓடி வா செல்லா
முன்னாடி முன்னாடி வையடா வையடா
மெத்தவுனக்குக் கொஞ்சம் பஞ்சியடா

இந்தப் பயிரு நம்ம பயிரு
எந்த ஊருக்கும் செல்லப் பயிரு
சொந்த பந்த மெல்லாம் சோபிக்கும் பாரு
சோவென மாரி தந்திடும் சோறு
தள்ளாடித் தள்ளாடிச் செல்லன்
சாய்ந்தாடிப் போறாண்டா

மேற்படி பாடலில் இசைக்கு வரமாகும் கோமள ஸ்வரங்கள் அதிகம் நனி சொட்டுகின்றன. எவரையும் மயக்கவல்லது.

ஸட்ஜம் (சுருதிக்காக)
சுத்த ரிஷபம்
சாதாரண காந்தாரம்
சுத்த மத்திமம்

பஞ்சமம் (சுருதிக்காக)
சுத்த தைவதம்
கைசிகி நிஷாதம்

பாடலின் இரஞ்சகத்தின் பொருட்டு இடையிடையே நாட்டுப்பாடல்களுக்கு மட்டும் தீவிரஸ்வரங்கள் வருவதுமுண்டு. காரணம் நாட்டுப்பாடல்கள் இலக்கணக் கட்டுப்பாட்டுக்குள் அமைவதில்லை. இருந்தபோதும் மண்ணுக்குரிய பண் வரமாகிறது.

கர்நாடக சங்கீத்தில் இராகம் எவ்வளவு முக்கியமோ அவ்வாறே தாளமும் முக்கியமாகும். இங்கு மருத நிலப் பண்ணோடு, ஏழு அட்சர ஜதி வருமாறு பனாக்கைக் குளத்தருகே மிகவும் புராதன காலந்தோறும் பாடப்பட்டு தற்போது வழிக்கொழிந்து போன சீலாப்பட்டைப் பாடல் மத்திம சுருதியில் கர்ணபரம்பரைப் பாடலாக இப்பொழுது பார்க்கலாம்.

ஏற்கனவே பார்க்கப்பட்ட பாடல் பஞ்சம சுருதியில் பாடப்படுவதாகும்.

இதன் பிரகாரம் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பாடுவதாக இராகம் வாலாயமாகிறது. சீலாப்பட்டைப் பாடல் மத்திம சுருதியில் பாடப்படுவதனால் ஆண்கள் மட்டுமே பாடவும் கூடவும் முடிகிறது.

கர்நாடக சங்கீத இசையில் பஞ்சம சுருதி, மத்திம சுருதி இராக சாம்ராஜ்யம் வலிவடக்கு மக்களிடையே பனாக்கைக்குளம் தோண்டுவதற்கு முன்னமேயே மருத நிலப் பண்களாகப் பிரசித்தம் பெற்றுள்ளது. நாட்டுப்பண் வலி வடக்கில் பிரவாகிக்கிறது. எப்படியெனில்

"மன்னு மளிகள் மலர்தேடி மதுவையுண்டு வரைதோறும்
பன்னு சாரலவை யெங்கும் பற்றியார்க்கும் வகையே போல்
முன்னமோசை பலவாகி முழுதும் ஹோய் மிடறொன்றாய்த்
தென்ன வெனும் இசைவளர்த்துப் பண்ணாமாறு தேன் போல இனிக்கும்"

இதன் பொருள் யாதெனில், பல பூக்களிலிருந்தும் தேனீக்கள் தேனைச் சேர்க்கின்றன. அப்படித் தேனைச் சேர்க்கும் போது ஒலிக்கின்ற இனிய ஓசைபோல வெவ்வேறான ஒலிகளை ஆராய்ந்து பொருத்தமுள்ள ஒலிகளில் சஞ்சரித்து ஒரே சுருதியில் இசையைப் பண்ணார வளர்ப்பதனால் தேன் போன்ற மதுரம் பொருந்தியதாய் பண்ணாகிறது. பாடலாகிறது, மருதம் பாடலை வடிவமைக்கிறது. மருத நிலப்பரப்பிலே பூத்திருக்கும் பூக்களிலே வண்டுகள் எழுப்புகின்ற பண்போல பனாக்கை வயல்களிலே உழவர்கள் வயல் நிலங்களில் பண்பாடுவர். வண்டு போல வண்டாடிக் கொண்டாடுவர். ஏகாந்தமான சுருதி வாலாயமே கிராமிய மக்களைப் பாட வைத்தன. கௌசிகம், காந்தார பஞ்சமம், பியந்தைக் காந்தாரம், கொல்லி தக்கேசி

இந்தளம், சீகாமரம் ஆகிய இராகங்களும், புன்னாகவராளி, குறிஞ்சி, ஆனந்தபைரவி, முகாரி, மோகனம், பூபாளம் ஆகிய இராகங்களும் வலி வடக்கு கிராமிய மக்களின் வாழ்வியலுக்கு வல்லமை சேர்த்த இராகங்களாகும்.

**சீலாப்பட்டைப்பாடல்**

(அளவெட்டி மண்ணுக்குரியது)

தானா னானா தன்னா னானே
தன்னா னானா தன்னா னானே
தான னானா தன்னா னானே
தன்னா னானா தன்னா னானே
கொளத்திலே நல்ல தண்ணீ மொண்டு
களத்திலே அள்ளிக் கொட்டு முட்ட
குப்பத்து மேட்டு ஐயனாரே
பக்கத்து வாறா ரோ மெள்ள (தானனானா)

கொளத்துத் தண்ணீர் இளசு நாத்துக்கு
வளத்து நிமிரச் செய்யச் சொல்லும்
நிலத்து வாசி மொட்டக் கறுப்பன்
நாளைக்கு வருவான் மெள்ள மெள்ள.

சீலாப்பட்டையில் அள்ள அள்ளவே
செவத்தை உடம்பு வேர்த்துக் கொட்டுமே
கூழாவடியான் சேர்ந்த தங்கம்
கொடுத்து வைச்ச நல்ல தங்கம்

ஆசையோடை இழைச்ச பட்டை
அள்ள அள்ள மனசைக் கிள்ளுது
தோசை சுட்டுக் கொண்டு வாறார்
துள்ளு மீசைச் சுப்பனாரே
பயிரைப் பாரு வயலைப் பாரு
பச்சைப் பெருமாள் மூச்சைப் பாரு
பாயிரண்டு இழைப்பார் பாரு
பொலியடிக்கும் பறை முட்ட முட்ட

பென்னாம் பெரிய குளத்து ஐயன்
பெருமாக்கடவை பிள்ளையைப் பாரு
சின்னஞ் சிறிய வயலு கூட
சொல்லி விளையும் நெல்லைப்பாரு

தங்கச்சிப் பிள்ளை ஆச்சிப்பிள்ளை
தாளிச்ச கொழம்பு நெஞ்சை அள்ளுது
செங்கமலச் சோத்துக்கு குடாவரையான்
சேலைகட்டி விளையும் பாரு.

தான னானே தன்னா னானே
தன்னா னானே தன்னா னானே

மேற்படி பாடல் குறிஞ்சி இராகத்தில், மிஸ்ர சாபு (மிசிரிம்) தாளத்தில் பாடப்படுகிறது. பல நாக்குடைய பனாக்கைக் குளமே வலி வடக்கில் மிகப்பெரிய குளமாகும். சீலாப்பட்டையால் அள்ளி இறைப்பதற்காக பல நாக்குடைய சீலரி வாசல் கட்டப்பட்டுள்ளது. அந்த வாசலிலே இரண்டு படிகள் செப்பனிட்டு வரப்பாக்கியிருப்பார்கள். இரண்டு சோடி ஆம்பிளைகள் (ஆண்கள்) இரண்டு படிக்கல்லுகளிலும் நின்று கொண்டு, பாடிப் பாடி ஆடி ஆடி குனிந்து எழும்பி தான (தகிட) னானா (தகதிதி) நடையிலே ஒரே சீராக பாடலும் தாளமும் தண்ணீரும் இறைப்பும் வயலுக்குள் ஓடிப்பாயும்.

இப்பாடலானது பற்பல வருடங்களாகச் சந்ததி வாயிலாக ஒப்படைக்கப்பட்டு, காத்தார், கறுத்தார், சின்னார், முனியார், வேலர், வேலாத்தையார், சின்னப்பர், காசியர், நாகர், அருணர் வாயிலாக யாம் பாடவும் பகிரவும் தெரிந்து கொண்டோம்.

கர்நாடக இசையில் இந்த சீலாப்பட்டைப் பாடலும், இதன் பாடலாலும், தாள நடையாலும் இராக தாள ஆடல் பாடல் முறையாலும் மாவிட்டபுர மாருதப் புரவீக வல்லி கால ஸப்த விநாயகரில் ஒன்றாகிய பெருமாக் கடவை ஸ்தாபித்த காலத்தில் பதிவாகிறது. இந்தப் பாடல்களைப் பாதுகாப்பவர்களாக சம்பந்தப்பட்ட பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள், நூலகங்கள் இருப்பின் பெரும் புண்ணியமாகும். கிராமிய மக்களுக்கான இசை ஞானத்தையும், தாள ஞானத்தையும், மொழியாற்றலையும் நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய இயற்கையே கற்பிக்கின்றது. புல்லாங்குழலை மூங்கிலும் காற்றும் வண்டுகளுமே உருவாக்கிற்று. இதற்கு முல்லை நிலம் வாய்ப்பாக அமைந்தது.

**பண்பாடலாறு ஆற்றுப்பாடல்**

இந்தப் பாடலும் அளவெட்டி அலுக்கை கும்பலையில் பன்னெடுங்காலமாகப் பாடப்பட்ட ஒரு கிராமியப் பாடலாகும். சின்னார் என்பவரினால் வாய் மொழி இலக்கியமாக சந்ததி சந்ததியாக இந்தப் பாடல் ஒப்படைக்கப்பட்ட கவின்தரு நாட்டார் இலக்கியமாகும்.

இந்தப் பாடலும் எந்தவொரு நூலிலேயும் தொகுக்கப்படவில்லை. இப்பாடலானது ஆடலோடு பாடப்படுவதாகும். காளி ஆச்சியை மையமாகக் கொண்டு சூலந் தாங்கிய மூவரும், சங்கேந்திய மூவரும், பறை உடுக்கு ஏந்திய இருவருமாக உத்தமி பக்தர் சாமி என்ற தாள நடை முழங்க வேப்பிலை மாலையுடன் கண்ணூறு பட்டநோய் தீர்க்கும் பாடலாக ஆற்றுப்படுத்துவதே பண்பாடலாற்றுப் பாடலாகும்.

குறிஞ்சி இராக பாவம் நிறைந்த, மிஸ்ர சாபு தாளப்பாங்கிலே வாய்மொழி இலக்கியமாக இந்தப் பாடல் ஒப்படைக்கப்படுகிறது. தாள நடை அபாரம்.

தானானே தன்னா னானே
தானானே தன்னா னானே

தன்னா னானே தன்னா னானே
தன்னா னானே தன்னா னானே

வா தாயே ஆச்சி யம்மா
வா தாயே ஆச்சி யம்மா
ஏ தாயே பா ராயோ
ஏ தேனும் ஆ காமல்
ஏ தாயே பா ராயோ
ஏதமின்றிக் காப்பாயே!

ஊதா சங்கை ஊதுவிப்பேன் ஊதும் சங்கால் தோதுரைப்பேன்
ஏது ம் நடந்தால் தாங்க மாட்டேன் ஓதும் வாயால் பாடமாட்டேன்
(வா தாயே)

கொவ்வைக் கனியே செவ்வாய் சிவப்ப
தெவ்வாயுகந்த பழம் எல்லோ
ஒவ்வாதவர் கண்ணூறுபட்ட நொவ்வாதவ எங்கள் தங்கம்
(வா தாயே)

செக்கச் சிவந்த மேனியிலே சக்கர நோயி பட்டதேனோ?
பக்க வாத ரோக மென்ற மொக்க நோயில் படுத்ததேனோ?
(வா தாயே)

மயிலிட்டியின் கண்ணே பேறாகும் ஆழக் கடலிலே விளையும் மீன்களின் சாம்ராஜ்ஜியம் அவற்றைப் பிடிப்பவர்களுக்கு வசமாகும் படியாக வாய் மொழி இலக்கியமாகி இசைக்கு அடித்தளமிடுகிறது. கிராமியம் இராக தாள வார்ப்போடு பிரவாகிக்கிறது. இசைப்பாரம்பரியம் இசையோடு பதிவாகிறது.

**மீன்பிடிப் பாடல்**

ஏலேலோ ஐலசா ஏலேலோ ஐலசா
ஏலேலோ ஐலசா ஏலேலோ ஐலசா

தெந்தானா தெய்யாகோ தெந்தான தானா
ஓடியா ஓடியா ஓடியா ஓடியா
தெந்தானா தெய்யாகோ தெந்தானாதான
ஓடியா ஓடியா ஓடியா ஓடியா
கடலுக்குள் ஆயிரம் மீன்கள் விளையுது
ஓடியா ஓடியா ஓடியா ஓடியா
கண்ணுக்குத் தெரியாமல் ஓடி மறையுது
ஓடியா ஓடியா ஓடியா ஓடியா
கலையாமல் கொள்ளாமல் காத்திடுமையா
ஓடியா ஓடியா ஓடியா ஓடியா
கைபொலிய அள்ளித் தாருமையா

ஓடியா ஓடியா ஓடியா ஓடியா

ஒன்னை நம்பியே ஆயிரம் இருக்கு
ஊரு செழிக்கவே தேரு இழுப்போம்
கடலிருண்டு அலைபுரண்டு கௌவிக்கொண்டு வருகுதம்மா
உங்க ஆத்தாளை நனையுங்கடி உங்க ஆளுங்களை எல்லாம் கூப்பிடுங்கடி
கும்பழா பாரை மணலை வாளை கயல்முரல் சீலாதிரளி சுறா
கோலம் சிறக்க ஓடி வருகுது துடுப்பெடுத்து வலியுங்க சாமி

மேற்படி மீனவர் பாடல் திஸ்ர நடையில் சம்மாட்டிமாரின் நடையுடை பாவனைக்கேற்ற விதமாக மீன்வலை இழுக்கப்பட்டு மீன்கள் அகப்படுமாறு மீனவர்களை உற்சாகமூட்டுவதாய் அமைந்துள்ளது.

கர்நாடக சங்கீதம், பண்ணிசை, வாத்திய இசை வருவதற்கு முன்னதாக நாட்டார் பாடல் வலிவடக்கு உட்பட ஏனைய இடங்களிலும் ஆட்சி புரிந்துள்ளது.

**உலக்கைப்பாடல்**

அண்மையில் மிகவும் பிரபல்யமடைந்த ஒரு நாட்டார் பாடல் இதுவாகும். இடைநிலைப் பாடத்திட்டத்தில் கடந்த ஐந்து வருடங்களாக மாணவர்கள் மத்தியில் அடிக்கடி உச்சரிக்கப்பட்ட பாடல் இதுவாகும்.

ஸகபதநிஸ்

ஸ்நிதபகஸ என்ற ஆரோகணத்தினையும் அவரோகணத்தையும் ரஞ்சகத்தின் பொருட்டு வேறு சில ஸ்வரங்களையும் உள்வாங்கிய ஒரு நாட்டார் பாடலாகும். மங்களகரமான இராகம். பாரம்பரியமாக வந்த பண்பாட்டுப்பாடல்.

லக்கை லாலாக்கை
லக்கை லாலாக்கை
லக்கை லாலாக்கை

உலக்கை போடு போடு
போடு போடு நல்லாப்போடு
பவுத்திரமாய் வைச்சுப்போடு
கோலத்துக்குக் கொஞ்சமாவு
வறுத்தெடுக்கக் கொஞ்சமாவு
அப்பத்திற்குக் கொஞ்சமா இடி
யப்பத்திற்குக் கொஞ்ச மாவு
போடு.. போடு... போடு...
நீதபா கொஞ்சம் நீதபா

பச்சரிசி பச்சரிசி பச்சரிசி பச்சரிசி
போடு போடு போடு

பாக்கு வெத்திலை எல்லிப்போல

பச்சைப் பாக்கு எல்லிப்போல
நாக்கிறுக்க எல்லிப்போல
நல்லா வைச்சுப் பொத்தித் தா

(உலக்கை போடு)

மச்சானை அள்ளிக் கொட்டு ஏஹே
மானம்பூ வெள்ளிப் பந்தல் ஓஹோ
அச்சாறு ஊத்தி வைக்க ஏஹே
அம்மனைக்கு மதியம் போலப் போவோம்

சூவில் பனங்கட்டியும் ஏஹே
சுந்தபிரான் எள்ளுப்பாகு ஓஹோ
வாயிலே தேன் குடிக்க
வருத்தம் வந்தா சாறிடிக்க
வாசியான பாக்கெடுத்து
நறுக்கி நறுக்கி வையுங்கடி
நீ தபா கொஞ்சம் நீதபா
லக்கை லாலாக் கை லக்கை லாலாக்கை

இதைவிட, இன்னும் சொல்வதானால் விதைப்புப்பாடல், நாற்று நடுகைப்பாடல், களை பிடுங்கும் பாடல், நீரிறைப்புப்பாடல், அரிவு வெட்டுப்பாடல், பொலியடிப்பாடல், சூடு மிதிப்புப்பாடல், வைக்கோல் குவியல் பாடல், பயணப்பாடல், தாலாட்டுப்பாடல், ஒப்பாரி, சுடலைப்பாடல், காவடிச் சிந்து, மருத்துவிச்சுப் பாடல், திருமணப் பாடல், பூப்புப் புனிதப்பாடல், கரகப்பாடல், வசந்தன் பாடல், வாழ்த்துப்பாடல், பழமொழிப் பாடல், பார்வை பார்க்கும் பாடல், விடம் நீக்கிப் பாடல் என்று நூற்றுக் கணக்கான நாட்டுப்புறப் பாடல்கள், எழுத வாசிக்க முடியாதவர்களால் பழமை ததும்ப இசையோடு நமக்கு உபகாரமாக்கப்பட்டுள்ளது. இசையின் மூலாதாரத்திற்கு நம்மை அழைத்துச் செல்கிறது. அனுபவிக்கவும் செய்கிறது.

வாய்பாட்டுச் சங்கீதக் கலைஞர்களையும், வாத்திய இசைக் கலைஞர்களையும், கூடவே பாமரர் பண்டிதர் மேதாவிகளையும் பரவசப்படுத்திப் பங்காளிகளாக்கவதில் நாட்டுப்பாடல்கள் வலி வடக்கிலிருந்து ஆட்சி புரிகின்றன. இசையின் மூலமாக நாட்டுப் பாடல்களே வரமாகின்றன.

மேலும் பட்டி தொட்டி மூலை முடுக்குகளில் வயதிலே மூத்த தாத்தா பாட்டிகளிடையே கிடைத்தற்கரிய பல பொக்கிஷங்கள் நிரம்ப இன்னும் இருக்கின்ற நிலையில் சம்பந்தப்பட்ட துறைசார்ந்தவர்கள் கூடி நாடி வீடு தேடிச்சென்று திரட்ட முடியாதவர்களாய் இருப்பதனால் நாம் பூரணத்துவம் அடைவதற்கு இன்னும் பல காலம் நாம் பயணிக்க வேண்டியுள்ளது. சீலாப்பட்டைப் பாடல்கள் போலக் காலாவதியான நாட்டார் பாடல்கள் வரம் பெற வேண்டும்.

# Pancha Dasa Gamakas

**Sri Raga, M.A,**
**Queen Mary's College**
**(Autonomous), Chennai**
**600004.**

## ***Abstaact***

This article aims at knowing how Gamakas are embellished with note. it is helpful in rendering artistic indian music. The following few lines throw light on Pancha Dasa Gamakas such as spuritha, Kamitha, ahatha etc,.... It mentions the names of later concepts of Gamaka.

## ***Introduction***

The word Gamaka originated from vedic chants known as Agremens of Gamaks. Gamaka plays an important role in Hindustani and in Carnatic music. In indian classical music Gamakas are embellished with a note as continuous curve. There is no exaggeration to express the Gamaka made a primary position in melodic aspect of indian music. The artistic and polished rendering of music note of melody being ornamented with relevant Gamakas. The beginners intimate with Gamakas. It employs on the note for further enhancement. Some Gamakas are peculiar to vocal music. in the words of great masters Venkatamakhin and parsadeve.

"If a Swara is sung in such a way that the sound of Sruthi, On which a Swara is situated takes the sound of another Sruthi or its Chaya, it is known as gamaka"
- Venkatamakhin (1)

"When a note produces the colour of sruthis others than those which are its own, is known as Gamaka" - Parsadeva(1)

## ***History***

The word Gamaka was first coined by matanga. Naradisiksha refers to 10 excellences of privilidged and secular music. Various commentators on Indian music have mentioned different number of Gamakas. Parsadeva in his "Sangithasamayasara" and Haripala in "Sangeethasudha" speak out 7 Gamakas. Narada mentioned 19 Gamakas. Palkurusomanstha in his "Panditacharya" refers 22 Gamakas. Sarangadeva, Govinda Dikshitra, Vekatamakhi, Basavappa naik described 15 Gamakas.

*"Swarasya kampo gamakaha – srortochitta sukhavaha*
*Tasya bhedhastutipaha – sohuritha kampitasth*

*Leena andolithavli – tribhina kurulahataha*
*Ullasitha plavatascha – gampitha mudrthastha*
*Namithomisritaha pancjadasothi Parikithitaha"* - *Sarangadeva(2)*

Accrding to above sloka Gamakas are considered as 15, Called "Panchadasa Gamakas"

In $20^{th}$ century subbarama Dikshitar composer of "Sangita sampradaya pradharshing" explains" Panchadasa Gamakas" as follows.

## 1. Kamitha

Moving a note is such a way, for 1 aksharakala, as not to give the Chaya of the adjacent note above(1) means oscillating a note for 1 akshara kala in its own sthana said to be kampitha. In Sri raga Ga is Hrasvakampitha or small shake. It is denoted as "^^^" (Kampitha = Movement)

## 2. Lina

Halting on a note for 1Aksharakalas, and moving it so as to bringin the shade of a higher note (1). It means holding a note for 1 Alsharakala and Oscillating another Aksharakala (1+1=2 Alsharakalas) to bring the shade of higher note.

## 3. Andolitha

Moving a note for a duration of four Aksharakalas, and singing it in such a way as to bring the idea of an adjacent note (1), means holding a note for 1 Aksharakala and Oscillating three Aksharakalas (1+3=4 Aksharakalas)

## 4. Plavitha

Moving a note for a duration of twelve Aksharakalas, and singing in such a way to bring the idea of adjacent note(1)

## 5. Spuritha

Stressing the second note in the janta swasra combination in the ascending movement so as to produce the lower note in approximately $3/4^{th}$ Aksharakala duration is sphuritha (1). it is symbolize with 'According to subbaramadikshitar it is " "

Example – In Janta swara singing ss, So as to hear it as SnS. (Sphuritha = showing or movement in – place)

## Pratyaghata

Stressing the second note in janta swara combination, so as to produce the

higher note.

It is denoted as " ∴ " (1)

Example – singing SS hear it as SrS.

## 6. Tirupa

It is also called as Nokku. Halting one of the note with some stress for ½ Aksharakala duration, negotiating the higher note(1). It is denoted "W" in the raga Nata Ri in NSRS.

## 7. Ahatha –

It is defined to be of two variants

- Rava
- Kandimpu

## 1. Rava –

When a moving from a svara to a lower note, striking another note quickly such that lower note gets the Chaya of the struck note(1). It is denoted with "^"
Example – PM, descending as ppM

### 2. Khandimpu

When moving from a swara to a lower note, striking another note immediately, descending to another lower svarathana without a pluck, is called khandimpu(1) It is denoted with "  " Example – MR- MgR

## 8) Vali

Positioned on the same svarasthana to sound the shades of the higher swawras, by twirling or circular deflection of the string is vali (1) that means producing 1,2 or 3 svaras from same swarasthana by deflecting the string in acircular manner. It is denoted as "  " It belogs to fretted intruments.

## 9) Ullasitna

It is known as jaru or glide. This of two types.

- Ekkujaru
- Diggujaru

## 1. Ekku Jaru

From a svara, ascending and gliding the notes in between to man higher svaras, is an ekkujaru. The intermediary svaras should not be heard the explicitly, but shown as a latent shade(1). It is denoted as "/"
Example – Ascending from sadja to pancama, having the laten sounds of rsabha and

gandhara are not sighted explcity, But glidingly (Jaru = to glide)

## 2. Diggu Jaru

This is from avarohana and is opposite of ekkujaru. Descending and gliding the notes in between to any lower svara, is an diggujaru(1). It is denoted as "\".

## 10) Humpitha

This is also known as Gumpitha. It involves Expanding the nada with a hum, from the beginning to the end, the voice being broadened in the arohana and decreasing in the avarohana(1). (Humpitha = Producing the sound hum)

## 11. Kurula

This is of two types

- Odigimpu
- Orayika

## 1. Odigimpu

This is similar to jaru of vocal music. Producing the higher note of sounding the second note from a particular svarasthana (1). It is denoted as " ." It belongs to veena

Example – producing Ga in RI, MA in GA

## 2. Orayaka

Halting on a note, and coming down with the latent shades of the notes above it (1). Example – SNDP = SrNsDnP.

## 12. Tribhina

While playing Veena. Placing the left – hand finger on a svarasthana across the sarani, pancham and mandram and with right hand placing the finger on all 3 strings simultaneously is tribhina(1). It belongs to fretted instruments.

## 13. Mudritha

Movement obtained by closing the mouth and singing the note is mudritha(1). It pertains to vacal music.

## 14) Namita

This is singing in a slender tone means shaking the svaras that are obtained when singing with a sensitive tone(1) by means of reducing the sound is Namita.

## 15) Misrita

## கலாபூஷணம், சிற்பக் கலாநிதி. செல்லையா சிவப்பிரகாசம்



( ஓவியம் – சிற்பம் )

(21.06.1928 – 09.07.2016)

பல்வேறுபட்ட கலைஞர்களை உருவாக்கிய கலாபூசணம், சிற்பக் கலாநிதி செல்லையா சிவப்பிகாசம் அவர்கள் அளவெட்டி வடக்கினைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இவர் செல்லையா தெய்வானைப்பிள்ளை தம்பதிகளுக்கு மூன்றாவது பிள்ளையாக 1928.06.21 ஆம் திகதி பிறந்தார். 1960 ஆம் ஆண்டில், பயிற்றப்பட்ட ஆசிரியையான, மல்லாகத்தைச் சேர்ந்த, வேலணை மத்திய கல்லூரியில் ஆசிரியையாகக் கடமையாற்றிய, அன்னலட்சுமி சரவணமுத்துவைக் காதல் திருமணம் செய்து கொண்டார். துஷ்யந்தன் மற்றும் அனுஷ்யந்தன் ஆகியோரை, முறையே 1961, 1966 ஆம் ஆண்டுகளில், குடும்ப வாழ்வின் தவப்பயனாகப் பெற்றெடுத்தனர். இவரது பிள்ளைகளான துஷ்யந்தன் மற்றும் வைத்தியக் கலாநிதி. அனுஷ்யந்தன் ஆகியோரும் ஓவியக் கலையில் வல்லவர்களாகவே விளங்குகின்றனர்.

இவர் தனது சிறுவயது முதலே சித்திரம் வரைவதிலும் சிற்பங்களை ஆக்கு வதிலும் ஆர்வம் கொண்டவராக விளங்கினார். இவர் அளவெட்டி, சீனன்கலட்டி, ஞானோதய வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியினையும் தெல்லிப்பழை மகாஜனா கல்லூரியில் இடைநிலைக் கல்வியினையும் கற்றார். பின்னர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள "வின்சர் ஆர்ட்" சித்திரக்கழகத்தில் இணைந்து தனது சித்திர, சிற்பக் கலையைக் கற்றுத் தேறினார். பின்பு 1952, 53 ஆம் ஆண்டுகளில், இவருடைய மூத்த தமையனார் கோபாலசுவாமி மகேஸ்வரி குடும்பத்தினரின் அரவணைப்பில் கொழும்பு அரசினர் நுண்கலைக் கல்லூரியில் ஓவியம், சிற்பம், உயிரோவியம் ஆகிய கலைகளை பட்ட மேற்படிப்பாகக் கற்று டிப்ளோமா பட்டத்தைப் பெற்றார்.

1950 ஆம் ஆண்டளவில் கலைப் புலவர். நவரத்தினம் மற்றும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் அதிபராகக் கடமையாற்றிய திரு. நைல்ஸ் ஆகியோர் இவருடைய சித்திர, சிற்பத் திறமையைக் கண்டு யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் சித்திரப் பாட ஆசிரியராக இணைத்துக் கொண்டனர். அது மட்டுமல்லாது திருமதி. மாலதி சிவக்குமார் அவர்களினால் தொடங்கப்பட்டு நிர்வகிக்கப்படும் கொழும்பு நடேஸ்வரா நுண்கலைக் கல்லூரி, வவுனியா தேசியக் கல்வியியல் கல்லூரி ஆகியவற்றில் வருகை தரு விரிவுரையாளராகக் கடமையாற்றியதோடு யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்

இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் வருகைதரு போதனாசிரியராகவும் கடமை யாற்றினார். இவர் சிறந்த ஓவியக் கலைஞனாகவும் சிற்பக் கலைஞனாகவும் முத்திரை பதித்தார்.

ஓவியக் கலையையும் சிற்பக் கலையையும் அழிய விடாது பேணிப் பாதுகாக்க வேண்டும் என்ற தனது இலட்சியத்திற்காகத் தனது வாழ் நாட்களை இக்கலை களுக்காக அர்ப்பணித்தார். நீரிழிவு நோயின் காரணமாக 2004 ஆம் ஆண்டு ஒரு காலை இழந்த போதும் தனது இலட்சியத்திற்காகத் தொடர்ந்து ஐம்பது வருடங்களுக்கு மேலாக கலைப் பணியாற்றினார். இவர் நூற்றிற்கு மேற்பட்ட மாணவர்களை உருவாக்கியுள்ளார். யாழ்ப்பாணம், வன்னிப் பெருநிலப்பரப்பு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு போன்ற பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் சித்திரப் பாட ஆசிரியர்களாக இவருடைய மாணவர்கள் பலர் கடமையாற்றுகிறார்கள்.

100க்கு மேற்பட்ட உயிரோவியங்களையும் 200க்கு மேற்பட்ட சுவரோவியங் களையும் 200க்கு மேற்பட்ட சிற்பங்களையும் ஆக்கிய பெருமை இவரைச் சாரும். இலங்கையின் சரித்திரப் புகழ் பெற்ற நல்லூர் கந்தசாமி கோவிலில் 1984 ஆம் ஆண்டு முதல் தில்லை நடராஜப் பெருமான், 108 சிவதாண்டவங்கள், முருகனின் ஆறுபடை வீட்டுக் காட்சிகள், ஏழு வர்ணக் குதிரைகள் பூட்டிய தேரில் சூரியபகவான், ஐயப்பன் திருவுருவம் போன்ற திருவுருவங்களை, சுவரோவியங்களாக வரைந்து சரித்திரத்தில் இடம் பிடித்தார். இவரது ஓவியங்களும் சிற்பங்களும் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள ஆலயங்களிலும் பாடசாலைகளிலும் இருப்பதைக் காணமுடியும்.

இவரது கலைத் திறனைப் பாராட்டித் திருமுருக கிருபானந்தவாரியார், பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா, குன்றக்குடியடிகளார் ஆகியோர் வாழ்த்து மற்றும் ஆசிச் செய்தி களை அனுப்பியுள்ளமை குறிப்படத்தக்கது.

**இவரது கலைப் பணிக்காக கிடைத்த விருதுகளில் சில.....**

1. "கலாபூசணம்" - 1996
2. "சிற்பக் கலாநிதி" - 1965
3. "சிற்பக்கலாமணி"
4. "சாகித்திய விருது" - 1996 ஆம் ஆண்டிற்கான விருது
5. "யாழ்ரத்னா" - 2000 ஆம் ஆண்டு, யாழப்பாணக் கலாசாரப் பேரவை
6. "திருத்தொண்டர் மாமணி" - 2005 ஆம் ஆண்டு, உலகசேக்கிழார் மாநாடு
7. "கலைச்சுடர்" - 2005 ஆம் ஆண்டு கலாசாரப் பேரவை

## இவருக்குக் கிடைத்த தங்கப் பதக்கங்களும் கௌரவங்களும் பட்டங்களும் அதற்குரிய படைப்புக்களும் சில...

| இல | கிடைத்த வருடம் | வழங்கப்பட்ட படைப்பு | வழங்கப்பட்ட பட்டம், கௌரவம் - படைப்பு காணப்படும் இடம் - | தங்கப் பதக்கம் வழங்கிக் கௌரவித்தவர்கள் - |
|---|---|---|---|---|
| 01 | 1960 | பாவலர் துரையப்பா பிள்ளையின் உயிரோவியம். | தெல்லிப்பழை, மகாஜனாக்கல்லூரி | அமரர் சீ.சீ.பாலசிங்கம் |
| 02 | 1963 | பராசக்தியின் உயிரோவியம் | மருதனார்மடம், இராமநாதன் கல்லூரி | நடராஜா ஞாபகார்த்த விருது - இராமநாதன் கல்லூரி, சுன்னாகம். |
| 03 | 1965 | பாவலர் துரையப்பா பிள்ளையின் சிலை. | "சிற்பக் கலாநிதி" | பாவலர் துரையப்பா பிள்ளை நூற்றாண்டு விழாக் குழு. |
| 04 | 1968 | அமரர்.து.ஜெயரட்ணம் அவர்களின் உயிரோவியம். | தெல்லிப்பழை, மகாஜனாக் கல்லூரி. | பாவலர் துரையப்பா பிள்ளை நூற்றாண்டு விழாக் குழு. |
| 05 | 1974 | சேர்.பொன்.இராமநாதன் அவர்களின் உருவச்சிலை. | யாழ்ப்பாண மாநகர சபை முன்றல். | பிரதமர் சிறிமாவோ பண்டார நாயக்கா |
| 06 | 1975 | வணக்கத்திற்குரிய லோங் அடிகளார். | யாழ்ப்பாணப் பொது நூலக முன்றல். | யாழ்ப்பாணம், புனித பத்திரியார் கல்லூரி பழைய மாணவர் சங்கம் சார்பாக இத்தாலியத் தூதுவர். |
| 07 | 1976 | முன்னாள் மேயர். துரையப்பாவின் வெண்கலச் சிலை. | யாழ்ப்பாண மாநகர சபை முன்றல். | முன்னாள் அமைச்சர். கே.பி. இலங்கரத்தினா அவர்கள். |
| 08 | 1981 | பண்டைய மன்னன், பண்டாரவன்னியன். | வவுனியா மாவட்டச் செயலக முன்றல். | தமிழகச் சட்டசபைத் தலைவர் உயர்திரு.இராசாராம் அவர்கள். |
| 09 | 1982 | பிள்ளையாருடைய 32 அருட் திருவுருவங்கள் | அளவெட்டி, கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில். | அளவெட்டி, கும்பிளாவளைப் பிள்ளையார் கோவில் தர்மகத்தா சபை. |
| 10 | 1999 | பிள்ளையாருடைய அருட் திருவுருவங்கள் | "சித்திரக் கலாநிதி" கொழும்பு, கப்பித்தா வத்தைப் பிள்ளையார் கோவில். | கொழும்பு, கப்பித்தாவத்தை பிள்ளையார் கோவில், பிரதம குரு, வணக்கத்திற் குரிய சண்முகரட்ணசர்மா அவர்கள். |
| 11 | 2000 | தேரில் பகவத்கீதைக்காட்சி திருமாலுடைய 10 அவதாரங்களும் மற்றைய திருவுருவங்களும். | "சாந்தம்" - வவுனியா சத்ய சாயி பாபா சேவா நிலையம். | "சாந்தம்" - வவுனியா சத்ய சாயி பாபா சேவா நிலையம். |
| 12 | 2001 | புனிதர் சவேரியருடைய திருவுருவம் | பேரயர் இல்லம், யாழ்ப்பாணம். | வணக்கத்திற்குரிய யாழ்ப் பாண ஆயர் பெருந்தகை. |
| 13 | 2001 | சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரியின் நிறுவுனர் அவர்களின் உருவச் சிலை. | "சிற்பச் சக்கரவர்த்தி" சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரி முன்றல். | சுழிபுரம் விக்ரோரியாக் கல்லூரிப் பழைய மாண வர்கள் சங்கம். |

8. “கௌரவ ஆளுநர் விருது” - 2005 ஆம் ஆண்டு

9. “ஜனாதிபதி விருதுகள்”-2006ஆம் ஆண்டு வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம்

10. 1960 ஆம் ஆண்டு இடம் பெற்ற கலைக் கண்காட்சியில் பாராட்டுப் பத்திரம்


11. World Refugee Day - 2000 ஆம் ஆண்டிற்காக பாராட்டுப் பத்திரம்

ஓவியக் கலைஞராகவும், சிற்பக் கலைஞராகவும் திகழும் இவரது தெய்வீகப் பணியில், இவருடைய இளைய மகன் வைத்திய கலாநிதி அனுஷ்யந்தன் சிறு வயதிலேயே இவருடன் இணைந்து புகழ் பெற்ற நல்லூர் கந்தசுவாமி கோயில் போன்ற பல இடங்களில் ஓவியங்களை வரைந்துள்ளார். சிவப்பிரகாசம் ஐயாவினுடைய புகழினை நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் தங்கள் கைவண்ணம் மூலம் வெளிக் காட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. இவருடைய மாணாக்கர்களில் யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரி சித்திர பாட ஆசிரியர் திருமதி சிவகௌரி பாக்கியராஜா அவர்கள் குறிப்பிடத்தக்கவர்.

இறுதி மூச்சுவரை கலைப் பணியாற்றிய இவர் தனது எண்பத்தொன்பதாவது வயதில் 2016 ஆம் ஆண்டு ஆடி மாதம், 9 ஆம் திகதி பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவினுடைய பாதாரவிந்தங்களைச் சேர்ந்தார்.

நல்லூர், முத்திரைச் சந்தைச் சந்தியில் அமைந்திருந்த. கலாபூஷணம். செல்லையா சிவப்பிரகாசம் அவர்களின் கைவண்ணத்தில், 1974 இல் உருவான ஆரம்பகால, சங்கிலிய மன்னனின் உருவச்சிலை.

உசாத்துணை :- பேட்டி :- வைத்திய கலாநிதி.. சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன். மற்றும் இணையங்கள்.



## மண்ணுக்குப் புகழ்சேர்க்கும் மங்கை

அருந்ததி இசையினுக் கரசியென்(று) ஓதிடில்
அறியாதோர் எவரும் உண்டோ
பெருமைஎம் மண்ணிற்கும் பார்புகழ் கொண்டிசைப்
பண்ணினால் நெஞ்சை ஆளும்
திருமிகு மேதையவர் சீர்பெறும் இசையினில்
தெய்வவருள் கொண்டவர் சீலர்
கருவினில் திருவுடைக் கோன்மையும் பெற்றவர்
கானமழை பொழியுஞ் செல்வி

பிஞ்சினில் பள்ளியில் பயில்கின்ற போழ்திலும்
பற்பல பரிசில் வென்றார்
தஞ்சமென் றாயினார் இசைபதம் அன்னவர்
சாற்றிடில் பொய்மை இல்லை
துஞ்சாதே இன்றுவரை சங்கீதத் தொண்டினைத்
தொடருகின்ற சாதனைப்பெண்
கொஞ்சுதமிழ்ப் பண்ணவர் குரல்வழி பொழிந்திடில்
காதுதேன் மாந்து மன்றோ!

எத்தனை பரிசில்கள் எத்தனை புகழாரம்
எத்தனை கௌரவிப்பு
வித்தகம் ஓர்ந்துமே வழங்கினார் விற்பனர்
வரிசையில் தொடருதின்னும்
பந்தியில் முந்தியமர் பாக்கியம் கொண்டவர்
பாடுமெழிற் குயிலு மானார்
எந்திரம் போலசை விழந்துமே செவிகொள்வோர்
ஏகமன தாக மொழிவர்

தான் பெற்ற இசைஞானம் தொடர்ந்துமே நிலைபெறத்
தன்வழி சீடர் கொற்றம்
வானுயர் வடைந்திடு வாறெனப் புகற்றிட
வரித்ததாம் பணியில் வென்று
சான்றாண்மை காட்டிடும் தாயவர் வாழ்வினில்
சகலரும் இசையைக் கற்க
வேண்டுமென் றெண்ணியே வழங்கினார் தாய்மொழி
வேறெனக் கொண்ட பேர்க்கும்

வானொலி தொலைக்காட்சி வரலாற்றில் அருந்ததி
வகித்தபெரும் பங்கும் அன்னார்
வாணாளில் மூபத்தாம் ஆண்டுகள் வெவ்வேறு
வகிபாகம் கொண்டு சேவைப்
பான்மையி லானது பல்லோரும் ஏற்றிட
வெற்றியோ டமைந்த தாகும்
தானெனத் தனக்கொரு தனிவழி கொண்டதமிழ்
தலைமகள் இசைக்கென் றானார்

தேசிய நுண்கலைக் கல்லூரி தன்னிலே
தகுதிகாண் நிலையு ணர்ந்து
தேசத்தின் ஆளுனர் தாங்கிடச் செய்தனர்
திருநாமம் மன்றி லொன்றில்
பேசிடத் தக்கதாம் பதிவது அருந்ததிப்
பெயர்நிலை பெற்ற பேறாம்
பேசிடும் வரலாறுப் பாக்கியம் தமிழர்க்கு
புண்ணியம் செய்த பெண்ணாள்

நாட்டிய நாடகம் நாடறிய நல்கினார்
நீள்கடல் வென்று நின்றார்
மீட்டுநல் வீணையின் வித்தகந் தன்னிலும்
மாணவர் தம்மை ஊக்கிக்
காட்டினார் மன்றிலில் கேட்பவர் நறையுண்ணக்
கைவந்த கலையு ம..தாம்
மேட்டிமை யனைத்திலும் முதன்மையென் றானதிரு
மண்ணிற்குப் பெருமை யவரே



காப்பியக்கோ ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

## கலாசூரி, தேசநேத்ரு கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன்

உண்மையில் சர்வதேச அரங்கில் இலங்கையைக் குறிக்கும் வகையில் தேசத்திற்கு சேவையாற்றிய கலைஞர்களின் குடும்பமாகிய திரு. திருமதி சிவசுப்ரமணியம் வீரலக்சமி தம்பதிகளின் ஐந்து புதல்விகளுள் இளையமகளாக 1946ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 24ம் திகதி கலாசூரி, தேசநேத்ரு கலாநிதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் பிறந்தார்.

அவர் தனது சிறுவயதில், இந்திய இசை மற்றும் நடனம் ஆகியவற்றில் தனது ஆர்வத்தைக் காட்டியதுடன் அந்தோனியிடம் (tutelage of master) கர்நாடக சங்கீதத்தையும் ராஜீவிடம் (veteran veena player) வீணையையும் கற்றுக்ககொண்டதுடன் கந்தையா ஜெயலக்சுமி மற்றும் பாலசுந்தரி பிரதலிங்கம் ஆகியவர்களிடம் நடனத்தையும் கற்றுக்கொண்டார். இவர் குரல் மேஸ்ரோ (maestro) மகாராஜபுரம் சந்தானம் மற்றும் தென்னிந்திய வீணை வித்துவான் மேஸ்ரோ(maestro) கல்யாண கிருஷ்ண பாகவதர் ஆகியோரின் மாணவியும் ஆவார்.

பாடசாலைக் காலத்தில் தன் திறனை வெளிப்படுத்தக்கூடிய மாணவியாக இருந்த அருந்ததி ஸ்ரீரங்கநாதன் கல்வியில் மாத்திரமல்லாமல் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளிலும் சிறந்து விளங்கியிருந்தார். அகில இலங்கைப் பாடசாலைக்கிடையிலான பாடல் போட்டியில் தொடர்ந்து இரண்டு ஆண்டுகளாகத் தங்கம் வென்றார். அவர் கலைவிழா, திருக்குறள் மனனம், பாடசாலை மட்ட பண்ணிசை போன்ற போட்டிகளில் பங்குபற்றுவதன் மூலமும் பதக்கங்களை வெல்வதன் மூலமும் சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களிடையே பாராட்டுக்களைப் பெறுவதன் மூலமும், நிகழ்ச்சிகளை ஒழுங்கமைப்பதிலும் தனது உள்ளார்ந்த திறன்களையும் தலைமைத்துவப் பண்பினையும் நிரூபித்துள்ளார்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் கர்நாடக இசை சங்கீத இசை நிகழ்ச்சிகளில் பங்கேற்பதன் மூலம் பாடசாலை மட்டத்திலேயே தனது இசைத்தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். கர்நாடக சங்கீதம், வீணை, பண்ணிசை மற்றும் மெல்லிசை (carnatic, vocal, cornatic veena, pannisai, and light songs) ஆகிய சங்கீதத்தின் நான்கு பிரிவுகளிலும் பங்குபற்றியதுடன் அதில் தனது திறமையை வெளிக்காட்டி வெற்றியடைந்த ஒரேயொரு தமிழ்க்கலைஞரும் ஆவார். கர்நாடக சங்கீத இசை மற்றும் வீணை வாசித்தல் ஆகிய இரண்டிலும் டிப்ளோமா தரத்தில் சித்தியடைந்து வட இலங்கை சங்கீதசபை (NCOMS) சான்றிதழையும் பெற்றார். அந்த நேரத்தில் இலங்கையின் கர்நாடக சங்கீதத்துறையில் இது மிகவும் உயரிய பரீட்சையாக இருந்தது.

1967 இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நுழைந்த இவர் பொருளியற்

துறையில் சிறப்புப்பட்டத்தையும் பெற்றுக்கொண்டார். 1947 இல் இலங்கை கூட்டுத்தாபனத்தின் தமிழ் சேவையில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராக தனது நீண்ட காலத்தொழில் வாழ்க்கையை ஆரம்பித்தார். அவரது அர்ப்பணிப்பு மற்றும் தொழில் மீதான ஆர்வம் அவரை தொழில் வாழ்க்கை ஏணியில் 1979 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சிக் கட்டுப்பாட்டாளராகவும், 1984 இல் இசை இயக்குநராகவும், 1994 இல் தமிழ்சேவை இயக்குநராகவும் மாறுவதற்கு உதவியது.

இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் சிறந்து விளங்கிய அருந்ததி ஸ்ரீரங்கநாதன் வருங்கால சந்ததியினருக்கு ஒரு வளமான பாரம்பரியத்தை விட்டுச்சென்றிருக்கிறார். கலை, கலாசாரம், ஒலிபரப்பு என்பன அவரது முக்கிய விருப்பத்தெரிவுகளாகும். இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தில் முப்பது வருடங்களுக்கும் மேலாக தனது பங்களிப்பை வழங்கிய அவர் ஒலிபரப்புத்துறையில் ஒரு முன்னோடி ஆவார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பணிபுரிந்த அவருடைய சமகாலத்தவர்கள் மற்றும் அவருக்கு கீழ் பணியாற்றியவர்கள் இங்கிலாந்து, கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, பாரிஸ் மற்றும் நோர்வே ஆகிய நாடுகளில் சொந்தமாக தமிழ் வானொலிச் சேவைகளை ஆரம்பித்துள்ளனர். அவரது இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்துடனான நாட்களில் அவர் 'வானொலி வானம்பாடி' (radio skylark) என்றே அழைக்கப்பட்டார். இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 75 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் வானொலியுடனான குறிப்பிடத்தக்க அவரது மைல்கல்லை முதன்மைப்படுத்தி (10CD) பத்து இறுவட்டுக்கள் வெளியிடப்பட்டன. அருந்ததி ஸ்ரீரங்கநாதன் தனது பதவிக்காலத்தில் வானொலி நாடகவிழாக்கள் மற்றும் இலங்கை பூராக இலங்கை வானொலி இசை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திருந்தார்.

அருந்ததி ஸ்ரீரங்கநாதனுடைய பங்களிப்புக்கள் பல்வேறு இடங்களிலும் பரவியிருந்தது. இலங்கையில் கலை மற்றும் கலாசாரத் துறையில் கர்நாடக சங்கீத பாடகர், வீணை வாசிப்பவர், கர்நாடக சங்கீத ஆசிரியர் என அவரது பங்களிப்பு வளப்படுத்தியது. சர்வதேச அரங்கில் வெளியிடப்பட்ட கல்விக்கட்டுரைகளைத் தவிர செய்தித்தாள்கள், பத்திரிகைகள் போன்றவற்றிற்கும் கட்டுரைகளை வழங்கினார்.

இலங்கை அரசியல் சமூகத்தினரிடையே கலாசாரத் தொடர்புகளை ஏற்படுத்திய மற்றும் கலாசார நிகழ்வுகளில் இலங்கையைப் பிரதிநிதித்துவப்படுத்திய இலங்கையின் சிறந்த கலாசாரத் தூதுவர்களில் இவரும் ஒருவராவார். இவர் அஷ்டலக்சுமி, இராமாயணம், சாகுந்தலம், நளதமயந்தி, அன்பே சிவம், தங்சைப்பெருங்கோயில் மற்றும் சகுந்த லீலா, மேகலா ஆகிய நாட்டிய நாடகங்களில் வசன கர்த்தாவாக இருந்த அதேவேளை அதற்கான இசையையும் வழங்கியுள்ளார். உலகம் பூராகவும் உள்ள நடனக்கலைஞர்களால் பரவலாக உபயோகப்படும் வர்ணம், பதம், கீர்த்தனம், தில்லானா போன்றவற்றிற்கு இசையை வழங்குவதிலும் மற்றும்

பாடல்களை இயற்றுவதன் மூலமும் சமகால இசையை வளப்படுத்த கணிசமான பங்களிப்பை இவர் வழங்கியுள்ளார். இந்தியக் காவியங்கள் மற்றும் புராணங்களின் கதை வரிகளுக்கு அவர் வழங்கிய குறை கூறமுடியாத கலையுணர்வு மற்றும் நுட்பங்கள் என்பன அருந்ததியின் திறனுக்கு கலை உலகில் இயல்பான பெயரை ஏற்படுத்திக்கொடுத்துள்ளது.

அருந்ததி ஸ்ரீரங்கநாதன் வேறுபட்ட இனங்களைச் சேர்ந்த இலங்கைக் கலைஞர்களை பொதுவான ஒரு மேடையில் கொண்டுவரும் திறன்கொண்ட மிகவும் மரியாதைக்குரிய இலங்கையின் கலைஞராவார். கலைகளை புத்துணர்ச்சியூட்டும் ஊடகம் மூலம் தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் அவர் என்றும் அழியாத பங்களிப்பை வழங்கியுள்ளார்.

அவர் தனது திறமையால் ஒரு ஆசிரியராகவும், கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகத்தின் வருகைதரு விரிவுரையாளராகவும், தமிழ் மாணவர்கள் மத்தியில் மட்டுமல்லாது சிங்கள மாணவர்கள் மத்தியிலும் கர்நாடக இசையைக் கற்பிப்பதிலும், பிரபல்யப்படுத்துவதிலும் ஈடுபட்டிருந்தார். அருந்ததி ஸ்ரீரங்கநாதன் கலாசூரி, விஷ்வப்பிரசாதினி, தேசநேத்ரு மற்றும் கலைச்செம்மல் ஆகிய கௌரவப்பட்டங்களைப் பெற்ற இலங்கையின் ஒரேயொரு தமிழ்க்கலைஞராவார். இந்த கௌரவப்பட்டங்கள் அனைத்தும் அரச தலைவராலேயே வழங்கி வைக்கப்பட்டன.

அருந்ததி ஸ்ரீரங்கநாதன் கட்புல மற்றும் அரங்கேற்றக் கலைகளை (visual and performing arts) தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் மேம்படுத்துவதற்காக 2004ம் ஆண்டு அரு ஸ்ரீ கலைக்கல்லூரியை (ARU Sri Art Theatre) ஆரம்பித்தார். இன்று இது உலகளவில் புகழ்பெற்ற புதுமையான கலை மற்றும் கலாசாரப் படைப்புக்களுக்கான ஒரு மையமாக மலர்ந்துள்ளது. சமகால அம்சங்களுடன் பாரம்பரியக் கலை வடிவங்களை வளர்க்கக்கூடிய இடமாக கலைக்கல்லூரியை (Theatre) உருவாக்குவதும் பழைய பாரம்பரியங்களை புதிய பொற்காலத்திற்கு கொண்டு செல்வதுமே அருந்ததியின் நோக்கமாகும். அருந்ததி தனது கலைக்கல்லூரியுடன் பயணம் செய்து மதிப்புமிக்க விழாக்களில் பங்குபற்றியுள்ளதுடன் பல சர்வதேச அமைப்புக்களுடனும் இணைந்து செயற்பட்டுள்ளார்.

அருந்ததி நான்கு தசாப்தங்களுக்கு மேலாக உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பரநாட்டிய அரங்கேற்றங்கள் ஆகியவற்றிற்கு பாடலைப் பாடுவதற்கான மிகவும் விரும்பப்படும் கலைஞராக இருந்துள்ளார். அவர் இலங்கையில் கிட்டத்தட்ட 98 சதவீத நடனக்கலைஞர்களுக்காகப் பாடியுள்ளார். 'அனுபவம்' என்ற DVD தயாரிப்பு அவரது கலைக்கல்லூரி கலைஞர்களால் உருவாக்கப்பட்டது. பெரும்பாலான அவரது படைப்புக்கள் you tube ல் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

அருந்ததியின் கணவரும், வைத்தியருமான Dr.P.ஸ்ரீரங்கநாதன் அவரது அனைத்து முயற்சிகளுக்கும் துணையாக வாழ்ந்துகொண்டிருக்கிறார். அவரது மூன்று மகன்களான சாரங்கன், சியாமளங்கன், ஸ்ரீகரன் ஆகியோர் நன்கு தகுதி வாய்ந்த இசைக்கலைஞர்களாக தமது தொழில் வாழ்க்கையில் மிளிர்கிறார்கள்.

## இலங்கையில் அவரது பங்களிப்புக்கள் ஒரு பார்வையில்....

1. இலங்கையில முதன்முறையாக 1975ம் ஆண்டு அக்காலத்தில் மிகவும் பிரபலமாக பேசப்பட்ட அவரது மாணவர்களால் பயிற்றுவிக்கப்பட்ட 50 வீணைகளின் சங்கமம்' என்ற நிகழ்வை வழங்கினார்.
2. இவரால் உருவாக்கப்பட்ட 'சேவா சங்கீதா' என்ற நிகழ்வை இலங்கை மன்றக்கல்லூரி தேசிய வானொலியான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் தேசிய தொலைக்காட்சியான இலங்கை ரூபவாகினி கூட்டுத்தாபனம் என்பன கூட்டாக இணைந்து வழங்கின. இது இந்தியா மற்றும் இலங்கையின் கலை வடிவங்களை இணைக்கும் ஒரு கலாசார நிகழ்ச்சியாகும்.
3. 1998ம் ஆண்டு இலங்கையில் 50வது சுதந்திரதினக் கொண்டாட்டத்தில் 'ஜன்மபூமி' என்ற நாட்டிய நாடகத்தை தயாரித்தமைக்காக சிறந்த தயாரிப்பாளர் விருதைப் பெற்றுக்கொண்டார். (இந்த நனட நிகழ்ச்சியில் அனைத்து இனங்களையும் சேர்ந்த 300 இற்கும் மேற்பட்ட நடனக்கலைஞர்கள் பங்கேற்றியிருந்தனர்)
4. களனிப் பல்கலைக்கழக அழகியல் கற்கைத்துறையால் உருவாக்கப்பட்ட பல் கலாசார விழாக்களின் குழுவை ஒழுங்கமைக்கும் ஒரு உறுப்பினராகவும் அக்குழுவில் கர்நாடக இசைபாடகராகவும் அவர் தன்னை பிரதிநிதித்துவப் படுத்தினார் (இந்த விழாவானது பல்வேறு நாடுகளிலும் இருந்து வந்த கலைஞர்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது.)
5. கலைமன்றத்தின் இசை மற்றும் நடனக் குழுவின் தலைவராக இருந்த காலத்தில் 100 உறுப்பினர்களைக் கொண்ட இசை நிகழ்வை உருவாக்கினார். இந்த நிகழ்ச்சியானது தேசிய மரபுரிமைகள் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் கலைக்கழகத்தால் ஏற்பாடு செய்து வழங்கி வைக்கப்பட்டது.
6. 2002 ஆம் ஆண்டு நோர்வே அரசாங்கத்தால் அனுசரணை வழங்கப்பட்ட 'அப்ரோ யுரேசியா' (afro eurosia) எனும் பல்கலாசார நடனநிகழ்வின் கலை இயக்குநராக இருந்தார். இந்த நிகழ்வில் நோர்வே மற்றும் கென்யா ஆகிய நாடுகளில் இருந்து வந்த கலைஞர்கள் பங்குபற்றியதுடன் இலங்கையின் பல்வேறு இனங்களைச் சேரந்த கலைஞர்களும் பங்குபற்றியிருந்தார்கள்.
7. 2005.09.13 அன்று கொழும்பிலும் 2005.12.09ல் கண்டியிலும் நடைபெற்ற பல்வேறு இனங்களிலிருந்தும் பங்குபற்றிய நல்லிணக்க கலாசார நடன நிகழ்வின் தயாரிப்பாளராகவும் கலை இயக்குநராகவும் இருந்தார்.
8. US aid அமைப்பால் அனுசரணை வழங்கப்பட்டு அனைத்து இனங்களைச் சேர்ந்த

60 கலைஞர்கள் பங்குபற்றியதும் கொழும்பு, காலி, அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு, அநுராதபுரம் ஆகிய இடங்களில் நடைபெற்ற celebrating seasonal rhythms across the barrier கலாசார நிகழ்வின் கலை இயக்குநராகவும் இருந்துள்ளார்.

9. சுனாமியால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான 'அவர்களின் குரலைக்கேளுங்கள்' என்ற நிகழ்வின் ஆலோசகராக இருந்துள்ளார். இந்த கலாசார நிகழ்வானது 2007ம் ஆண்டு யுனஸ்கோ அமைப்பால் அனுசரணை வழங்கப்பட்டது.

10. 2007ம் ஆண்டு அம்பாந்தோட்டையில் நடைபெற்ற 'friends in Harmony' என்ற கலாசார நிகழ்வின் இயக்குநராக இருந்துள்ளார். இந்நிகழ்விற்கு நோர்வே தூதரகம் அனுசரணை வழங்கியிருந்தது.

11. கொழும்பு, இந்திய கலாசார மன்றத்தின் 'சங்கீத சாகரம்' என்ற கர்நாடக இசைத்துறை தலைப்பில் நடைபெற்ற பயிற்சிப்பட்டறையில் தொடர் விரிவுரையை வழங்கியிருந்தார்.

12. 2010/2012/2014ல் நடைபெற்ற காலி இசை நிகழ்விற்கும் 2011/2013/2015ல் நடைபெற்ற யாழ்ப்பாண இசை நிகழ்விற்கும் கலை இயக்குநராக இருந்தார்.

13. பங்களாதேஷ், நேபாளம், இந்தியா, பலஸ்தீன், நோர்வே மற்றும் தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் இருந்து வந்த கலைஞர்கள் மற்றும் இலங்கை முழுவதும் உள்ள கலைஞர்களுடன் நாட்டார் மற்றும் சமகால இசையை கொண்டாடும் நிகழ்வு நடாத்தப்பட்டது.

14. இந்திய அரசாங்கத்தின் கலாசார உறவுகளுக்கான இந்தியத்துணைத் தூதரகத்தால் வழங்கப்பட்ட நாட்டிய நாடகமான 'சகுந்தலா' வின் தயாரிப்பாளரும் இயக்குநரும் ஆவார். இது 2009.09.10 அன்று சிங்களத்திலும் 2010.05.05 அன்று யாழ்ப்பாணத்தில் தமிழிலும் நடைபெற்றதுடன் 2011.06.11 அன்று மீண்டும் கொழும்பில் நடைபெற்றது.

15. இலங்கை சுற்றுலா அமைப்பால் நடாத்தப்பட்ட தெற்காசிய நாடுகளின் பிராந்தியக் கூட்டமைப்பு (SAARC) நடன நிகழ்வின் ஒழுங்கமைப்பாளராக இருந்துள்ளார். இந்நிகழ்வில் சார்க் பிராந்தியக் கலைஞர்கள் பங்குபற்றியிருந்தார்கள்.

16. Dr. லெஸ்ரர் ஜேம்ஸ் பீரிஸ் இயக்கிய 'யகழுவோ' திரைப்படத்தின் டுயட் பாடலை சிங்களத்தில் Dr.W.D பண்டித் அமரதேவவுடனும், தமிழில் சுமித்ர பீரிஸ் என்பவருடனும் இணைந்து பாடியுள்ளார்.

17. 2012 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் திகதி நடைபெற்ற இசைநிகழ்வில் 100 இளம் இசைக்கலைஞர்களின் கலை ஆலோசகராகவும் இருந்துள்ளார். இது நோர்வே மற்றும் இலங்கைக்கிடையிலான இசைக் கூட்டமைப்பின் கீழான ஒரு திட்டமாகும்.

18. 1998 இல் எல்பின்ஸ்ரன் (Elphinston Theotre) அரங்கின் தொடக்க விழாவில் 2 பிரேமதாச மற்றும் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி J.R.ஜெயவர்த்தனாவுடன் இணைந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்

19. 1998 இல் செத்சிறிபாய (ஸ்ரூடியோ) கலையக திறப்பு அல்லது ஆரம்ப விழாவில் தனது மாணவர்களுடன் இணைந்து வீணைக் கச்சேரியை வழங்கியிருந்தார்

20. 2008 இல் மத்தியப்பிரதேசத்தில் இடம் பெற்ற சர்வதேச இராமாயண நிகழ்வில் இராமாயண நாட்டிய நாடகத்தை தயாரித்து வழங்கியிருந்தார்

21. இந்திய உயர்ஸ்தானிகராலாயத்தின் ஒத்துழைப்புடன், 2013ல் மேகலா என்ற நாட்டிய நாடகத்தையும் 2014ல் ஜெயராம் என்ற நாட்டிய நாடகத்தையும் தயாரித்திருந்தார்.

## இந்தோலஜி பற்றிய விரிவுரைகள் மற்றும் கட்டுரைகள்

1. கொழும்பு, இந்தியா கலாசார மன்றத்தில் சங்கீத சாகரத்தில் கர்நாடக இசையின் தொடர் விரிவுரையாளராக இருந்துள்ளார்

2. இந்திய நடனம் மற்றும் இசையைப் பயன்படுத்தி கலை மற்றும் கலாசாரத்தின் மூலம் நல்லிணக்கத்தை ஏற்படுத்துதல்" என்ற கட்டுரையை 2014ல் பலஸ்தீனத்தில் நடைபெற்ற மாநாட்டில் வெளியிட்டிருந்தார்.

3. கலைகேசரி பத்திரிகையில் இந்தியப் பராணங்கள் பற்றிய பல கட்டுரைகளை எழுதியுள்ளார்

## சர்வதேச அரங்கில் அருந்ததி ஸ்ரீ ரங்கநாதனின் பங்களிப்பு

1. சாம்பியாவின் இயற்கை அழகை வர்ணித்து அருந்ததியால் பாடப்பட்ட தமிழ்ப்பாடல் ஒன்று 1987ல் சாம்பியாவில் முதன் முறையாக LP Disc ஆக தயாரிக்கப்பட்டது. இந்த LP Disc ஆனது ஜனாதிபதி கென்னத் கருண்டாவின் பதவியேற்பு விழாவில் அவருக்கு வழங்கப்பட்டது.

2. 1993ல் சென்னை இசை நிகழ்ச்சி மற்றும் திருவையாற்றில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் கலாசார அலுவல்கள் துறை சார்பாக இலங்கையை பிரதிநிதித்துவம் செய்திருந்தார்

3. 1987ல் மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டடில் பாரம்பரிய (Classical) இசை நிகழ்வை வழங்கியிருந்தார் இது இலங்கை கலாசார அலுவல்கள் துறையால் ஒழுங்கமைக்கப்பட்டதாகும்

4. 1991, 1992ல் தென்னாபிரிக்க இசைக்கல்லூரியால் ஒழுங்கமைக்கப்பட்ட தொன்னாபிரிக்காவின் துர்பனில் நடைபெற்ற தியாகராஜா இசை நிகழ்வில் பாரம்பரிய இசைக்கச்சேரியையும் வீணைக்கச்சேரியையும் வழங்கியிருந்தார்.

5. 1995ல் தென்னிந்தியாவின் தஞ்சாவூரில் நடைபெற்ற 8 வது; உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் பாரம்பரிய இசைக்கச்சேரியை வழங்கியிருந்தார்

6. ஜேர்மனின் ஹம்பேர்க்கில் Dr.B.சிவர்ஸ் சந்தூர் (Dr.B.Zievers Santoor) என்பவருடனும் ஜப்பானின் ரோக்கியோவில் பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் (ஐக்கிய ராச்சியம்) மக்மில்லன் என்பவருடனும் இணைந்து வீணைக் கச்சேரியை வழங்கியிருந்தார்

7. 1997 இல் டோக்கியோவில் நடைபெற்ற சர்வதேசக் கருத்தரங்கிலும் மற்றும் 3வது ஆசிய செயல்திறன் கருத்தரங்கிலும் பதிப்புரிமை அல்லது நகல் உரிமை குறித்த விரிவுரையை வழங்கியிருந்தார்

8. மலேசியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகராகத்தால் 1998 இல் மலேசியாவில் நடாத்தப்பட்ட கிளசிக்கல் இசைக்கச்சேரி மற்றும் பயிற்சி பட்டறைகளில் தனது பங்களிப்பினை வழங்கியிருந்தார்

9. NORAD அமைப்பால் அழைப்பு விடுக்கப்பட்டு நோர்வேயில் நடைபெற்ற பயிற்சி பட்டறையில் உலகளாவிய அரங்கில் உள்ளூர் சமூகம் என்ற தலைப்பில் விரிவுரையை வழங்கியிருந்தார்

10. 2000 ஆம் ஆண்டு பாகிஸ்தான் லாகரில் நடைபெற்ற உலக இசை விழாவில் இலங்கையைப் பிரதிநிதித்துவம் செய்ததுடன் பண்டித் W.D அமரதேவவுடன் இணைந்து இசை நிகழ்வையும் வழங்கியிருந்தார் .

11. 2000 - 2003 நோர்வேயில் நடைபெற்ற சர்வதேச கூட்டாட்சி (பெடரல்) நாட்டார் இசை நிகழ்வில் இலங்கை கலைஞர்களுடன் இணைந்து இலங்கையை பிரதிநிதித்துவம் செய்திருந்தார்

12. 2008 இல் கனடாவின் ரொறன்டோவில் நடைபெற்ற பரதநாட்டிய அரங்கேற்றத்திற்கான முதன்மைப் பாடகராகவும் இருந்தார்.

13. 2008 இல் நோர்வேயின் ஒஸ்லோவில் நடைபெற்ற ஒபேரா ஹவுஸ் (ODERA House) தொடக்க விழாவில் அரு ஸ்ரீ கலைக்கல்லூரியின் தமிழ் மற்றும் சிங்கள நடனக்கலைஞர்கள் பங்குபற்றியிருந்தார்கள் இந்நிகழ்விற்கான நடனவடிவமைப்பை அருந்ததி ஸ்ரீரங்கநாதன் வழங்கியிருந்தார்.

14. 2008ல் இந்தியாவின் மத்தியப்பிரதேசத்தில் நடைபெற்ற சர்வதேச இராமாயன விழாவில் ஸ்ரீ ராம் இராமாயணம் நாட்டிய நாடகத்தின் தயாரிப்பாளராகவும் இயக்குநராகவும் இருந்துள்ளார்

15. இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சால் ஏற்பாடு செய்யப்பட்ட ஸ்ரீராம் நிகழ்வை இந்தியாவின் குஜராத்தில் வழங்கியிருந்தார்.

16. 2012 ஏப்ரல் 12, 13 களில் இந்தோனேசியாவில் நடைபெற்ற சர்வதேச இராமாயண விழாவில் இடம் பெற்ற ஸ்ரீராம் நாட்டிய நாடகத்தின் இயக்குநராக இருந்துள்ளார்.

17. 2012 ஏப்ரல் 14 ஆம் திகதி சிங்கப்பூரில் அரு ஸ்ரீ கலைக்கல்லூரி நடனக் கலைஞர்களால் நடன நிகழ்வு வழங்கப்பட்டது. வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்காக இலங்கை சுற்றுலாத்துறை அமைச்சால் இராமயண நாட்டிய நாடகம் பல தடவைகள் ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது.

18. இந்தியா உயர் ஸ்தானிகரத்தால் 2013 இல் வழங்கப்பட்ட 'மேகலா' நாட்டிய நாடகத்தையும் 2014 இல் வழங்கப்பட்ட 'ஜெயராம்' நாட்டிய நாடகத்தையும் அருந்ததியே தயாரித்தும் இயக்கியும் இருந்தார்.

## சிறப்பிற்குரிய கலாசார தூதுவர் எனும் நோக்கில்

சர்வதேச சுற்றுப்பயணங்களின் போது அருந்ததி ஸ்ரீ ரங்கநாதனுடைய பங்களிப்புக்கள் மிகவும் பாராட்டப்பட்டது. சீனா, இந்தியா, அவுஸ்ரேலியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், மலேசியா, நோர்வே, ஐக்கிய ராஜ்ஜியம், ஜேர்மனி, கனடா, அமெரிக்கா, நைஜிரியா, சிம்பாவே, பொற்ஸ்வானா, சாம்பியா, தென்னாபிரிக்கா, ஜப்பான் மற்றும் கசகஸ்தான் ஆசிய பல நாடுகளுக்கு இவர் சுற்றுப்பயணங்களை மேற்கொண்டார்

## கலை மற்றும் கலாசாரத் துறையில் இவரது பதவிகள் (Arimary Education)

1. 1980 இல் திறந்தபல்கலைக்கழகத்தில் ஆரம்பக்கல்வி வருகை தரு விரிவுரையாளராக இருந்தார்

2. 1992 இல் சர்வதேச இளைஞர் கூட்டமைப்பின் நிர்வாகக் குழு உறுப்பினராக இருந்தார்

3. 1992 - 1993 இல் (Tower Hall Theaire) ரவர் கோல் தியட்டர் ஆலோசனைக் குழவின் உறுப்பினராக இருந்தார்.

4. 1995, 2000, 2002 களில் இலங்கை கலைக்கழகத்தின் செயற்குழு உறுப்பினராக இருந்தார்.

5. 1997, 1999 களனிப் பல்கலைக்கழகத்தின் அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் நிர்வாகக்குழு உறுப்பினராக இருந்தார்.

6. கொழும்பு பல்கலைக்கழகத்தின் இனங்களுக்கிடையே இசை தொடர்பான ஆற்றுப்படுத்துகையை வழங்கும் திட்டத்தின் கீழ் வருகைதரு விரிவுரையாளராக

இருந்தார்.

7. 1998 இல் இருந்து கொழும்பு இந்திய கலாசார மன்றத்தின் கர்நாடக சங்கீத விரிவுரையாளராக இருந்து வருகிறார்.

8. 1999 - 2000 கசகஸ்தானில் நடைபெற்ற ஆசியாவின் குரல் போட்டியில் சர்வதேச நடுவர்களின் உறுப்பினராக இருந்தார்.

9. 2000 இல் ஷங்காயில் நடைபெற்ற ஆசிய இசை நிகழ்வில் சர்வதேச நடுவராகவும் இருந்தார்.

10. களனிப்பல்கலைக்கழகத்தின் அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் பட்டப்படிப்புக்களுக்கான பாடத்திட்ட மேம்பாட்டுக் குழவின் உறுப்பினராகவும், களனிப் பல்கலைக்கழகம் மற்றும் கட்புல அரங்கேற்றக் கலைப் பல்கலைக்கழகத்தினதும் வருகைதரு விரிவுரையாளராக 2000 இல் இருந்து இருந்தார்.

11. 2001 இல் கொழும்புப் பல்கலைக்கழகத்தின் ஸ்ரீபாளி வளாகத்தின் கர்நாடக சங்கீத பட்டப்படிப்பிற்கான பாடத்திட்ட மேம்பாட்டு ஆலொசகராக இருந்தார்.

12. 2001 இல் ஹற்றன் ஸ்ரீபாத கல்லூரியின் இசை மற்றும் நடனத்துறைப் பாடத்திட்டத்தை உருவாக்குவதில் ஆலோசகராக பணியாற்றினார்.

13. 2003 இல் கல்வி, விஞ்ஞானம் கலாசாரம் தொடர்பாக யுனஸ்கோ அமைப்பின் உறுப்பினராக செயற்பட்டார்

14. 2003 - 2008 வரை சுதந்திர ஊடகங்களுக்கான ஜனாதிபதி செயற்குழு உறுப்பினராக இருந்தார்

15. 2017ல் தகவல் மற்றும் வெகுசன ஊடக அமைச்சால் ஒழுங்கமைக்கப்பட்ட தேசிய ஊடக விருதுக்கு தேர்ந்தெடுக்கும் குழுவின் உறுப்பினராக இருந்தார்.

16. கலாசார அலுவல்கள் துறையின் தேசிய நடனம் மற்றும் பலே குழுவின் உறுப்பினராக இருந்தார்.

17. 2012 இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் தமிழ்மொழி நிகழ்ச்சிகளை உருவாக்கும் குழுவின் உறுப்பினராக இருந்தார்.

18. 2009 இல் இருந்து நோர்வே மற்றும் இலங்கை இசைக் கூட்டமைப்பின் ஆலொசகராக இருந்து வருகிறார்.

19. 2004 இல் அவரால் உருவாக்கப்பட்ட அரு ஸ்ரீ கலைக்கல்லூரியின் இயக்குநர் ஆவார்.

20. ஜப்பானியத் தூதரக 'புங்கா' விருதிற்கான தேர்வுக்குழு உறுப்பினர்

21. 2004 - 2006 சக்தி தொலைக்காட்சியில் ஒலிபரப்பாகிய இளையகாணம் மற்றும் 'திமிதகதா' ஆகிய ரியாலிட்டி நிகழ்ச்சிகளின் ஆலொசகராக இருந்தார்.

22. 2015 இல் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் இயக்குநர் குழுவின் உறுப்பினராக இருந்தார்.

## கௌரவப் பட்டங்கள், விருதுகள்

1. 1972ல் இசைக்கலாநிதிப்பட்டம் (தமிழ் இசைக்கு அவர் வழங்கிய பங்களிப்பை பாராட்டும் முகமாக முன்னாள் ஜனாதிபதி J.R ஜெயவர்த்தனவால் இவ் விருது வழங்கிவைக்கப்பட்டது)
2. 1975ல் முதன்மை இசைக்கான பரிசு (சிறுவர் இசைநிகழ்ச்சிக்காக ஜப்பான் வானொலியால் வழங்கிவைக்கப்பட்டது.)
3. 1989ல் சென்ரா (Zonta) விருது (வானொலி நிகழ்ச்சிக்காக சர்வதேச சென்ரா (Zonta) அமைப்பால் வழங்கிவைக்கப்பட்டது)
4. கலாசூரி தரம், கௌரவப்பட்டம் (கலை மற்றும் கலாசாரத்திற்கு அவர் வழங்கிய பங்களிப்பைக் கௌரவிக்கும் முகமாக முன்னாள் ஜனாதிபதி R.பிரேமதாசவால் வழங்கிவைக்கப்பட்டது)
5. கலாநிதி கௌரவ பட்டம் (முன்னாள் முதல் பெண்மனியான கேமா பிரேமதாசவால் வழங்கிவைக்கப்பட்டது)
6. 1993 இல் 'கலைச்செம்மல்' கௌரவப்பட்டம் (இந்துசமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சால் வழங்கிவைக்கப்பட்டது.)
7. 1994 இல் சர்வதேச ரீதியில் மதிப்புமிக்க பத்திரிகையாகிய Musical - America - international Performers இல் இவரது பெயர் இணைத்துக் கொள்ளப்பட்டது.
8. 2015 இல் சிறந்த இசைக்கான ஜனாதிபதி விருது (இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் 70வது ஆண்டு நிறைவு விழாவில் வழங்கி வைக்கப்பட்டது)
9. 1996 இல் Merit பட்டம் (Degree of merit) கலை, கலாசாரம் மற்றும் ஒலிபரப்பு ஆகியவற்றில் அவர் ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் முகமாக நல்லிணக்கத்திற்கான ஐக்கிய இராச்சியத்தின் internotional biographical Centre இனால் வழங்கிவைக்கப்பட்டது.
10. 1996 இல் விஷ்வ பிரதாதினி கௌரவப் பட்டம் (கலாசாரத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் முகமாக முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவே பண்டார நாயக்காவால் வழங்கி வைக்கப்பட்டது.)
11. இங்கிலாந்தின் கேம்ரிஜ்ஜில் உள்ள International biographical centre ஆல் ஒழுங்கமைக்கப்பட்டு ஒக்ஸ்போரட் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற கலை மற்றும் தகவல் தொடர்பாடல் குறித்த கருத்தரங்கில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வரலாறு என்ற தலைப்பிலான அவரது கட்டுரைக்கு சிறப்பு விருது வழங்கப்பட்டது
12. 1998 இல் சிறந்த கர்நாடக இசைக்கலைஞர் விருது (சர்வதேச மகளிர் தினத்தில்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டார நாயக்கவால் வழங்கிவைக்கப்பட்டது.

13. 1998 இல் 50வது சுதந்திரதின் விழாவில் 'ஜன்ம பூமி' நாட்டிய நாடகத்தை தயாரித்தமைக்கான சிறந்த தயாரிப்பாளர் விருது.

14. 2002ல் சிறந்த பெண்மணி விருது (சார்க் மகளிர் விழாவில் வழங்கி வைக்கப்பட்டது.)

15. 2006ல் 'தேச நேத்ரு' கௌரவப்பட்டம் (ஒரு சிறந்த கலைஞருக்கு கலை மற்றும் கலாசாரத் துறைகளுக்கு வழங்கிய தனித்துவமான பங்களிப்பை கௌரவிப்பதற்காக வழங்கப்பட்ட ஒரு வாழ்நாள் சாதனையாளர் (A life time Award) விருதாகும் இந்த விருதைப் பெற்று ஒரேயொரு தமிழ்க்கலைஞரும் இவராவார்

16. சாதனைப்பெண் சித்ஸ்ரீ மேலா விருது (2011 டிசம்பரில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவால் வழங்கிவைக்கப்பட்டது.)

17. 1989 இல் இருந்து நீதி அமைச்சால் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டார்.

18. 2012.12.12 அன்று பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கட்புல அரங்கேற்றக்கலைப் பல்கலைக்கழகத்தினால் கௌரவ கலாநிதிப்பட்டம் அருந்ததிக்கு வழங்கிவைக்கப்பட்டது (இசை, நடனம், கலாசாரம் மற்றும் ஒலிபரப்புத்துறைக்கு ஆற்றிய பங்களிப்பை கௌரவிக்கும் முகமாக வழங்கி வைக்கப்பட்டது. இப்பல்கலைகழகத்திடம் இருந்து இத்தகைய கௌரவத்தைப் பெறும் முதலாவது தமிழ் கலைஞர் இவராவார்)



# இசைப்பேரரசி M.S.சுப்புலட்சுமியின் இசைப்பயணம்

இந்தியாவின் சமகால கர்நாடக இசையின் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஓர் கர்நாடக இசை சக்கரவர்த்தி M.S.சுப்புலக்சுமிக்கு இணையாக யாரும் காணப்படவில்லை அவரது நற்பெயர், பல்துறை திறமை மற்றும் கர்நாடக இசை குறித்த அறிவின் வீச்சு என்பன மிக அற்புதமானவை ஸ்ரீ மதி. திருமதி சுப்புலட்சுமி அவர்களின் கர்நாடக இசை வழிகாட்டியாக அவரது தாயார், மறைந்த வீணா சண்முகவடிவு ஆவார். இவர் தென்னிந்தியாவில் மதுரையை சேர்ந்த ஓர் புகழ் பெற்ற இசைக்கலைஞர் என்பது யாவரும் அறிந்த விடயமாகும் திருமதி.சுப்புலட்சுமி தனது பத்து வயதிற்கு முன்னதாகவே தனது தாயுடன் சேர்ந்து இசை கச்சேரிகளையும், தனது 16வது வயதில் மேடை கச்சேரிகளில் முக்கியமான ஓர் அங்கமாக திகழ்ந்தார் 1971ம் ஆண்டின் இறுதிகளில் 1500 மேடை கச்சேரிகளை வழங்கினார் அவற்றில் 200 கச்சேரிகள் சமூக பொது நல நோக்கத்தை ஆதரிக்கும் விதமாக அரங்கேற்றியதன் மூலம் 10 மில்லியன் டொலர் பணத்தை பெற்றுக் கொடுத்தார். கர்நாடக இசைத்துறையில் 4 தசாப்தங்களாக மிகச் சிறந்த சேவையை ஆற்றினார். என்பது மிக முக்கியமான அம்சமாகும்.

திருமதி.சுப்புலட்சுமி அவர்களின் பஜனைகள் யாவும் மிகச் சிப்பான உணர்ச்சி வசங்களை கொண்டமைந்தமைந்ததாகவே காணப்படுகின்றது. இச் சிறப்பியல்பானது அவரது பயிற்சி, மனோபாவத்தால் ஏற்பட்டது என்பது யாரும் மறுக்க முடியாத ஒன்றாக காணப்படுகிறது அவரது கர்நாடகப் பாடல்கள் கூடுதலாகவே கர்நாடக தன்மை வாய்ந்ததாகவும் பிரபலமானதாகவும் காணப்படுவதே சிறப்பம்சமாகும். அவரது மிகப் பரந்த திறனாய்வு மூலம் இவரது பாடல்கள் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி, மராத்தி, குஜராத்தி பெங்காலி, மற்றும் சம்ஸ்கிருதம் போன்ற மொழிகளில் காணப்படுவது கர்நாடக இசையின் பொக்கிஷமாக கருதப்படுகிறது.

அமெரிக்க இசை விமர்சகரான ஜான் டுவயர் கூறிய விடயமானது இசையை குறித்து ஓர் கூற்று ஒன்றை முன்வைக்கின்றார் "ஓர் மிகச்சிறந்த கல்வியாளன் மரபு வழியாய், வம்சாவழியாய் கலைஞன் இசையை கற்பனை செய்வது மிக கடினமானதாய் காணப்படும் ஆனால் அவ் இசையை கேட்பவன் அந்த இசையில் தன்னைத் தானே கண்டுபிடிப்பது மட்டுமல்லாது, இசையில் காணப்படும் பிழையை கண்டு பிடிக்குமளவிற்கு இசையோடு மிக நெருக்கமான தன்மையை கொண்டிருப்பான்"

இக்கூற்று ஏற்றவாறே திருமதி. சுப்புலட்சுமி அவர்களின் இசை ரசிகர்கள் அவரின் பாடல்களை ஆத்மீகமாக ரசித்ததனாலேயே அவர் கர்நாடக இசையில் யாரும் தொட முடியாத ஓர் இசை சிம்மாசனத்தை பெற்றார் எனபது நிதர்சனமான உண்மையாகும்.

இவருடைய இசைக்கான ஈடுபாடு மற்றும் திறனை கண்டுபிடித்து இவரது தாயார் மறைந்த வீணா. சண்முகவடிவு ஆவார் இவருடைய வீட்டுச் சூழலானது இசைக் கலைஞர்கள் மற்றும் இசை வாக்காளர்கள் கொண்டமைந்த இசையை தெய்வமாய் போற்றும் விழுமியத்தை கொண்டதாக காணப்பட்டது தனது பத்தாவது வயதில் தாயார் மீட்டுக் கொண்டு பாடல்களை பாடும் போது அவருடன் சேர்ந்து தானும் வெற்றிகரமாக கர்நாடக இசை துறையில் சாதிப்பேன் என்ற எண்ணம் தோன்றியதாக கூறுவார். அதன் பின்னான காலங்களில் தன்னுடைய சொந்த குரலில் முழு அளவிலான பாடல்களை கர்நாடக இசை பாடல்களில் சேர்த்துக் கொண்டார் 1940ம் ஆண்டில் அவரது நண்பர் ஸ்ரீ சதாசிவம் என்பவரை திருமணம் செய்து பின் அவரே இவருக்கு வழிகாட்டியாகவும் தத்துவஞானியாகவும் திகழ்ந்தார் அவரது வழிகாட்டல் மற்றும் பராமரிப்பு தன் மீது கொண்ட மட்டற்ற அன்பின் மூலம் இசைத்துறையில் அவர் கடவுள் ஆசீர்வதித்த பல பரிசுகளை கண்டுபிடிக்க முடிந்தது என கூறியது குறிப்பிடத்தக்கது.

பின்னதாக இவர் தனது பஜனை நிகழ்ச்சிகளிலும், பக்தி வேட படங்களிலும் இலகுவான இசைப்பகுதிகளிலும் தன்னுடைய திறமைகளை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார் 1941ம் ஆண்டு இந்திய தமிழ் சினிமாத் துறையில் சாவித்ரி என்ற படத்தில் நாராதா எனும் கதாப்பாத்திரத்திற்கு நடிக்க தனது கணவருடன் கல்கத்தா சென்றார் அப்போது சேவ கிராம எனும் இடத்தில் மக்கள் மனதை அகிம்சாவழியில் போராடி வென்ற மகாத்மா காந்தி அவர்களிற்கு முன்பாக சில இந்தி பஜனைகளை பாடும் அரிய வாய்ப்பும் இவரிற்கு கிடைத்தது சாவித்ரி படத்தில், தென்னிந்திய வகையை சார்ந்த ஒரே ஒரு சமஸ்கிருத பஜனை பாடலை பாடினார் பின்பு 1947ம் ஆண்டு சாவித்ரி படத்தின் இந்தி பதிப்பாக்கத்தில் இவரது குரல் இடம் பெற்ற பஜனை பாடல்கள் அனைத்தும் இந்திய அளவில் பெரிய வரவேற்பை பெற்று இவரது கர்நாடக இசைப்பயணத்தில் மிகப் பெரிய மைல் கல்லை எட்டியது.

இவர் இசையில் கொண்டிருந்த புரிதல் மிகவும் எளிமையானதாகவும், சிறப்பானதாகவும் காணப்பட்டது எவ்வறெனின் நல்ல இசையின் கூறுகள் எளிமையானதாகவும், உலகளாவிய ரீதியில் அறியப்பட்டதாகவும் காணப்படுகின்றது

ஓர் இசையின் அடிப்படை தேவை ஸ்ருதி மற்றும் தாளம் என்பனவாகும் ஒருவரின் குரல் கலாச்சாரமானது அப்பாடகரின் மிக முக்கிய அம்சமாக இவர் கருதுகின்றார் ஸ்ருதி மற்றும் தாளத்தின் சிறப்பம்சத்தை கடைப்பிடிப்பதே அடிப்படை அம்சமானது என்பதை தெளிவுபடுத்துகிறார் ஓர் பாடகர் பாடிய பாடல்களின் அர்த்தத்தையும் சொற்களின் சரியான உச்சரிப்பையும், உள்ளுணர்வோடு எப்படி உச்சரிக்க வேண்டுமென்பதை கட்டாயம் கற்றுக் கொள்ள வேண்டுமென்பது இவரின் மிகமுக்கியமான நோக்கமாக இசைத்துறையில் சாதிப்பதற்கு ஊன்று கோலாய் அமைந்தது.

அது மட்டுமல்லாது இவர் உள்நாடுகளிலும், வெளிநாடுகளிலும் பஜனைகளை அரங்கேற்றம் செய்யும் போது தன்னுடைய பார்வையாளர்களையே தன்னுடைய அதிஷ்டமாக நோக்குகிறார் கூடுதலாக இந்திய பார்வையாளர்களே மிகப் பெரியவர்களாகும், இசையை தங்கள் சொந்த வழியில் நேசிப்பவர்களாகும் காணப்படுகிறார் என்று இவர் அநேகந்தரம் கூறுவதுண்டு.

இவரது கர்நாடக பாடல்களும், பஜனைகளுமே உலக இசைத் துறையில் ஓர் முக்கிய இடத்தையும், இந்திய இசையை உண்மையான மற்றும் முழுமையான எடுத்துக் காட்டாக விளங்க செய்தது என்பதில் எவ்வித ஐயமுமில்லை என்பதை சமகால இசை ஜம்பவான்களும், கர்நாடக இசை சக்கரவர்திகளும் ஆணித்தரமாய் விடயமாக காணப்படுவதை நாம் அவருடைய கர்நாடக இசை வளர்ச்சியில் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதற்கு சான்றாக 1962 ஆம் ஆண்டில் ஐரோப்பாவின் நடைபெற்ற இவருடைய இசைக் கச்சேரிகளும், 1966ம் ஆண்டில் அமெரிக்காவில் நடைபெற்ற பஜனைக் கச்சேரிகளும் அதை கூறி நிற்கின்றன. இக்காலகட்டங்களில் தான் இந்தியாவின் கர்நாடக இசை உலகளாவிய ரீதியில் அறியப்பட்டதும் அநேக பார்வையாளர்களை கர்நாடக இசையின் பால் ஈர்ப்பதற்கும் அளப்பெரிய சாதனையை நிகழ்த்திக் காட்டிய பெருமை கர்நாடக இசைச்சக்கரவர்த்தி, சமகாலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும், இந்திய கர்நாடக இசையில் மிக பெரிய புரட்சியை ஏற்படுத்திய M.S.சுப்புலட்சுமி அவர்களையே சாரும் என்று கர்நாடக இசை ரசிகர்கள் உறுதியுடன் ஏற்றுக் கொள்வதே அதன் சான்றாக அமையும் என்பது ஆணித்தரமானதும் மிகச் சரியானதுமான கர்நாடக சங்கீத இசையின் வளர்ச்சியாகும் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாக காணப்படுகின்றது.

# நாட்டிய மரபில் நிருத்தம்

நுண்கலைமாணி
ஆனந்த கிருக்ஷ்ணன் ஸ்ரீகாந்த்
ஸ்ரீ பரதமுனி நிருத்யலாயா

தாளக் கட்டுப்பாட்டுக்குள் அடங்கி கருத்தைப் புலப்படுத்தாத ஆடல் "நிருத்தம்" ஆகும். அபிநயங்கள் இன்றி பிரத்தியாங்க, உபாங்கங்களால் சொல்லப்பட்ட முறையில் சரீரத்தை மட்டும் வேண்டிய வரையில் அசைப்பதும் வளைப்பதும் நிருத்தமாகும். "நிருத்தம்" என்ற சொல் அழகிய உடல் அசைவுகளைக் கொண்ட நடனக் கலையைக் குறிக்கும். உடலழகினையும், நெளிவுகளின் குழைவுகளையும், தாளக் கூறுகளின் விசித்திரக் கூர்மையினையும், பொறிபறக்கும் பாத ஜாலங்களையும், இசை, அதன் தாளம் இவற்றின் வல்லின நிருத்தம், காண்பவர் மனதைக் காந்தமென ஈர்ப்பதோடு ஆடுபவர்களையும், ஆனந்தத்தில் ஆழ்த்தும் ஆற்றல் உண்டு. மகிழ்ச்சியையும், மனவெழுச்சியையும் உருவாக்கும் நிருத்தம் நாட்டியத்தின் ஒரு பெரும் பகுதியாக அமைந்திருந்தது. இந்நிருத்தம் ரஸ, பாவங்களை நீக்கிய ஒருவகை நடனம் தாளத்திற்கும், லயத்திற்கும் தான் நிருத்தமானது முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது.

பரதரின் நாட்டிய சாஸ்திரம், நந்திகேஸ்வரரின் அபிநய தர்ப்பணம் ஆகிய நூல்கள் மூவகை நடனங்களை வரிசைப்படுத்துகையில் "நிருத்தம்" என்பதனை இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளன. தமிழ் மொழியில் வெளிவந்துள்ள அபிநய தர்ப்பணமும் இதையே கூறுகின்றது. நிருத்தத்திற்கான விளக்கமும் இந்நூல்களிலே காணப்படுகின்றது. இரசபாவங்களை நீக்கிய தாள வாத்தியங்களுடன் தாளக்கட்டை அடிப்படையாகக் கொண்ட நடனம் "நிருத்தம்" எனப்படும். இங்கு லயம் தான் முக்கியம். இந்நடன வகையில் உள்ளத்து உணர்வுகளை ஆங்கிக சாத்தவீக அபிநயங்களின் மூலம் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லையென்றாலும், பாவம் வெளிக்கொண்டுவரப்படுவதில்லை எனத் திட்ட வட்டமாகக் கூற முடியாது. ஆனந்தம், உற்சாகம், கம்பீரம் பக்தி ஆகிய இன்னோரன்ன உணர்வுகள் நிருத்தத்தில் வெளிப்படுத்தப்படுகின்றன. நிருத்தம் ஆனந்தமானது இதனை முறையே.

சுத்த நிருத்தம்
கான வாத்ய தாள அனுசாரி நிருத்தம்
கீதகாத அபிநய உன்முக நிருத்தம்
என்று மூன்று பிரிவுகளாக வகுத்துள்ளார்.

### 1. சுத்த நிருத்தம்

சுத்த நிருத்தம் என்பது தாளத்துடன் ஒன்றிய தூய நடனம். அடவுகளால் பின்னப்பட்ட கோர்வைகளைக் கொண்ட இந்நடன வகையில் சொற்கட்டுக்களைத் தவிர

ஸ்வரமோ சாஹித்தியமோ இடம்பெறமாட்டா. மிருதங்கச் சொற்கட்டுக்களுக்கு மட்டுமே ஆடப்படுகின்ற அழகிய அங்க அசைவுகளைக் (அடைவுகளை) கொண்ட நடனம் "சுத்த நிருத்தம்" எனப்படும்.

தீர்மானம், ஜதி, அலாரிப்பு, புக்ஷ்பாஞ்சலி ஆகியன சுத்த நிருத்தத்திற்கு நல்ல உதாரணங்களாகத் திகழ்கின்றன. சுத்த நிருத்தத்திற்கு எடுத்துக்காட்டாக விளங்குவது "அலாரிப்பு" என்னும் உருப்படியாகும்.

## 2. கான வாத்ய அனுசாரி நிருத்தம்

நிருத்த வகைகள் இரண்டாவது இடத்தை கான வாத்திய அனுசாரி நிருத்தம் வகிக்கின்றது. பெயரிற்கேற்ப கானத்தையும் வாத்தியத்தையும் தாளத்தையும் பின்பற்றகின்ற நடனமாக இது விளங்குகிறது. துரித காலத்தில் ஸ்வரங்கள் பாடப்படும் பொழுது நிருத்தமும் அதற்கமைய துரிதகாலத்தில் ஆடப்படும் - ஸ்வரங்கள் மத்திய காலத்தில் அமைந்திருந்தால் நிருத்தமும் அதற்கேற்றாற் போல் மத்திம காலத்திலும், சௌக காலமாய் அமைந்திருப்பின் அடவுகள் மெதுவாகவும் ஆடப்படும். இந்த வகையில் அமைந்திருந்தமைக்கு உதாரணங்களாக ஜதிஸ்வரம், சிட்டைஸ்வரம், பதவர்ணங்களில் இடம்பெறும் முக்தாயிஸ்வரங்கள், சரண ஸ்வரங்கள், எத்துக்கடை ஸ்வரங்கள், தில்லானாவில் பாடப்படும் ஸ்வரக் கோர்வைகள், ஜதிக் கோர்வைகள் ஆகியன விளங்குகின்றன.

## 3. கீதகா அபிநய உன்முக நிருத்தம்

மூன்றாவது வகையான நிருத்தமானது "கீத ஜாதி அபிநய உன்முக நிருத்தம்" எனப்படும். இதில் பாடல்கள் காணப்படுகின்றன. பாடலில் இடம்பெறும் வார்த்தைகள் ஒரு கருத்தை விளக்குவனவாக அமைக்கப்பட்டிருக்கும். ஆனால் இச்சொற்களுக்குரிய கருத்தானது ஹஸ்தாபிநயங்களினாலும் முகபாவங்களினாலும் பிரதிபலிக்கப் படுவதில்லை. மாறாக அபிநயமானது அங்க அசைவுகளினால் மட்டுமே **(Body Language)** வெளிப்படுத்தப்படுகிறது. இவ்வகையான நிருதத்தில் இடம் பெறும் பிரத்தியேக அடவோ அன்றி அங்க அசைவோ குறிப்பிட்ட கருத்தைப் புலப்படுத்தும் தன்மை கொண்டதாய் விளங்குகின்றது. இந்த நிருத்த வகைக்கு உதாரணங்களாக திருக்குற்றாலக் குறவஞ்சி, நாட்டிய நாடகத்தின் கதாநாயகியாகிய வசந்தவல்லியின் பந்தாட்டம் கிராமிய நடன பாணியில் அமைந்த அபிநயப் பாடலான "மந்திரக் காரன்டி அம்மாண்டி" ஆகிய நடனங்களைக் குறிப்பிடலாம்.

இவ்வாறாக நிருத்தம் என்னும் சொற்பொருளும் அதன் வகைகளும் அமைகின்றன. மேற்படி நிருத்தத்தின் அமைப்பு பற்றி நோக்குமிடத்து.

கட்டிடங்கள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு விதமான உருவம் இருப்பது போல

நடன உருப்படிகளின் (நாட்டியத்தின் அமைப்பிற்கும்) அடி அத்தியாக நிருத்தம் என்னும் அமைப்பானது விளங்குகின்றது. நாட்டியத்தின் ஆரம்பத்தில் துளிர்விட்டு மெல்ல மலரும் நடனமாக நிருத்தமானது விளங்குகின்றது எனலாம். நிருத்தத்தின் அமைப்பில் ஓர் அடவினைச் செய்யப்படுகின்ற போது அங்க, பிரத்தியாயங்கள், உபாயங்கள் அனைத்திற்கும் இதில் வேலையுண்டு. இயற்கையானது இறைவனால் படைக்கப்பட்டது போன்று இந்த நடன செய்கையும் நிருத்தம் - நிருத்தியம் - நாட்டியம் என்னும் மூன்று உட்பிரிவுகளினையும் கொண்டு கலந்துள்ளமையினால் நாட்டியத்தின் அங்க வெளிப்பாடுகளில் நிருத்த அமைப்பானது பங்கு வகிக்கின்றது.

அதாவது உடலழகினையும், நெளிவு சுளிவுகளின் குழைவுகளையும், தாளக் கூறுகளின் விசித்திரக் கூர்மையினையும், பொறி பறக்கும் பாத ஜாலங்களையும், இசை அதன் தாளம் இவற்றின் வல்லின மெல்லினங்களையும் கொண்டு உருவாக்கப் படுவதாக நிருத்தத்தின் அமைப்பானது காணப்படுகின்றன. நிருத்த அமைப்பானது தாளத்திற்கும், லயத்திற்கும் தான் முக்கியத்துவம் கொடுக்கின்றது. "பரதரின் நூலை ஆராய்ந்தால் நிருத்தம், நாட்டியத்தின் ஒரு அங்கமாகத்தான் விளங்குகின்றது" என்று புலப்படும். நிருத்தத்தில் உடலின் எல்லா உறுப்புக்களும் அழகுற இயங்குகின்றது. இந்த அமைப்பானது, தலையிலிருந்து பாதம் வரை, உடலின் உறுப்புக்களை அங்கங்கள், பிரத்தியாங்கங்கள், உபாங்கங்கள் என்று மூன்றாக வல்லுநர்கள் பாகுபாடு செய்துள்ளனர். உறுப்புக்கள் யாவற்றையும் தனித்தனியாகவும், மற்ற உறுப்புகளோடு சேர்த்தும் அசைக்கப்பழகுதல் வேண்டும். இந்தப் பயிற்சிகள் ஒவ்வொன்றிற்கும் பெயர்கள் உள்ளன. அந்த அசைவுகளை, பொருத்தமான முறையில் நடனத்திலும், நாட்டியத்திலும் பொருள் படவும், உபயோகிக்கலாம். இந்தப் பிரயோகங்களையும் "நாட்டிய சாஸ்திரம்" போன்ற சிறந்த நூல்கள் நமக்கு எடுத்துரைக்கின்றன. நிருத்தம் - என்பது வெறும் பாத அடவுகள் மட்டுமல்ல. இதற்கு உடலின் எல்லா உறுப்புகளும் நன்றாக பயிற்சி பெற்று கலை வடிவில் இயங்க வேண்டும்.

"நிருத்தம் அங்க லாவண்யத்தின் பிரதிபலிப்பாக அமைய வேண்டும். அதோடன்றி துள்ளியெழும் உள்ளத்தின் மகிழ்ச்சி வெள்ளத்தின் பரிசளிப்பாக நிருத்தம் திகழ வேண்டும். மகிழ்ச்சி, பக்தி, பரவசம், ஆனந்தம், ஆன்மீகம் இவற்றின் வெளித்தோற்றமாக அமைவது நிருத்தத்தின் சிறப்பாகும். நிருத்தத்திற்கு பாவம் இல்லை என்றும், ரஸம் இல்லை என்றும் சிலர் தவறாக கூறுகின்றார்கள். ஆனால் உணர்வும் (பாவம்) அதனால் உண்டாகும் மன நிறைவாகிய ரஸமும், நிருத்தத்திற்கு உண்டு. மனம் ஒன்றுபட்டு லயிக்காமல் ஆடப்படும் எந்த நடனமும், பாவத்தையும், ரஸத்தையும் அளிக்க முடியுமா? மனம் லயிக்காமல் செய்யப்படும் எந்த ஒரு தொழிலும் பயனளிக்காது. நிருத்தமும் அதே போல தான் மனதை நடனத்தில் செலுத்தி

ஆடாவிட்டால், பொம்மை ஆடுவது போல் அல்லவா இருக்கும், பரத முனிவர் இதற்கு ஒரு அழகிய பாடலைத் தருகிறார்.

"யதோ ஹஸ்தஸ ததோ திருக்ஷ்டி
யதோ திருக்ஷ்டிக்ஷ் ததோ மனஹ
யதோ மனஸ் ததோ பாவஹ
யதோ பாவஹஸ் ததோ ரஸஹ

கைவழி நயம் செல்ல
கண்வழி மனம் செல்ல
மனம் வழி உணர்ச்சி செல்ல
அனின்று சுவை பிறக்கும்

ஆகவே, நிருத்தம் செய்பவர் யாவரும், கையோடு கண்களையும் அசைத்து மனதை அதில் செலுத்தி, அனுபவித்து மகிழ்ததால் பார்ப்பதற்கும், ரஸிக்கும் வண்ணம் இருக்கும். நிருத்தத்திற்கும் இன்றியமையாத மற்றொரு அம்சம், ஷஅங்க சுத்தம் இதைத்தான் பரதர், ஸெனக்ஷ்டபம்" என்று குறிப்பிடுகிறார். அடவுகளை ஆடும் போதும், அபிநயிக்கும் போதும் இது மிகவும் அவசியம்.

முதுமை நன்றாக நிமிர்த்தி, தோள்களை இயற்கையாக நிறுத்தி முழங்கைகளையும் தோள்களுக்கு நேராக வைத்து, வயிற்றை உள்ளே இழுத்து, கைகளையும் மார்புக்கு ஒருசாண் தள்ளி வைத்து இருத்தல் வேண்டும். காதுகள் இடுப்புக்கு நேராகவும் இருத்தல் சமச்சீர் (**Symmetry**) தன்மைக்கு இன்றியமையாததாகும். இவற்றைத்தான் "லெனக்ஷ்டவம்" என்கிறார். பரதமுனி அங்க சுத்தம் என்றால், எந்த எந்த உறுப்புக்கள் எப்படி இயங்க வேண்டுமோ அதன் முறையில் இயங்கினால், அதை சாதாரண பேச்சு வழக்கில், "அங்க சுத்தம்" என்கிறோம். உதாரணமாக - அரை மண்டியில் அடவு ஆடும் பொழுது ஸெனக்ஷ்டவத்திற்கு கூறியவற்றுடன் முழங்கால்கள் மடிக்கப்பட்டு பாதங்கள் பக்கவாட்டில் திரும்பியிருக்க வேண்டும். அங்கங்கள் யாவும் துரித காலத்திலும் முறையான கோடுகளைப் பிரதிபலித்து இயங்குதல் அங்க சுத்தமாகும். இவ்வாறு அடவுகளில் நிருத்த அமைப்பானது. அகைக்கப்பட்டுள்ளது எனலாம். இது போன்றே ஒவ்வொரு நடன உருப்படிகளிலும் நிருத்த அமைப்பானது அடவுகளின் அங்க சுத்தத்துடன் அமையப்பெற்று நாட்டியத்தினை மெருகூட்டுகின்றது. அடவுகளிற்கு நிருத்தம் கொடுக்காவிடின் அல்லது இல்லாவிடின் அது சுத்த நிருத்தமாகாது. அலாரிப்பு, ஜதீஸ்வரம், தில்லானா போன்ற நிருத்த உருப்படிகளில் அடவுகளின் ஊடாக நிருத்தமானது அங்கம் வகிக்கின்றது எனலாம். ஒவ்வொரு அடவுகளிலும் கோர்வையாக பின்னப்பட்டு அரைமண்டி, முழுமண்டி, சமபாதநிலை, சுற்றுதல், நடத்தல், பாய்தல் என்றவாறான பாத பேத அசைவுகளும், அங்கம் பிரத்தியாங்கம், உபாங்கம் என்ற ஆங்கிக அபிநயங்களின் உறுப்புக்களும் அமைய நிருத்தத்தின் அமைப்பானது நாட்டிய மரபில் செல்வாக்குச் செலுத்துகின்றது.

# யாழ்ப்பாண பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட வகையில் நாட்டுக் கூத்துக் கலையின் தோற்றமும் வளர்ச்சியும்

செல்வி.றஜிதா அரிச்சந்திரன்
முதுகலைமாணி

மனிதர்களின் மனம் மகிழவும் பொழுது போக்குக்காகவும் இனக்குழுமத்தின் பாரம்பரியத்தனையும் எடுத்து செல்ல பயன்படும் வடிவமே கலை வடிவமாகும். இதனை பல்வேறு வகையாக பாகுபடுத்துவர். அதில் ஒரு வடிவமே ஆற்றுகைக் கலையாகும். ஆற்றுகை கலைகள் இசைக்கலை, நாட்டுக்கூத்து, நாடகம் எனப் பலவகைப்படும். இதில் கூத்துகலை மரபு சார்ந்தது, நவீன கூத்துக்கள் என இருவகைப்படும். மரபு சார்ந்த கூத்துக்கள் நாட்டு கூத்துக்கள் என அழைக்கப்படுகின்றது.

நாட்டுக்கூத்து நாட்டுப்புற மக்கள் தங்களின் பொழுது போக்காக மட்டுமின்றி மானிட சமூக மெய்யுணர்வுகளை வளர்த்துக் கொள்ளவும் எமது பாரம்பரிய பண்பாட்டுக்கு சான்றாக விளங்கும் நாட்டுக்கூத்து சாதாரண மக்களின் உள்ளங்களை பிணிக்க வல்லது. நாட்டுக்கூத்துக்களினை பாணி அடிப்படையில் வடமோடி - தென்மோடி, மன்னார்பாங்கு, எனவும் மத அடிப்படையில் இந்து, கத்தோலிக்க கூத்துக்கள் எனவும் பாகுபடுத்துவர். ஆயினும் இது தான் இன்னது என்று அறுதியிட்டு கூற முடியாது. கூத்துக்களில் பிரதேசத்திற்கு பிரதேசம் வேறுபாடு காணப்படுவது போல சில கலப்புகளும் காணப்படுகின்றது.

நாட்டுக் கூத்து எமது மரபுக்கலை யாழ்ப்பாணத்தில் தொன்றுதொட்டு இருந்து வந்ததென்று அண்ணாவிகள் கூறுகின்றனர். தொன்றுதொட்டு இருந்த கலையை ஐரோப்பியர், அண்ணாவிமாரின் உதவி கொண்டு மதமாற்றத்தினை செய்வதற்கு பயன்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். 1810 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் புலவர் அதிரியயார் அவர்களால் பாசையூர் கிராமத்தில் அந்தோனியார் என்ற கூத்து அரங்கேற்றப்பட்டது என்று புலவர் ஆசீர்வாதம் வெளியிட்ட "மனம் போல் மாங்கல்யம்" என்ற புத்தகத்திலிருந்து அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. யாழ்ப்பாணத்தினை பொறுத்தவரையில் பாசையூர், கரையூர், பறங்கித்தெரு, சுண்டுக்குளி போன்ற இடங்களில் 1810 தொடக்கம் 1976 வரை ஐம்பத்து ஐந்து நாட்டுக்கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டுள்ளன. பதினேழுக்கு மேற்பட்ட அண்ணாவிமார் நாட்டுக்கூத்துக்கு தம் அரும் சேவையை வழங்கி வந்துள்ளனர்.

பாசையூரில் புலவர் அதிரியார், புலவர் தொம்மையர், புலவர் மிக்கோர்சிங்கம், புலவர் பெ.கிறிஸ்தோபர், புலவர் ஆ.செகராசா, புலவர் சூசைப்பிள்ளை ஆகியோர் அந்தோனியார், தொன் நீக்கிலார், கத்தறீனள், மரியகரித்தாள், கிறிசாந்தப்பர்,

ஞானரூபன், புனிதவதி, லேயோன், சத்திய வேந்தன், கிறிஸ்தோபர், கண்டியரசன், கட்டபொம்மன், சத்தியநாதன், பவுலினப்பர், பிலோமினம்மா, ஞானசவுந்தரி, சவீனகன்னி, கற்பகமாலா, செபஸ்தியார், பிரகாசராசன், அருளானந்தர், முத்தா மாணிக்கம், வீரத்தளபதி சவுளன் சின்னப்பர் இம்மானுவேல், சற்குணானந்தன், மரியகொற்றறி, கிளியோபத்திரா போன்ற கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன.

கரையூரில் புலவர் அவுறாம்பிள்ளை, புலவர் சந்திரயோகு, புலவர் நீக்கிலஸ் ஆகியோரால் நொண்டி, சம்பேதுரு பாவிலு, சூசையப்பர் யாக்கோப்பு, வரப்பிரகாசம், சுளியார், யூதகுமாரன், கவீனகன்னி, மூவிராசாக்கள், என்றிக் எம்பிரதோர், இசிதோர், சந்தியோகுமையோர் படைவெட்டு, செனகம்பு, மாகிறேற்றம்மா, தீத்தூஸ், பங்கிராஸ், ஆட்டுவணிகன், ஊசோன் பாலன், போன்ற கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன.

பறங்கித்தெருவில் புலவர் தம்பாப்பிள்ளை, புலவர் சுபவாக்கியாம் பிள்ளை ஆகியோரால் கனகசபை, தாவீது கோலியாத்து, ஞானசவுந்தரி, உடைபடா முத்திரை போன்ற கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன. சுண்டிக்குளியில் புலவர் பொன்னையா, புலவர் யாக்கோப்பு, புலவர் வெ.மதியாம்பிள்ளை, புலவர் சந்தியாப்பிள்ளை. புலவர் எம்.வி.ஆசீர்வாதம் ஆகியோரால் சஞ்சுவோம், மத்தேசுமவுற்றம்மா, கிறிஸ்தோபர், மெஞ்ஞான வர்த்தகன், தானியேல், மரியதாசன், மார்க்கப்பர், மனம்போல் மாங்கல்யம் போன்ற கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன.

கிறிஸ்தவ கூத்துக்கள் அதிகமாக அரங்கேற்றப்பட்டதுடன் அவை சபைவிருத்தம், வண்ணதரு, கடித ஆசிரியம், தரு, காவலன் சந்தவிருத்தம், சிந்து, ஆசாரியம், விருத்தம், கொச்சகம் போன்ற பா வடிவங்களிலும் தோடையம், கலிலேயாவின், பணிக்கர் சிகாமணி, தந்ததாழிசை, ஆசிரியவிருத்தம், கலி, யாரடா நீ, வாராய் என் வஞ்சகியே போன்ற மெட்டுக்களிலும் பாடப்பட்டன.

இன்று நாட்டுக்கூத்தானது மக்களால் பெரிதும் இரசிக்கப்படும் தன்மையை இழந்து வருகின்றது குறிப்பிடத்தக்கதாகும். இன்றைய மக்களின் வாழ்க்கை முறையும் அவர்களின் ரசனைத்தன்மை மாறுபட்டதும் பொழுதுபோக்கு வசதிகள் அதிகமாக்கப்பட்டமையும் இதற்கான காரணிகளாக அமைகின்றது.

இதனை மறுசீரமைக்க நாட்டுக்கூத்து கலைஞர்களை கௌரவிப்பதும் மக்கள் மத்தியில் நாட்டுக்கூத்து தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் முக்கியமாக அமைகின்றது.

யாழ்ப்பாண பிரதேச செயலக பிரிவை பொறுத்தவரையில் தற்போது நாட்டுக்கூத்துக்காக தம்மை அர்ப்பணித்து செயலாற்றி வரும் கலைஞர்கள் பலர் இருக்கின்றனர். அந்த வகையில் உதராணமாக நாவாந்துறையில் தொம்மை,

அருள்ராசா, ஆ.மனுவேற்பிள்ளை, பாசையூரில் கலாபூசணம் கொலின், இராஜேஸ்வரி, குருநகரில் கலாபூசணம் அருண் காஞ்சிப்பிள்ளை மரியதாஸ் கலாபூசணம் கிரிகரி கிறிஸ்தோத்திரம், கொழும்புத்துறையில் கலாபூசணம் முடியப்பு அருட்பிரகாசம், கலாபூசணம் பிராண்சிஸ். அருட்கிருபாகரர் போன்றோர் குறிப்பிட்டு கூறத்தக்கவர்கள்.

இவர்கள் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்கள் இவர்களுக்கு பிறகு இந்தக் கலையினை எடுத்துச் செல்ல இளங்கலைஞர்கள் பற்றாக்குறை ஏற்படுவதை தடுக்க வேண்டுமாயின் இதற்கான வளங்களை பெருக்கி புதியவர்களை உட்புகுத்த வேண்டும்.

யாழ் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட மன்றங்களை பொறுத்த வரையில் திருமறைக்கலாமன்றம் குறிப்பிடத்தக்கதாகும். திருமறைக்கலாமன்றத்தால் பல கூத்து சம்பந்தமான புத்தகங்கள் வெளியிடப்பட்டதும் அதில் தர்மத்தில் பூத்த மலர்கள், புனித கிறிஸ்தோபர், எஸ்தாக்கியார், மரியதாசன் போன்ற கூத்து புத்தகங்கள் குறிப்பிடத்தக்கதாகும்.

இதைவிட பல கூத்துக்களை மேடையேற்றியுள்ளதும் குறிப்பிடத்தக்கதாகும் இதில் இந்து சமயம் சார் கூத்துக்களும் அடங்குகின்றது. இதில் மனுநீதி சோழன், கும்பகர்ணன், வனத்துறவி, அறங்காத்தான், ஏகலைவன், கம்பன் மகன், நீதிகாத்தான் போன்றவை குறிப்பிடத்தக்க வையாக அமைகின்றது.

சமகாலத்தில் திருமறைக்கலா மன்றம் பல கூத்துக்களை மேடையேற்றி வருகின்றது எனினும் அது கூத்தாக மட்டுமன்றி கூத்துருவ நாடகங்களாக அமைகின்றது. மன்றத்துக்கு வெளியே உள்ள கலைஞர் மத்தியில் நாட்டுக்கூத்து பற்றிய கருத்துக்களை கேட்கும் போது மன்றத்தின் செயற்பாடுகளால் தான் கூத்துக்கலை வடிவம் அருகிக் கொண்டு போகின்றது என்றும் மன்றத்தின் செயற்பாடுகளால் கூத்துக் கலைஞர்கள் பாதிக்கப்படுவதாகவும் கருத்து காணப்படுகின்றது. ஆனாலும் ஒருவகையில் திருமுறைக்கலா மன்றத்தில் கூத்துக்கள் (கூத்துருவ நாடகம்) இன்றும் ஜோன்சன் ராஜ் குமாரின் நெறியாள்கையில் நடைபெற்று வருகின்றதும் குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிட்ட வகையில் யாழ்ப்பாண பிரதேச செயலகப் பிரிவில் கூத்து கலையானது தோன்றியது முதல் இன்று வரை வளர்ந்தும் பல அண்ணாவிமார்களை உருவாக்கியும் கூத்தில் பல்வேறு பரிணாமங்களை கண்டும் வளர்ந்து வந்தது குறிப்பிடத்தக்கது.

# மனமும் மந்திரங்களும் – காயத்ரி மந்திரம்!!

வைத்திய கலாநிதி
சிவப்பிரகாசம் அனுஷ்யந்தன்

"மனமது செம்மையானால் மந்திரமும் செபிக்க வேண்டாம்" என்கின்றார் திருமூலர். ஆனால் அன்றாடம் அல்லற்பட்டு, தொல்லைப்பட்டு, செம்மைப்படாத மனத்தைச் செம்மையாக்க வேண்டுமெனில் நமது பண்டைய வேதங்களிலும், புராணங்களிலும் கூறப்பட்டு வந்துள்ள மந்திரங்களைச் செபிக்கத்தான் வேண்டும். அந்த வகையில் மனதைச் செம்மையாக்கக்கூடிய இலகுவான மந்திரங்களில், விசுவாமித்திரரால் அருளிச் செய்யப்பட்ட காயத்ரி மந்திரம் முதலிடத்தை வகிக்கின்றது. இதனை பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இன்று பாராயணம் பண்ணப் படுகின்ற மந்திரங்களில், காயத்ரி மந்திரம் மிகவும் அற்புதமான மந்திரமாக விளங்குகின்றது. குறிப்பாகச் சொல்வதென்றால், மனித உடலை இயக்குகின்ற ஒரு ஜிம் ஆகவே விளங்குகின்றது.

**பெரியவர்களின் பார்வையில் காயத்ரி மந்திரம் –**

1. காயத்ரி மந்திரத்தினைப் பற்றி சுவாமி விவேகானந்தர் குறிப்பிடும் பொழுது, "மந்திரங்களின் கிரீடம் காயத்ரி மந்திரம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.
2. ஜே.பி.எஸ். ஹால்டேன் என்ற பிரபல விஞ்ஞானி (1892-1964) காயத்ரி மந்திரத்தினைப் பற்றி குறிப்பிடும் பொழுது காயத்ரி மந்திரம் ஒவ்வொரு இரசாயன, உயிரியற் பரிசோதனைக் கூடங்களின் வாயில் கதவுகளிலும் பொறிக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.
3. பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் கீதையில் "நதிகளில் நான் கங்கையாகவும், மலைகளில் நான் விந்திய மலையாகவும், மந்திரங்களில் நான் காயத்ரி மந்திரமாகவும் இருக்கின்றேன்" என்று காயத்ரி மந்திரத்தின் சிறப்பினைக் கோடிட்டுக் காட்டுகின்றார்.
4. சுவாமி இராம கிருஷ்ண பரமஹம்சர் கூறுகையில் "பெரிய பெரிய கடுந்தவ முயற்சிகளில் மனிதர்கள் ஈடுபடுவதனைக் காட்டிலும், காயத்ரி மந்திரத்தினை ஜபிப்பது மிகப்பெரிய சாதனையாகும். இது மிகச் சிறிய மந்திரம்தான். ஆனால், மிக மிகச் சக்தி வாய்ந்தது" எனக் குறிப்பிட்டுள்ளார்.
5. பிரபல மேலை நாட்டு ஞானி, ஆர்தர் கொயெஸ்ட்லர்: "காயத்ரி மந்திரம், 1000 ஆடும் பாம்புகளுக்குச் சமம்" எனக் குறிப் பிட்டுள்ளார்.
6. ஜெர்மன் தத்துவ ஞானி, மெக்ஸ் முல்லர் (1823-1900) அவர்கள் "ஒளியினை தவம் செய்து நம் மூளை, மனதினை உயர்த்துவோம்" எனக் குறிப்பிட்டுள்ளார்.
7. மகாத்மா காந்தி (1869-1948) அவர்கள் "யார் ஒருவர் காயத்ரி மந்திரத்தினை ஜபிக் கின்றாரோ அவர் நோய்க்கு ஆளாக மாட்டார்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

### காயத்ரி மந்திரத்தின் பொருள் என்ன?

காயத்ரி மந்திரத்தினை, உச்சரிப்பது அல்லது சொல்லுவதன் பொருள் "உயர் அறிவு சக்தியினை அளித்து, அறியாமையை நீக்க வேண்டும்" என்பதாகும். இம்மந்திரம் சொல்லப்படும் பொழுது எழும் அதிர்வுகள், மனித உடலில் காணப்படுகின்ற 24, கானில் சுரப்பிகளை அல்லது அகஞ் சுரப்பிகளை ஊக்குவிக்கின்றது. இதன் காரணமாக 24 வகை சக்திகள் உடலில் உண்டாகின்றன. காயத்ரி மந்திரத்திற்கு ஜாதி, மதம் என்ற எந்த பிரிவும் பேதமும் கிடையாது.

காயத்ரி மந்திரத்தின் 24 அட்சரங்களால் குறிக்கப்படும், கிடைக்கக்கூடிய 24 அற்புதமான விடயங்கள் -

தத் - வெற்றி
ச - வீரம்
வி - பராமரிப்பு
து - நன்மை
வ - ஒற்றுமை
ரி - அன்பு
நி - பணம்
யம் - அறிவு
ஃபர் - பாதுகாப்பு
க்கோ - ஞானம்
த்தி - அழுத்தம்
வா - பக்தி
ஸ்யா - நினைவாற்றல்
ஃத்தி - மூச்சு
மா - சுய ஒழுக்கம்
யோ- விழிப்புணர்வு
யோ- உருவாக்குதல்
நஹ- இனிமை
பரா- நல்லது
சோ- தைரியம்
த்தா- ஞானம்
யட் - சேவை

### காயத்ரி மந்திரம் என்றால் என்ன?

வேதத்திலிருந்து வந்த அனைவருக்கும் பொதுவான மந்திரம் தான் காயத்ரி மந்திரம். இது மனித இனத்தின் மிகப் பெரிய மறை நூலாகிய வேதத்தில் பொதிந்து காணப்படுகின்றது (ரிக் வேதம் -111.62.10).

### காயத்ரி மந்திரத்தின் சொற்களால் குறிப்பிடப்படும் நன்மைகள் –

ஓம் - தெய்வீக சக்தி, ஓங்கார ஒலிச் சின்னம்.
ப்பூ - உடல் விமானம்.
புவஹா - நிழலிடா விமானம்.

ஸ்வ - வான விமானம்.
தத் - அந்த தலை தெய்வத்தின்.
ஸவித்து - பிரபஞ்சம் தயையும் சக்தி.
வரேன்யம் - வணங்க வேண்டும்.
பர்கோ — பிரபல.
தேவஸ்ய - பிரகாசமிக்க.
தீமஹி - நம் த்யானம்.
தியோ — அறிவினை.
யா - யார்.
நஹ - எங்கள்.
ப்ரசோதயாத் - தெளிவுப்படுத்துங்கள்.

**காயத்ரி மந்திரம் உச்சரிக்கப்படும் விதம் –**

ஓம் பூர் : புவ : ஸ/வஹ :
தத் ஸவிதுர் வரேண்யம்
பர்கோ தேவஸ்ய தீமஹி
தியோ : யோந: ப்ரசோதயாத்

"யார், நம் புத்தியை இயங்கச் செய்து, புத்தியைப் பிரகாசிக்கச் செய்கின்றாரோ, அந்தப் பரமாத் மாவை நாம் வணங்குவோம்"என்பது காயத்ரி மந்திரத்தின் சுருக்கமான பொருள்.

இம் மந்திரம் ரிஷி விஸ்வாமித்திரரால் வெளிப்படுத்தப்பட்டது. சூரிய பகவானையும் அவருடைய எல்லையில்லா ஆற்றலையும் நோக்கி வழிபடுவதாக இம் மந்திரம் அமைந்துள்ளது. மிக அதிக சக்தி கொண்டது. அதிர்வுகள் மூலம் ஆக்கப்பூர்வ சக்தியினை ஏற்படுத்துவது. வேதங்களின் தாய் தான் காயத்ரி தேவி. இம் மந்திரம் சொல்லப்படும் இடங்களில் எல்லாம் இத்தேவி இருப்பாள். இத் தேவிக்கு சாவித்திரி, சரஸ்வதி என்ற பெயரும் உண்டு.

காயத்ரி ஐம்புலன்களின் அதிபதி. சாவித்திரி, ப்ராண சக்தியாக இருப்பவள். சாவித்திரி என்பது உண்மையைக் குறிக்கின்றது. சரஸ்வதி வாக்கின் அதிபதியாக இருப்பவள். ஆக, உண்மையான சிந்தனை, சொல், செயல் இவற்றினை குறிப்பதாக அமைகின்றது. காயத்ரி மந்திரம் வேதத்தின் சாரம். இதனை முழு கவனத்தோடே சொல்ல வேண்டும். காலை, மாலை இருவேளையும் சொல்லலாம். அனைவரும் சொல்லலாம். இருதயம் சுத்தமாகும். தீய எண்ணங்கள், கவலைகள் நீங்கும். குறிப்பாக, பள்ளி மாணவர் திறமையாகப் படிப்பார்கள்.

**காயத்ரி மந்திரம் ஜபிப்பதன் பலன்கள் –**

1. கம்பீரமாக தோற்றம் கிடைக்கும்.
2. தரமான பேச்சு, நாவன்மையான பேச்சு கிடைக்கும்.
3. காணப்படுகின்ற வறுமை, குறை என்பன நீங்கும்.
4. ஜபிப்பவரைச் சுற்றிப் பாதுகாப்பு வட்டம் போல் பாதுகாக்கும்.
5. கண்களில் அறிவு தெரியும்.

6. திடீரென தோன்றக்கூடிய அபாயம், தேவையற்ற சூழ்நிலை நீங்கும்.
7. மனித உடலில் காணப்படும், நரம்புகளும், சுரப்பிகளும் ஊக்குவிக்கப்படும்.
8. எப்போதும் அமைதியாகவும் சாந்தமாகவும் இருப்பர்.
9. நற்செயல்களில், நற்காரியங்களில் ஈடுபடுவர்.
10. காந்த சக்தி ஆகியவை உருவாகும்.
11. வாழ்க்கையில் தடைகளை நீக்கும்.
12. மூளையை, அறிவை பிரகாசிக்கச் செய்யும்.
13. உள்ளுணர்வினை தெளிவாக்கும்.
14. உயர் உண்மைகள் தெரிய வரும்.

டாக்டர். ஹெவார்ட் ஸ்டியன் கெரில் என்ற அமெரிக்க விஞ்ஞானி காயத்ரி மந்திர பலன்களாக பல செய்திகளை வெளியிட்டுள்ளார். ஆனால், இதற்கு மேலும் ஆதாரப்பூர்வமான சான்றுகள் தேவைப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளாக, சில வெளிநாடுகளில் காலை 7 மணிக்கு சுமார் 15 நிமிடங்கள் தொடர்ந்து காயத்ரி மந்திரத்தினை ஒலிபரப்புவதாக கூறப்பட்டுள்ளது.

இம்மந்திரம் முழுக்க முழுக்க ஒளியினை வணங்குவதும், மனதின் இருளினை நீக்க வேண்டுவதாக அமைந்துள்ளதால், மதங்கள் பலவற்றைக் கடந்தும், இம்மந்திரம் பெரிதும் வரவேற்கப்படுகின்றது.

ஒரு மந்திரமோ, தியானமோ, யோகாவோ, உடற்பயிற்சியோ ஆரம்பிப்பதற்கு முன்னால் உங்கள் மருத்துவர் ஆலோசனை பெறுவது அவசியம். ஒரு பழக்கம் உங்களை விட்டு நீங்க (உ-ம்) காபி, டீ பழக்கம் போன்றவை நீங்க 40 நாட்கள் ஆகும். த்யானமோ, மந்திரமோ அது பழக்கமாக ஆரம்பிக்கும் பொழுது அது உங்களுக்கு கை கூடி வர, பழக்கப்பட 90 நாட்கள் ஆகும். 120 நாட்களில் புதுப்பழக்கம், நன்கு பழகி விடும். 120 நாட்களில் நாங்கள் வேண்டாம் என்று கை விட்ட பழக்கமும் நம்மிடம் நன்கு நீங்கி விடும்.

1000 நாட்களில் நீங்கள் செய்யும் சாதனையிலோ, கடைப்பிடிக்கும் பழக்கத்திலோ நீங்கள் மாஸ்டர் ஆகி விடுவீர்கள். (உ-ம்) தொடர்ந்து நீங்கள் 1000 நாட்கள் காலை 4 மணிக்கு எழுந்தால், வாழ்நாள் முழுவதும் அவ்வாறே செய்வீர்கள்.

## காயத்ரி மந்திர சாதனையும் உடற்றொழிலியல் மாற்றங்களும்

1. மந்திரத்தைத் தொடர்ந்து 3 நிமிடங்கள் ஜபிப்பதால் உங்களைச் சுற்றியுள்ள மின்சார காந்த அலைகளை தாக்கும். ரத்த ஓட்டம் சீர்படும்.
2. ஏழு நிமிடம் தொடர்ந்து ஜபிப்பது, உங்கள் மூளை செயல் திறனைக் கூட்டும். உடல் வலுவினைக் கூட்டும். உடலைச் சுற்றியுள்ள காந்த அலைகளில் நல்ல மாறுதல்கள் ஏற்படும்.
3. 11 நிமிடம் தொடர்ந்து மந்திரம் ஜபிப்பதும், தியானம் செய்வதும் நரம்பு மண்டலத்திலும், சுரப்பிகளிலும் நல்ல மாற்றத்தினை ஏற்படுத்தும்.

4. 22 நிமிடங்கள் தொடர்ந்து மந்திரம் ஜபிப்பதும், தியானம் செய்வதும் ஒருவரின் அழிவுப்பூர்வ, ஆக்கப்பூர்வ இரண்டும் இல்லாத நிலைகளில் தடுமாறும் மனதினை நிலைப்படுத்தி தெளிவாக சிந்திக்க வைக்கும். உள் உணர்வினைக் கூட்டும்.

5. 31 நிமிடங்கள் தொடர்ந்து ஜெபிப்பது சுரப்பிகளை சீர்ப்படுத்தும். மூச்சு சீராகின்றது. அனைத்துத் திசுக்களும் புதிதாக சீர்படத் தொடங்குகின்றன.

6. 62 நிமிடங்கள் தொடர்ந்து ஜபிக்கும் பொழுது மூளையில் "க்ரே" பகுதியில் மாற்றம் ஏற்படுகின்றது. பிட்யூட்டரி, பீனியல் சுரப்பிகள் நன்கு இயங்குகின்றன.

7. இரண்டரை மணிநேரம் தொடர்ந்து ஜெபிக்கும் பொழுது உயர்நிலையினை மனம், மூளை போன்றன அடைகின்றது. நாள் முழுவதும் ஆக்கப் பூர்வமாகவே செயல்படுவர்.

மேற்கூறப்பட்டுள்ள கருத்துக்களுக்கு விஞ்ஞான ஆய்வு முடிவுகள் இல்லை என்றாலும், காயத்ரி மந்திர சாதனையைத் தொடர்ந்து செய்துவரும், பல இலட்சக்கணக்கான சாதகர்களினால், பல அனுபவ ரீதியான கருத்துக்களாக வெளியிடப்பட்டுள்ளன.

## மந்திரம் சொல்வதற்கென சில முறைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன

1. காலை 4 மணிக்கு எழுந்து நாலரை மணிக்குள் தயாராகுங்கள்.
2. கிழக்கு முகமாக அமருங்கள்.
3. ஞான முத்திரை பரிந்துரைக்கப்படுகின்றது.
4. மந்திரத்தினை பொறுமையாய் 108 முறை சொல்லுங்கள்.

## பிற மந்திர சாதனைகள் –

1. மகாத்மா காந்தி அவர்கள், அவர்களது "இயற்கை வைத்தியம்" என்ற புத்தகத்தில் "ஒரு மருத்துவரின் கடமை நோயாளியின் உடலுக்கு கவனம் செலுத்துவது மட்டுமல்ல. அவரது ஆன்மாவிற்கும் கவனம் செலுத்த வேண்டும்" என்று குறிப்பிட்டுள்ளார். அந்த வகையில் அவர்கள் "ராம" நாமத்தினை பரிந்துரைக்கின்றார். மேலும் "ராம" நாமம் அனைத்திற்கும் தீர்வு என்று குறிப்பிடுகின்றார். இந்த நாமத்தினை சொல்பவர்கள் சிறிய முயற்சியிலேயே அரிய செயல்களை சாதிக்க முடியும் என்றும் குறிப்பிட்டுள்ளார். "ரா" என்பது "ஓம் நமோ நாராயணா என்பதிலிருந்தும், "ம" என்பது "ஓம் நம சிவாய" என்பதிலிருந்தும் சேர்க்கப்பட்டதால், இரட்டிப்பு பலன் என்றும் கூறப்படுகின்றது.

2. கந்தர் சஷ்டி கவசத்தில் கூட "ரஹன பவச ரரரர, ரிஹண பவச ரிரிரிரி" என சொல்லப்படுகின்றது. "ரா" என்ற எழுத்தும் "ம" என்ற எழுத்தும் உச்சரிக்கப்படும் பொழுது உடலில் ஏற்படும் அதிர்வுகள் அவரது உடல் நலத்தினையும், மன நலத்தினையும் காப்பதாக விளக்கப்படுகின்றது. ஆக, மந்திரங்களும் அமிர்த மருந்தே என்பதை அறிவோமாக!

# இசையில் யோகப் பயிற்சியின் பங்களிப்பு

திரு. லோ. ஸ்ரீகுமார்
நுண்கலைமாணி
புல்லாங்குழல்.

“ஆயகலைகள் அறுபத்து நான்கு ” என்கிறது சிலப்பதிகாரம். இவ் அறுபத்து நான்கு கலைகளில் இசை, யோகம் என்பனவும் இடம்பெறுகின்றன. ஏதோ ஒரு வகையில் இவ் இரண்டு கலைகளும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டனவாக உள்ளன. யோகம் என்பதற்கு இணைதல், சேர்தல், ஒருமுகப்படுத்தல் என்பது பொருள். ஒவ்வொரு மனிதனும் உடல், உயிர், மனம் எனும் மூன்று வகையில் கட்டமைக்கப்பட்டுள்ளன. இத்தகு மனிதர்கள் உயிருடனும் நலமுடனும் வாழ உடலாரோக்கியம் முக்கியமாகின்றது.

இத்தகு உடலாரோக்கியம் இசைக் கலைஞர்களுக்கு மிக அவசியம் ஆகும். அவ்வாறே மன ஒருநிலைப்பாடு என்பதும் அவசியமாகின்றது. இவ்விரண்டையும் ஓர் இசைக் கலைஞனுக்கு வழங்குவதற்கு பெரிதும் உதவுவது யோகப்பயிற்சியே ஆகும்.

“சுருதி மாதா, லயம் பிதா” என்பது இசைக்கலையில் நம் முன்னோர் கூறிய வாக்காகும். சுருதியுடன் இணைந்து தாளத்தில் லயித்துக் பாடுதல் என்பது இசையின் முக்கிய அங்கமாகும். ஒரு விடயத்தில் லயிக்க வேண்டுமாயின் முதலில் மனம் அவ் விடயத்தில் ஈடுபட வேண்டும். மன ஒருமைப்பாடு என்பது இசையின் மிக முக்கிய பகுதியாகும். அவ்வாறு மனம் ஈடுபடுவதற்கு “நாடி சுத்திப் பிரணாயாமம்” உதவுகின்றது. இதனை யோகப் பயிற்சியின் மூலமே பெற முடியும். இப் பயிற்சியை செய்வதனால் பாடுபவர்கள், கருவி இசைப்பவர்கள் என்போர் தமது செயலில் முழுமையாக ஈடுபட முடியும்.

சில பாடகர்களுக்கு மேல் ஸ்தாயியில் பாடுதல் , கீழ் ஸ்தாயியில் பாடுதல் போன்ற பல சிரமங்கள் காணப்படுகின்றன. இத்தகு பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு யோகக்கலையிலே “ஓம்” கார தியானமானது பயன்படுகிறது.

பெரும்பாலும் பாடுகின்ற பாடகர்களில் உடல் பருமனாக இருப்பவர்களுக்கு சந்திர நாடி (இடது பக்க சுவாச நாடி) தொழிற்படுமாயின் அவர்களுக்கு தார ஸ்தாயி, மந்திர ஸ்தாயி ஆகிய ஸ்தாயிகளில் பாடுவதில் கஷ்டம் ஏற்படலாம். எனவே இதனை நீக்குதவற்கு பாடுதற்கு முன் அரைமணி நேரத்திற்கு முன்பு வலது காதில் பஞ்சை வைக்க வேண்டும். இவ்வாறு வைப்பதனால் இயல்பாகவே அவர்களது சுவாசம் சூரிய நாடிக்கு (வலது பக்க சுவாச நாடி) மாற்றம் பெறம். இதற்கு எதிர்மாறானது உடல் பருமனில் மிகவும் குறைந்தவர்களுக்காகும். இதனை யோகபப்பயிற்சியின் மூலமே கண்டுபிடித்துள்ளனர்.

இசைக்கச்சேரிகளில் பாடுகின்ற பாடகர்களாயினும் சரி, வாத்திய இசைக் கருவிகளை இசைக்கின்ற இசைஞர்களாயினும் சரி நீண்ட நேரம் ஒரே வகையான உடல் நிலையில் அமர்ந்திருப்பதால் அவர்களுக்கு உடற்பாகத்தில் வலி, விறைப்பு, சோர்வு போன்ற பாதிப்புக்கள் ஏற்படும். குறிப்பாக வயலின், வீணை, புல்லாங்குழல் முதலான கருவிகளை வாசிப்போர்க்கு கழுத்து, தோள் பட்டை, கை விரல்களில் வலி ஏற்படும். பாடுபவர்களுக்கு இடுப்பு, தோள், முழங்கால் கணுக்கால்களில் வலி ஏற்படும். இத்தகு பாதிப்புக்களினின்றும் விடுதலை பெற யோகாசனப்பயிற்சி பெரிதும் துணை புரிகிறது.

பாடுபவர்கள் மற்றும் காற்று இசை வாத்தியங்களை வாசிப்பவர்களுக்கு அதிகநேரம் மூச்சுக்காற்றை உள்ளடக்கி தம்பிடித்தலானது மிகவும் அவசியமான ஒன்றாகும். இதனை பெறுவதற்கு யோகாசனப்பயிற்சியில் காணப்படும் "பஸ்திரிகா பிரணாயாமம்" துணை புரிகிறது.

இசைக்கலையைப் பயில்வோருக்கு கற்பனை வளம் பெருகுவதற்கும் அதுமாத்திரமன்றி இசைக் கலையைப் பயில்வோருக்கும் இசைக்கலைக்கும் உரிய உயர் அந்தஸ்து சமூகத்தவர்களால் கொடுக்கப்படாததால் அவர்களுக்கு ஏற்படும் மன தாக்கம், தாழ்வு மனப்பாங்கு என்பவற்றை நிவர்த்தி செய்யவும் மாணவர்கள் பரீட்சை மற்றும் இசை அரங்குகளில் தங்களது ஆற்றுகைகளை வெளிப்படுத்தும்போது ஏற்படுகின்ற பயம், பதட்டம் என்பவற்றை நீக்குவதுடன் தம்மைத் தாமே கட்டுப்படுத்தவும் "தியானப் பயிற்சி" உதவுகின்றது.

## இசையில் யோகப்பயிற்சியின் பயன்பாடு

யோகப்பயிற்சியின் மூலம் இசையிலே பல்வேறு வகையான பயன்களைப் பெற முடிகின்றது. அந்த வகையில் "நாடி சுத்திப் பிரணாயாமம்" செய்வதன் மூலம் மனம் அகம் நோக்கித் திரும்பப்பட்டு ஒருமுகப்படுத்தப்படுவதுடன் அமைதியடையவும் உதவுகின்றது.

"ஓம்" கார தியானத்தின் மூலம் பாடகர்களினுடைய மனதிலே ஒரு தெளிவும், அமைதியும், நம்பிக்கையும் கூடுகின்றது. மனக் கட்டுப்பாட்டை வளர்க்க முடிகிறது. அத்துடன் பாடுவதிலுள்ள சில சிரமங்களைக் கூட இதன் மூலம் சில மாதங்களில் நீக்கிக் கொள்ள முடியும்.

அடுத்து "பஸ்தரிகா பிரணாயாமத்தை"ப் பார்ப்போமாயின் இப் பயிற்சியின் மூலம் பாடுபவர்களினுடைய நுரையீரல் நான்கு விரிவடைந்து அதிக காற்று தக்க வைப்பதுடன் தொடர்ந்து பாடகர்கள் கார்வை கொடுத்துப் பாடவும் துணை புரிகின்றது.
மனதானது சிந்தனையின் மூலம்அடைவது "தியானம்" ஆகும். கவனத்தை ஈர்க்கும் பிற

சக்திகளில் இருந்து விலகி முழுமையாக மனம் ஒருநிலைப்பட வேண்டுமாயின் யோகாசனம் அவசியமாகின்றது. அந்தவகையில் தியானம் செய்யும் ஆசனங்களாக,

- பத்மாசனம்
- சுகாசனம்
- வஜ்ராசனம்

என்பவற்றைக் குறிப்பிடலாம். இவற்றின் மூலம் மனம் ஒரு நிலைப்படுத்தப் படுகிறது. கால் தசைநார்கள் வலிமை பெறுகின்றது. மூட்டுவலி, மூட்டுப்பிடிப்பு போன்ற தொல்லைகள் நீங்குகின்றது. தலைவலி நீங்குகின்றது.

இசைக்கலைஞர்கள் ஆஸ்துமா, தலைவலி, முதுகுவலி என்பவற்றிலிருந்து விடுதலை பெற வேண்டுமாயின் அவர்கள் "மத்ஸ்யாசனம்" செய்தல் வேண்டும். இதன் மூலம் இத்தகு நோய்கள் நீங்குவதுடன் அவர்களுடைய முதுகுத்தண்டும் வலுப்பெறும். இது ஒரு கலை நயம் படைத்த ஆசனம் ஆகும்.

காற்று வாத்தியங்களை வாசிக்கின்ற கலைஞர்கள் அவர்களுடைய மார்பு விரிவடையும், கழுத்துத் தசை உறுதி பெறவும், மூட்டுத்தொல்லைகள் நீங்கவும் "புஜங்காசனம்" செய்தல் அவசியம் ஆகின்றது.

இசைக்கலைஞர்களுடைய உடம்பிலே ஓர் நிலைத்தன்மை ஏற்படவும் கூன்விழுவதைத் தவிர்க்கவும், கால் தசைகள் உறுதி பெறவும் வாதம், முதுகுவலி, கழுத்துவலி என்பன நீங்கவும் அவர்கள் "தாடாசனம்" செய்தல் வேண்டும்.

விருட்சாசனத்தை இசைக்கலைஞர்கள் பயிற்சி செய்வார்களேயானால் அவர்களுடைய மனம் ஒருமைப்பட்டு திட சிந்தனை ஏற்படும். மனசஞ்சலம் ஒழியும். காரியங்களை செம்மையாக முடிக்கும் ஆற்றல் ஏற்படும். ஆற்றுகையின் போது அவர்களுக்கு ஏற்படும் பயம், பதட்டம் என்பன ஒழியும், மனம் அமைதி பெறும் கால் தசைகள் உறுதியடையும். முதுகுப்பிடிப்பு நீங்கும்.

"சிரசாசனம்" செய்வதன் மூலம் நல்ல ஞாபக சக்தியைப் பெற முடியும். இது இசைக்கலைஞர்களுக்கு மட்டுமன்றி மாணவர்கள் அனைவருக்கும் அவசியமான ஒன்றாகும். மேலும் மன ஒருமுகப்பாடு, கழுத்து, தோள் பகுதித் தசைகளின் உறுதிப்பாடு, உடற்சுரப்பிகள் அனைத்தினதும் உறுதிப்பாடு, சிந்தனைச் சக்தி என்பவற்றையும் பெற முடியும். அது மாத்திரமன்றி தலைகீழாக நின்று மூளைக்கு அதிக இரத்தம் செல்தனால் காச நோய், நரம்புத்தளர்ச்சி என்பவற்றிலிருந்தும் பாடகர்கள் விடுதலை பெற முடியும்.

**இசை பயில்வோரும் இசைக்கலைஞரும் யோகப்பயிற்சி செய்வதன் முக்கியத்துவமும் இசையில் யோகத்தின் பயன்பாடும்.**

இசை இசைப்பதன் மூலம் நமது உடலிலுள்ள பலதரப்பட்ட நோய்களைத் தீர்க்க முடிகின்றது. அந்த வகையில் வயிற்றுவலி நீங்க வேண்டுமாயின் சுப பந்துவராளியின் ஜன்னியமாகிய ருத்ரமஞ்சரியை நான்கு நாட்கள் முறையாகப் பாடினால் வயிற்றுவலி நீங்கும். அவ்வாறே,

| | |
|---|---|
| தலைவலி | : சயனரஞ்சனி (27ன் ஜன்யம்) |
| தலைசுற்றல் | : ஹம்சவாதினி (31ன் ஜன்யம்) |
| மூக்கடைப்பு | : வாசஸ்பதி (64 மேளம்) |
| ஆஸ்துமா | : நாட்டை (36ன் ஜன்யம்) |
| | குந்தலவராளி (22ன் ஜன்யம்) |
| சர்க்கரை வியாதி | : நளினகாந்தி (29ன் ஜன்யம்) |
| உயர் இரத்த அழுத்தம் | : சிந்துபைரவி (20ன் ஜன்யம்) |
| திக்குவாய் | : ஸிபோஸினி (28ன் ஜன்யம்) என்பவற்றைப் பாடலாம். |

இசைக்கலையும் யோகக்கலையும் ஒன்றுக்கு கொன்று ஐக்கயமாகி உள்ளது எனலாம். இசைக்கலையும் யோகக்கலையுயம் மனதையும் உடலையும் ஒரு சேர உறுதிப்படுத்தும் கலையாகும். இதில் இசைக்கலை மன அமைதியையும் கற்பனைத்திறனையும் கலை நுணுக்கத்தையும் தரவல்ல அற்புதக்கலையாகும்.

இசையை மிடற்றோசை, கருவியோசை என இரண்டாகப் பிரிப்பர். இதில் மிடற்றோசை என்பது ஏழிசையில் வருகின்ற 'குரலாகும்'. குரல் வளத்தை பாதுகாப்பது இசைஞர்களின் முக்கிய கடனாகும். ஒலியானது தலை, மிடறு, நெஞ்சு, மூக்கு, இதழ், உந்தி போன்ற இடங்களில் பிறக்கின்றது. இவ் உறுப்புக்களில் ஏதாவது ஒன்றில் பாதிப்பு ஏற்படுமாயின் இசையை நல்ல முறையில் பயிலவோ பாடவோ இயலாது. எனவே குரலைக்காக்கின்ற வழிகளை எல்லாம் பெற வேண்டுமாயின் ஓர் இசைஞனுக்கு யோகப்பயிற்சி அவசியமாகின்றது.

இசை என்பது செவி வழியாக சிந்தைக்குப் புலனாகி உயிர்களுக்கு இன்ப துன்பங்களை விளைவிக்கும் ஒரு கலையாகும். இவ்விசைக்கு சுருதி, லயம் என்பன முக்கிய அங்கமாகும். இசையை காலப்பிரமானம் பிசகாது இசைப்பதற்கு லயவாத்தியங்களை கலைஞர்கள் உபயோகிக்கின்றனர். அத்தகு லய வாத்தியங்களான மிருதங்கம், கடம், கஞ்சிரா, மோர்சிங், தவில் போன்றவற்றை வாசிக்கின்றபோது அவர்களுக்கு கைவலி, மூட்டுவலி, இடுப்புவலி, விறைப்பு

போன்றன ஏற்படும். இவற்றிலிருந்து விடுதலை பெற வேண்டுமாயின் யோகாசனம் செய்தல் வேண்டும்.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இசை பயில்பவர்களுக்கும் இசைக் கலைஞர்களுக்கும் மனம் ஒருநிலைப்பட வேண்டியது அவசியம் ஆகின்றது. இம் மனம் ஒருநிலைப்பாட்டை தரவல்லது யோகாசனங்களில் தியானப்பயிற்சி ஆகும்.

இவ்வாறாக யோகப் பயிற்சியானது இசை பயில்வோருக்கும் இசைக் கலைஞர்களுக்கும் மிக முக்கியத்துவமுடைய ஒன்றாக விளங்குகின்றது.

இத்தகு முக்கியத்துவம் வாய்ந்த இவ் யோகத்தைப் பயிற்சி செய்வதன் மூலம் இசைக்கலைஞர்கள் பெறும் பயன்கள் சில வருமாறு.

1. மனம் ஒருநிலைப்படுகின்றது
2. சளி, சைனஸ், மூக்கடைப்பு போன்ற தொல்லைகளினின்று விடுதலை பெற முடியும்.
3. அதிக நேரம் சுவாசக் காற்றை உள்ளடக்க இயலுவதால் தம் பிடித்துப்பாட எளிதாகின்றது.
4. மேல், கீழ் ஸ்தாயி ஸ்வரங்களை சிரமமின்றிப்பாட முடியும்.
5. கண்பார்வையை அதிகரிக்கும்.
6. ஒரே ஆசனத்திலிருந்து பாடுதல் இசைக்கருவிகளை இசைத்தல் என்பவற்றால் ஏற்படும் இடுப்புவலி, கால்வலி என்பவற்றை நீக்க முடியும்.
7. ஞாபகசக்தி மற்றும் கற்பனா சக்தியை அதிகரிக்கின்றது.
8. மன சாந்தியுடன் புத்தியை விசாலமாக்குகின்றது.
9. கொடுந்துயர் தீரவும் மறக்கவும் வழிசெய்கின்றது.
10. மனதில் கோபம், உடல் நடுக்கம், படபடப்பு, மயக்கம், தெளிவற்ற சிந்தனை என்பவற்றை போக்கி ஆழ்ந்து சிந்திக்கும் ஆற்றலை வளர்க்கின்றது.

## ஆரபி இராகம் - ஓர் அறிமுகம்

ஆரோகணம் - ஸ ரி ம ப த ஸ்

அவரோகணம் - ஸ் நி த ப ம க ரி ஸ

இது 29 ஆவது மேளமாகிய சங்கராபரணத்தின் ஜன்னியம் ஔடவ சம்பூர்ண இராகம் உபாங்க இராகம். ஆரோகணத்தில் க, நி வர்ஜம். இந்த இராகத்தில் ஸட்ஜம் சதுஸ்ருதி ரிஷபம், அந்தர காந்தாரம், சுத்த மத்தியமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலி நிஷாதம் போன்ற ஸ்வரங்கள் வருகின்றன.

ஜீவ ஸ்வரங்கள் - ரி, ம, த ஆகும்

நியாச ஸ்வரங்கள் - ரி, ப ஆகும்

கிரக ஸ்வரங்கள் - ரி, ப, த ஆகும்

ஆரபி என்றால் 'பயிரிடுதல்' என்பது பொருள் தீய குணமுடையவர்கள் இதனைக் கேட்கும் பொழுது நல்லெண்ணம் வெளிப்படும் என்பர். கன பஞ்சக இராகங்களாகிய நாட்டை கௌளை, ஆரபி வராளி, ஸ்ரீ ஆகியவற்றில் இது மூன்றாவதாக வருகிறது மத்தியம கால சஞ்சாரங்கள் அல்லது தானம் இசைக்கும் பொழுது இந்த இராகத்தின் சாயை நன்கு வெளிப்படும் பபததச்ச்ரிரி போன்ற ஜண்டைச் ஸ்வரக்கோர்வைகளும், ச்ச்ததபபமகரிரி போன்ற நிஷாத வர்ஜ ஸ்வரக்கோர்வைகளும் இந்த இராகத்திற்கு இனிமையைக் கொடுக்கின்றன. நிஷாதம் இல்லாமலே சில இசை வடிவங்கள் உள்ளன நிஷாதமும் காந்தாரமும் அல்ப சுரங்கள் மா, கரிசரீ ஓர் அழகான ஸ்வரக்கோர்வை இந்த இராகத்தின் ரி, ம, ப போன்ற ஸ்ரங்கள் கிரக பேதத்தினால் முறையே ஆபேரி (22 சகமபநிச் - ச்நிதபமகரிச) மோகன கல்யாணி (65 சரிகபதச் - சநிதபமகரிச) கேதார கௌளை (28 சரிமபநிச் - ச்நிதபமனரிச) ஆகிய இராகங்களைத் தோற்றுவிக்கும் தேவாரத்தில் இதற்குப் பண் பழந்தக்க இராகம் எனப் பெயர். எப்பொழுதும் பாடலாம் என்றாலும் அதிகாலையில் பாடுவதற்கேற்றது. ஆண் இராகமாகவும் உள்ளது. மேலும் பழுப்பு நிறத்தையும், பெருமிதச் சுவையையும் கொண்டது. மங்களகரமான இந்த இராகத்தை பரதநாட்டிய நிகழ்ச்சிகளின் தொடக்கத்தில் பாடி வந்தனர்.

சஞ்சாரம் : பா மபமகரீ - ரிமபதாபமகரீ - தச்ரிப்ம்க்ரீ - தரிச்நிதா - ப - மா
பாதம மா, கரிசரீ - மகரீ - ச்நிதா - ம்க்ரீ - ச்நிதரீரி - ததச்ாஸ் - பபதாத
மபதச்ததபபம - பமகரிரி - சரிசநிதா - ததரிரிசதசா

இசை வடிவங்கள் :


| | | | |
|---|---|---|---|
| கீதம் | - வாரணமுகா | - திரிபுடை | - டைகர் வரதாச்சாரியார் |
| வர்ணம் | - அன்னமே | - ஆதி | - டைகர் வரதாச்சாரியார் |
| பஞ்சரத்தினம் | - சாதிஞ்சனே | - ஆதி | - தியாகராசர் |
| திருவாசகம் | - முக்திநெறி | - ஆதி | - மாணிக்கவாசகர் |
| கிருதி | - ஸ்ரீ சரஸ்வதி | - ரூபகம் | - முத்துசுவாமி தீட்சிதர் |
| கிருதி | - சுந்தர குஞ்சித | - ஆதி | - முத்துத்தாண்டவர் |
| கிருதி | - ஒருக்கால் சிவ | - ஆதி | - மாரிமுத்தாப்பிள்ளை |
| கிருதி | - பிறவாத வரம் | - ஆதி | - கோபாலகிருஷ்ணபாரதியார் |
| கிருதி | - ஓராறு முகனே | - ஆதி | - நீலகண்ட சிவன் |
| கிருதி | - அன்பு கொண்டென்னை | - மிச்ரசாபு | - தண்டபாணி தேசிகர் |
| கிருதி | - அம்பா நின்னு | - ஆதி | - தியாகராசர் |
| கிருதி | - அம்பா நின்னு | - ஆதி | - தியாகராசர் |
| கிருதி | - நாதசுதாரசம் | - ரூபகம் | - தியாகராசர் |

இசை ஆர இறுவெட்டின் ஊடாக ஆரபி இராக அறிமுகத்தினையும் சில உருப்படிகளையும்பயிலலாம்

வந்தனதாரணீ ஸ்வாமபதகள்



"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANA[illegible]AH
RETIRED VICE PRINCIPAL
ADI[illegible]APATHAM ROAD
KOKUVIL WEST



ISBN 978-955-23-0019-6

9 789552 300196 >